www.tamilarangam.net

THAYAGAM

75¢

8 . 7 . 94

# தாயகம்

உண்மைத் தேடல்!

## புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார்

பி.பி.சி நிருபர் மூலமாக
புலிகளுக்கு சந்திரிகா செய்தி

## வடக்கு கிழக்கு இணைப்புக்கும் தயார்

இத்தாலியிலிருந்து
150 தமிழ் அகதிகள்
நாடு கடத்தல்

சுதந்திரக் கட்சியின் தேர்தல்
விஞ்ஞாபனத்தை
ஐ.தே.கட்சி திருடியதாக
குற்றச்சாட்டு

புலிகளுடன் அரசு
இரகசியப் பேச்சுவார்த்தை?

காமினி பொன்சேகா
சுதந்திரக் கட்சிக்கு மாறினார்

விமானம் மூலம் வந்து
தமிழ் கட்சிகள்
வேட்புமனுத்தாக்கல்

தொண்டமான் அரசுடன்!
அஷ்ரப் சுதந்திரக்கட்சியுடன்!

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்

SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தரத்தின் சின்னம்

## நிரு பிராண்ட்®

## *Niru Brand*®

**நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்**
*Niru Brand*® **தயாரிப்புகளே.**

## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம்
பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா?
என்பதை உறுதிப்படுத்துங்கள்**

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு
எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435




# புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார்

## சந்திரிகா பி.பி.சி நிருபர் மூலம் புலிகளுக்கு செய்தி தெரிவிப்பு

### வடக்கு கிழக்கு இணைப்புக்கும் தயார்

பாராளுமன்றத் தேர்தலில் தாங்கள் தெரிவு செய்யப்பட்டால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. தேர்தலில் வெற்றி பெறும் பட்சத்தில் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக சந்திரிகா தெரிவித்துள்ளார். பி.பி.சியின் நிருபரான வசந்தா ராஜாவின் மூலமாக தனது கருத்துக்களை சந்திரிகா புலிகளுக்கு தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. எதிர்காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் என்ன வகையான தீர்வு வரும் என்பது பற்றி பி.பி.சி நிருபருடன் சந்திரிகா பேசிபோது புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்ததாகவும் தேவையேற்படின் மாகாணங்களின் எல்லைகளை மாற்றியமைத்து தமிழ் மாநிலம் அமைக்க தயாராக இருப்பதாகவும் தற்போதைய மாகாண சபை முறையை மாற்றி புது அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டு வரவிருப்பதாகவும் கூறியதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னதாக புலிகளின் கொலைப்பட்டியலில் தனது பெயர் இருக்கிறதா என்பது குறித்து அறியும்படியும் பி.பி.சி நிருபரைக் கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. பி.பி.சி நிருபர் புலிகளைச் சந்தித்த போது வடமாகாணத்தை கிழக்கில் உள்ள தமிழ் பகுதிகளுக்கு அகலமாக்கும் யோசனையை தாம் ஏற்றுக் கொள்வதாக பாலசிங்கம் தெரிவித்ததாகவும் புலிகளின் கொலைப்பட்டியலில் சந்திரிகா இல்லை என்று உறுதி கூறியதாகவும் விஜயகுமாரதுங்க போன்றே சந்திரிகாவையும் நம்புவதாக கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தம் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஐதே.க திருடியதாக சு.க குற்றச்சாட்டு

தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை அரசு திருடிக் கொண்டுள்ளதாக சுதந்திரக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. தாங்கள் வெளியிட இருந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை அப்படியே பிரதிபண்ணி அவற்றை மக்களிடமிருந்து கிடைத்த ஆலோசனைகள் என்ற பெயரில் அரசு வெளியிட்டதாக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தர்மசிறி சேனநாயக்க தெரிவித்திருக்கிறார். தங்கள் கட்சி உறுப்பினர் மூலமாகவே அது ஐ.தே.கட்சியின் கைக்கு கிடைத்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த வார அரசு சார்புப் பத்திரிகைகளில் ஜனாதிபதி முறையை ஒழித்தல், செனட் சபையை உருவாக்கல், ஊழலுக்கு எதிரான நிரந்தர விசாரணைக் குழுவை உருவாக்கல் போன்ற யோசனைகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் போது இந்த யோசனைகளை அரசு கருத்துக்கு எடுத்துக் கொள்ளும் என்று சண்டே ஒப்சேர்வர் தெரிவித்திருந்தது.

ஆனால் சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை உருவாக்க கடந்த இரண்டு மாதமாக உழைத்த 12 பேர் கொண்ட குழுவின் தலைவரான ஜி.எல். பீரிஸ் இந்த தகவல் குறித்து அதிர்ச்சி தெரிவித்திருக்கிறார்.

சொல்லுக்கு சொல், பந்திக்கு பந்தி தங்களின் ஆலோசனைகள் பிரதி பண்ணப்பட்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

# ஒரு கோடி பேர் வாக்களிப்பு

தேர்தலில் 2 மாவட்டங்களில் இருந்தும் ஒரு கோடிக்கு மேற்பட்டோர் வாக்களிப்பர். அகதிமுகாம்களில் உள்ளவர்களும் வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களில் மேலதிக பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். சுமார் பத்தாயிரம் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும்.

# இத்தாலியிலிருந்து 150 தமிழ் அகதிகள் நாடு கடத்தல்

இத்தாலியில் தஞ்சம் புகுந்த 150 இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை தென் இத்தாலிய நகரமான லொக்றிப் பகுதியில் இரவு நேரம் கரையிறங்கிய இவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். ஜேர்மனிக்கு செல்லவிருந்த இந்த அகதிகள் ரஷ்யக் கப்பல் ஒன்றின் உதவியுடன் கருங்கடல் பகுதியிலிருந்து புறப்பட்டு சிறுபடகுகளில் விடப்பட்டு இத்தாலி வந்தடைந்தனர். இருபது முப்பது வயதுடைய இவர்கள் சுமார் நான்காயிரம் டொலர்கள் கொடுத்து இந்த பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விமானம் மூலம் வந்து தெல்லிப்பளையில் தமிழ் கட்சிகள் வேட்பு மனுத்தாக்கல்

## வடக்கில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டி

மூன்று தமிழ் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரசும் இந்த வெள்ளிக்கிழமை வடபகுதியில் தேர்தலில் பங்கு பற்றுவதற்காக நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.பி.டி.பி மற்றும் டெலோ, புளொட், ஈரோஸ் கூட்டணியாகிய தமிழர் ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய கட்சிகள் விமானம் மூலம் தெல்லிப்பளை சென்று அங்கு தமது நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்தன. ஈ.பி.ஆர்.எல்.எப் வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிடுகிறது. டெலோ, புளொட், ஈரோஸ் கூட்டணியில் வன்னியில் புளொட், டெலோவும் யாழ்ப்பாணத்தில் ஈரோசும் முன்னணி வேட்பாளர்களை நிறுத்தும்.

## கூட்டணியின் வழக்கு திங்கள் விசாரணை

இதற்குள் கொழும்பில் கூட்டணி இந்த தேர்தல் நடத்தப்படுவதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த மனு மீதான விசாரணை திங்கட்கிழமை நடைபெறும். வடக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதால் பலர் தங்கள் வாக்குரிமைகளைப் பயன்படுத்த முடியாது போய் விடும் என்பதே இவர்களின் வாதமாகும். ஆறுலட்சம் வாக்காளர்களில் ஆறுயிரம் பேர் மட்டுமே வாக்களிக்கக்கூடிய நிலையில் உள்ளன. இவ்வாறு தேர்தல் நிறுத்தப்படும் பட்சத்தில் பெரும் குழப்ப நிலை ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

## தேர்தலைக் குழப்ப புலிகள் முயற்சி

புலிகள் தேர்தலைக் குழப்பப் போவதாக அறிவித்த போதிலும் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்திருந்தார். தேர்தல் சம்பந்தமான மாநாடு ஒன்றுக்கு அழைக்கப்பட்ட யாழ். அரசாங்க அதிபரை கொழும்பு செல்ல புலிகள் அனுமதிக்கவில்லை.

## புலிகளுடன் அரசு இரகசியப் பேச்சுவார்த்தை

ஆனால் வடக்கில் தேர்தல நடத்துவதற்காக புலிகளுடன் மறைமுகமான பேச்சுவார்த்தைகளை அரசு நடத்துவதாக ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது. அரசின் தேர்தல் பிரசாரத்திற்கு பொறுப்பான முக்கியஸ்தர் ஒருவர் கூறிய கருத்துக்களை மேற்கோள் காட்டி 'புலிகள் இந்த தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களை நிறுத்தலாம் என்றும் வடக்கில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட முடியும் என்றும் மூன்றும் பகுதி மூலமாக புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பக் கட்டத்தில் நடைபெறுவதாகவும் இனிமேல் இராணுவத் தீர்வு எதுவும் இல்லை, அரசியல் தீர்வு மட்டுமே உண்டு என்றும் தெரிவித்ததாக ஐலண்ட் கூறியுள்ளது. வடமராட்சித் தாக்குதலின் பின் எந்த தாக்குதல் மூலமும் வடக்கை கைப்பற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அந்த முக்கியஸ்தர் ஐலண்டுக்கு தெரிவித்தார்.

சட்டச் சிக்கல்களை தவிர்க்க தமிழ் அமைப்புகள் சேர்ந்து தனியான பட்டியல் ஒன்றை தாக்கல் செய்தால் போட்டியின்றி குழுக்கள் தெரிவு செய்யப்பட வாய்ப்புண்டு என்று பிரதமர் கூறியிருந்ததாகவும் ஆனால் இந்த ஐக்கிய முயற்சி கைகூடாது போனதாகவும் கூறப்படுகிறது. நாடு முழுவதும் முழுமையான தேர்தல் நடத்தப்படாமல் தேசியப் பட்டியல் பூர்த்தி செய்யப்பட்டு உறுப்பினர்கள் நியமிக்கப்பட முடியாது என்ற அரசியலமைப்பு விதியே இந்த இழுபறிக்கு காரணமாகும்.

## வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் வாக்கை நம்பி மு.கா

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் விரட்டப்பட்ட நிலையிலும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பு மனுத் தாக்கல் செய்ததற்கான காரணங்களும் உண்டு. தற்போது புலிகளால் விரட்டப்பட்டு அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகள் யாழ்ப்பாணத் தேர்தலில் வாக்களிக்க முடியும். புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள தமிழர்கள் வாக்களிக்க முடியாத நிலையில் பெரும்பான்மை ஆசனங்களை இந்த முஸ்லிம் வாக்குகளின் உதவியுடன் கைப்பற்ற முடியும் என்று முஸ்லிம் காங்கிரஸ் கருதுகிறது. இது தமிழ் குழுக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் வாக்குகள் பிரிந்த நிலையில் முஸ்லிம் காங்கிரசுக்கு நிலைமை சாதகமாக இருப்பதாகவே கருதப்படுகிறது.

## கொழும்பில் காங்கிரஸ் சுயேச்சைக்குழுவாகப் போட்டி

குமார் பொன்னம்பலம் தலைமையிலான காங்கிரஸ் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் போட்டியிடுகிறது. அங்கும் சுயேச்சைக் குழுவாகவே போட்டியிடுகிறது. மற்ற இடங்களில் கூட்டணியை ஆதரிக்கும் என்று கூறப்படுகிறது. இவரது பட்டியலில் காலம் சென்ற யாழ். பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் மனைவியும் இடம் பெற்றுள்ளார் என்றும் இவரது பெயரை கூட்டணி பிரேரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. ■

## தொடர்ந்தும் அவசர நிலை

தேர்தல் காலங்களில் தொடர்ந்தும் அவசர நிலை அமுலில் இருக்கும். தேர்தலின் போது அவசர நிலை நீக்கப்படும் என்று முன்பு செய்திகள் வெளிவந்த போதும் அது தவறு என்ற பிரதமர் பின்பு தெரிவித்திருக்கிறார். இதற்கு வழமை போல வடக்கு கிழக்கு பிரச்சனையையே காரணமாகக் கூறியுள்ளார்.

முதலில் சட்ட மா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அவசரநிலையை பேண விரும்பவில்லை என்று தெரிவித்திருந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாதை மாறிய தொண்டாவும் அஷ்ரப்பும்

## சுதந்திரக் கட்சிக் கூட்டணியுடன் மு.கா ஐ.தே.கவுடன் தொழிலாளர் காங்கிரஸ்

சில வாரங்களுக்கு முன்னர் தமிழர் பிரச்சனைக்கு தீர்வாக திட்டம் ஒன்றை முன்வைத்து பிரபாகரன், ஜனாதிபதி உட்பட்ட அனைவரது ஆதரவையும் நாடி நின்ற தொண்டமானின் தொழிலாளர் காங்கிரசும் அஷ்ரப்பின் முஸ்லிம் காங்கிரசும் தேர்தலில் வெவ்வேறு பாதைகளைத் தேர்ந்தெடுத்துள்ளன. தொண்டமான் ஜனாதிபதியுடனான வேறுபாடுகளை மறந்து ஐ.தே.கட்சிக்கே ஆதரவு தெரிவித்திருக்கிறார். கொழும்பிலும் நுவரெலியா உட்பட்ட மலையக மாவட்டங்களிலும் இவரது கட்சிக்காக 14 இடங்கள் ஒதுக்கப்பட்டதுடன் தேசிய பட்டியலில் மூன்று இடங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தொண்டமான் தேசியப் பட்டியல் மூலமாகவே தெரிவு செய்யப்படுவார். மீண்டும் ஐ.தே.கட்சியை தனது மக்களின் வாக்குப் பலத்தால் ஆட்சிக்கட்டில் ஏற்றுவேன் என்று தொண்டா சூளுரைத்துள்ளார்.

### ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு

பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதியும் தானும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தங்களுக்குள் இருந்த நல்ல புரிந்துணர்வை தீய சக்திகள் வேறுபடச் செய்தன என்று கூறிய அவர் எதிர்க்கட்சி வரும் என்ற எதிர்பார்ப்புகள் பற்றி கேட்ட போது தனது 55 வருட அரசியல் வாழ்வில் கணிப்புகள் தவறியதில்லை என்றும் தமது வாக்குப் பலத்தால் ஆட்சியை நிர்ணயிக்கும் சக்தி தமக்கு உண்டு என்றும் தெரிவித்தார்.

### செல்லச்சாமியின் செல்வாக்கை முறியடிக்கும் நோக்கம்

ஆனால் ஐ.தே.கட்சியுடன் உறவை ஏற்படுத்துவதன் மூலம் செல்லச்சாமியின் செல்வாக்கை குறைப்பதே இவரது நோக்கம் என்று கருதப்படுகிறது. செல்லச்சாமிக்கு ஐ.தே.க ஆதரவு வழங்கினால் தமது உறவு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டி வரும் என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் செல்லசாமியை தேர்தலில் நிறுத்துவதா? இல்லையா? என்பது பற்றி ஐ.தே.கட்சி இன்னமும் பகிரங்கமாக முடிவு தெரிவிக்கவில்லை. ஆனால் இறுதி நேரத்தில் அவர் கைவிடப்படலாம் என்றே கருதப்படுகிறது. இதற்குள் அரச சார்பு பத்திரிகைகளில் செல்லசாமி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவார் என்று செய்தி வெளியிடப்பட்டது. இதனால் ஆத்திரமுற்ற செல்லசாமி இது குறித்து லேக் ஹவுஸ் தலைவருடன் தொடர்பு கொண்டதாகவும் அவர் இல்லாததால் உடனடியாக மறுப்பு தெரிவித்ததாகவும் கொழும்பு செய்திகள் கூறுகின்றன.

### தமிழ் வர்த்தகர்கள் தனியாக போட்டியிடுவதில் நாட்டம்

சிறிது காலத்திற்கு முன்பாக செல்லச்சாமி சிங்கள பேரினவாதக் கட்சியான ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து தமிழர்களுக்கு துரோகமிழைத்து விட்டதாக மலையகத்தில் பிரசாரம் செய்த தொண்டமான் தற்போது ஐ.தே.கட்சியுடன் சேர்ந்திருப்பது குறித்து பலர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தொழிலாளர் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதில் கொழும்பில் உள்ள இந்திய தமிழ் வர்த்தகர்களும் வீரகேசரி நிறுவனத்தினரும் கேட்டுக் கொண்டதாக கூறப்படுகிறது. தேர்தலில் சந்திரிகா வெல்லக் கூடும் என்பதால் தனித்துப் போட்டியிட்டால் பின்பு ஆதரவை மாற்றிக் கொள்ளலாம் என்பதே அவர்களின் கருத்தாக இருந்தது. ஆனால் தொண்டமான் அரசுடன் தொடர்ந்தும் இருப்பதையே விரும்புகிறார்.

தனக்கு எதிராக சந்திரசேகரன் செல்வாக்குப் பெறுவதைத் தவிர்க்க அவரையும் மீண்டும் தொழிலாளர் காங்கிரசுக்குள் சேர்க்க முயன்ற போதும் அது கைகூடவில்லை. இப்போது சந்திரசேகரன் சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

### சுதந்திரக்கட்சியுடன் முஸ்லிம் காங்கிரஸ்

ஆனால் அஷ்ரப்போ அரசுடனான தனது உறவை துண்டித்துக் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்துள்ளார். கிழக்கில் உள்ள மாவட்டத்தில் உள்ள மாவட்டங்களில் தனித்தும் மற்ற இடங்களில் இணைந்தும் போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் உத்தேசித்துள்ளது. வடக்கில் யாழ், வன்னி மாவட்டங்களிலும் போட்டியிடுகிறது. வடக்கில் டாக்டர் இல்யாஸ் தலைமை வேட்பாளராக இருப்பார். முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும் இடங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி போட்டியிட்டால் அங்கு முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்த மாட்டாது. முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் இடம் பெறும் சுதந்திரக் கட்சியை சேர்ந்த முஸ்லிம் வேட்பாளர்கள் முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்திலேயே போட்டியிடுவார்கள். மற்ற இடங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சின்னத்தின் கீழ் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் போட்டியிடுவர்.

## இலங்கைப் பணிப்பெண்ணுக்கு அமெரிக்காவில் விருது

சவுதி இளவரசர் ஒருவரின் பணியாட்களாக கடமையாற்றி துன்பங்களுக்கு ஆளாகி இறுதியில் அமெரிக்காவில் தப்பி புகலிடம் கோரிய இலங்கைப் பெண்ணை அமெரிக்க தேசிய பெண்கள் அமைப்பு கௌரவித்துள்ளது. சிறியானி மரியன் பெர்னாண்டோ என்ற இலங்கைப் பெண்ணும் இன்னொரு பிலிப்பைன் பெண்ணும் அவர்களின் துணிச்சலுக்காக விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

உலகெங்கும் பெண்களைக் கடத்திச் சென்று அடிமைகளாக நடத்தும் செயன்முறைக்கு எதிரான எதிர்ப்பைத் தெரிவித்தற்காக இவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காமினி பொன்சேகா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்

உபசபாநாயகரான காமினி பொன்சேகா ஐ.தே.கட்சியிலிருந்து விலகியுள்ளார். நடிகரும் இயக்குனருமான இவர் தங்களுடன் இணையவுள்ளார் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்திருக்கிறது.

, கடந்த வாரங்களில் சுதந்திரக் கட்சியிலிருந்து பலர் ஐ.தே.கட்சிக்கு மாறிய போதும்ஐ.தே.கட்சியிலிருந்து சுதந்திரக் கட்சிக்கு மாறுவது தற்போது ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது.

ஏற்கனவே ஐ.தே. கட்சியுடனான காமினி பொன்சேகாவின் உறவுகள் சீர்கெட்ட நிலையிலேயே உள்ளன. தன்னை பிரேமதாசாவே அரசியலுள் நுழைத்ததாக கூறும் காமினி பொன்சேகா அரசாங்க உயர் மட்டங்களில் நடைபெறும் ஊழல்கள் பற்றி விசாரிக்க குழு ஒன்று நியமிக்கும்படி கோரி வருகிறார். ஆயினும் அரசு இவரது கோரிக்கையை நிராகரித்து வந்துள்ளது. கடந்த தென்மாகாணத் தேர்தலிலும் இவர் பிரசாரங்களில் கலந்து கொள்ளவில்லை.

லஞ்சமும் ஊழலும் மலிந்த நிலையில் அதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்காததனாலேயே தான் விலகுவதற்கு முடிவு செய்ததாகவும் முக்கிய மூன்று அமைச்சர்கள், முன்னாள் சபாநாயகர் ஆகியோருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்ததாகவும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குள் ஐ.தே.கட்சியின் பெண் உறுப்பினரான சிறியானி டானியல் சுதந்திரக் கட்சியில் சேர்ந்திருக்கிறார் என்று சுதந்திரக் கட்சி தெரிவித்தது.

# வெற்றி எமக்கே நிச்சயம் ரணிலும் சந்திரிகாவும் நம்பிக்கை

அடுத்த தேர்தலில் தங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று சந்திரிகா குமாரணதுங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார். பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசிய அவர் 'ஐ.தே. கட்சி இயலாமையின் உச்சக்கட்டத்தில் தங்கள் வழமையான வன்முறைகளை கையாளக் கூடும்' என்றும் அச்சம் தெரிவித்திருந்தார். ஆயினும் தேர்தலின் போது இவ்வாறான வன்முறைகளை எதிர்கொள்ள தமது கட்சி தயாராக உள்ளதாகவும் நேர்மையான தேர்தல் நடத்தப்படுவதை பொதுமக்களே உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்த அவர், கடந்த கால அனுபவங்களின்படி வெளிநாட்டு பார்வையாளர்கள் அழைக்கப்படுவது பயன் அளிக்காது என்றும் மற்ற நாடுகளில் அது பயன்படக் கூடும், ஆனால் இலங்கையில் பயனளிக்காது என்றும் தெரிவித்தார்.

ஆனால் பிரதமரோ தனது கட்சியே வெற்றி பெறும் என்று கூறியுள்ளார். எதிர்க்கட்சி எதிர்மறையான விடயங்களையே கூறி போட்டியிடுவதால் வெற்றி தமக்கே என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 'அவர்கள் இந்த அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரானவர்கள். ஆனால் அதை இப்போது ஏற்றுக் கொள்கிறார்கள். எனவே இவ்வளவு காலமும் தாங்கள் தவறாக இருந்ததை ஏற்றுக் கொள்கிறார்களா?' என்று அவர் கேள்வி எழுப்பினார். ஐ.தே. கட்சியினால் மட்டுமே மேலான வாழ்வைத் தரமுடியும் என்று கூறினார் அவர். '77 ல் மாற்றத்தை கொண்டு வருவதாக கூறினோம். 89ல் அதை செய்தோம். இப்போதும் மாற்றத்தையே கொண்டு வரப்போகிறோம்' என்றும் அவர் தெரிவித்தார்.

# தேர்தலில் விதவைகள்

## சந்திரிகா, ஹேமா, சிறிமானி போட்டியில்..

வருகின்ற பொதுத்தேர்தல்களில் அரசியல் விதவைகள் பலர் போட்டியிடுகின்றனர். நடிகர் விஜயகுமாரணதுங்கவின் மனைவியான சந்திரிகா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடுகின்ற அதே நேரம் பிரேமதாசாவின் மனைவியும் லலித் அத்துலத்முதலியின் மனைவியும் கொழும்பில் போட்டியிடுகிறார்கள். தாங்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதாக அவர்கள் இந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளனர்.

தனது கணவரின் மரணம் குறித்து அரசு சரியாக விசாரணை செய்யாததால் தான் போட்டியிடமாட்டேன் என்று மறுத்து வந்த ஹேமா பிரேமதாசா தற்போது எந்த விளக்கமும் இன்றி, கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டியிட நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார். இவருக்கு எதிராக லலித் அத்துலத்முதலியின் மனைவி சிறிமானி போட்டியிடுகின்றார். பொதுஜன முன்னணியின் சார்பில் இவர் போட்டியிடுகிறார்.

தனது கணவனின் கொள்கைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், அவரது கொலை குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும் முன்பு ஹேமா நிபந்தனை விதித்திருந்தார். இந்த நிபந்தனைகளுக்கு ஜனாதிபதி இணங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. பிரேமதாசாவின் மகன் சஜித் ஐ.தே.க செயற்குழுவில் நியமனத்தை ஏற்றுக் கொண்டதுடன் அம்பாந்தோட்டையில் வேட்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன.

உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

ஜுலை 24 ஞாயிறு மாலை 3 மணிக்கு
Fairview Library, 35 Fairview Mall Dr
(Don Mills/Sheppard)இல் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:
கண்ணதாசன் 269 8585 தங்கராஜா 299 1130



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனப்பிரச்சனை தீரமுன் அனுப்பப்படும் சுவிஸ் அகதிகள்

இலங்கையில் இனப்பிரச்சனை தீருவதற்கான நம்பிக்கைகள் ஏற்படாத நிலையிலும், இந்த யுத்தத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள சுவிஸில் தஞ்சம் புகுந்த தமிழர்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். கடந்த தை மாதம் இலங்கை அரசும் சுவிஸ் அரசும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி இவர்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இந்த வருட இறுதிக்குள் 300 பேர் கொழும்புக்கு வர உள்ளதாகவும் அடுத்த வருடமும் இதே அளவு தொகையினர் வரவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜூன் மாத நடுப்பகுதியில் நால்வர் திருப்பி அனுப்பப்பட்டனர். இதில் இருவர் நேரடியாகவே விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் சென்றார்கள். மற்ற இருவரும் கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் மண்டபத்தில் தங்கிச் சென்றனர். நுகேகொடையில் உள்ள ஒன்பது படுக்கை அறைகளைக் கொண்ட வீடு ஒன்று சுவிஸில் இருந்து நாடு கடத்தப்படுபவர்கள் வந்து தங்கிச் செல்வதற்காக செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த அனுப்பப்பட உள்ள குழு எப்போது வரும் என்று தங்களுக்குத் தெரியாது என்கின்றனர் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள்.

சுமார் 25 ஆயிரம் இலங்கையர்கள் சுவிஸில் தற்போது உள்ளனர். இதில் பாதிப் பேருக்கு மேல் அடுத்த சில வருடங்களுக்குள் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். இவர்கள் திருப்பி அனுப்பப்படுவதை ஐ.நா அகதிகள் தூதுவரகம் கண்காணிக்கும். ஆயினும் இந்த விவகாரத்தில் தாங்கள் எதுவும் செய்வதற்கில்லை என்கின்றது இந்த அகதிகள் தூதுவரக அமைப்பு.

வருகின்ற அகதிகள் பிரச்சனைகளுக்குள்ளாகினால் மட்டுமே தங்களுடன் செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் தொடர்பு கொள்ளும் என்கின்றது இந்த அமைப்பு.

சுவிஸ் அரசு 'பிந்தி வந்தவர்கள் முன்னுக்கு அனுப்பும்' கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. ஆயினும் இதை அகதிகளும் அகதிகளுக்கு உதவி செய்வதற்கான சுவிஸ் அமைப்பும் (ஓசார்) மற்றும் ஐரோப்பிய தொண்டர் நிறுவனங்களும் கண்டித்து வருகின்றன.

ஓசார் அமைப்பின் செயலாளர் நாயகமான மார்க்குஸ் லூஸலி சமீபத்தில் இலங்கை சென்ற சுவிஸ் செயற்பாட்டாளர்களில் ஒருவர். அகதிகள் திருப்பி அனுப்பப்படக் கூடாது என்று தாங்கள் கோருவதன் காரணம் தொடர்ந்தும் யுத்தம் நடப்பதே என்கிறார் அவர். 'பிரச்சனையைத் தீர்க்க எந்த அரசியல் தீர்வும் தற்போதைக்கு இல்லை. எப்போது புலிகள் தாக்குவார்கள், எப்போ இராணுவம் திருப்பித் தாக்கும் என்பது சரியாகத் தெரியாது' என்கிறார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய எதிர்க்கட்சி உறுப்பினரான மங்கள முனசிங்க இந்த அகதிகள் அனுப்பப்படுவதை பாதுகாப்பு காரணங்களை விட பொருளாதாரக் காரணங்களுக்காக எதிர்க்க வேண்டும் என்கிறார். இந்த அகதிகளில் பலர் பெருமளவு பணத்தைச் செலவிட்டு இந்த யுத்தத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள ஐரோப்பா செல்கிறார்கள், ஆனால் திருப்பி அனுப்பப்படும் போது இவர்களுக்கு வெறுமனே இருநூறு டொலர்களே கொடுக்கப்படுகின்றன, தாய் நாட்டில் எந்த வித தொழிலும் பெற முடியாத நிலையில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற போதிருந்த நிலையை விட மோசமான நிலையிலேயே திரும்புகின்றனர் என்று அவர் வாதிடுகிறார். இந்த கருத்தை உள்நாட்டு, வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் ஆமோதிக்கின்றன.

சுவிஸ் தொண்டர் நிறுவனங்கள் திருப்பி அனுப்பப்படும் அகதிகளுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் தேவைப்படும் காலம் வரை செஞ்சிலுவைச் சங்க நிலையத்தில் தங்க அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டு வருகின்றன. அத்துடன் திருப்பி அனுப்பப்படும் விடயத்தில் செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா. அகதிகள் அமைப்பு, உள்ளூர் அகதிகள் நிறுவனங்களும் பங்கெடுக்க வழிவகுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகள் எல்லாம் சுவிஸில் வசிக்கும் எம்.நாதன் என்ற அகதிக்கு எந்த வித நம்பிக்கையையும் தரவில்லை. 'செய்யப்படுகின்ற விடயங்கள் நியாயமற்றவை. எங்கள் உயிருக்கு ஆபத்து என்பதால் தான் நாட்டை விட்டு வெளியேறினோம். எனவே எப்போது திரும்புவது பாதுகாப்பானது என்பதை நாம் மட்டுமே தீர்மானிக்க முடியும்' என்கிறார் அவர்.

சுவிஸ் நாட்டைப் பின்பற்றி மற்ற ஐரோப்பிய நாடுகளும் அகதிகளைத் திருப்பி அனுப்பும் என்றே தொண்டர் நிறுவனங்கள் கவலை கொள்கின்றன. ஐரோப்பிய ஒருங்கிணைவின் பின்னர் சகல ஐரோப்பிய நாடுகளும் அகதிகள் குறித்து பொதுவான வெளியேற்றத் திட்டம் ஒன்றைக் கொண்டு வரவும் கூடும்.

சுவிசிலிருந்து திருப்பி அனுப்பப்படும் அகதிகளை விமான நிலையத்தில் இரகசியப் பொலிசார் தடுத்து வைத்து விசாரிப்பது பற்றி சுவிஸ் தூதுவரகம் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. கோப்பாய் வாலிபர் ஒருவரை நீண்ட நேரம் விசாரித்த பின்னர் செஞ்சிலுவைச் சங்க அதிகாரியின் நடவடிக்கையின் பின்னர் விடுவித்தனர்.

## விஜேவீரவின் குடும்பத்திற்கு ஐரோப்பாவில் தஞ்சம்

திருமலை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விஜேவீரவின் மனைவி, பிள்ளைகளுக்கு தஞ்சம் வழங்க இரண்டு ஐரோப்பிய நாடுகள் முன்வந்துள்ளதாக ஜலண்ட் தெரிவித்திருக்கிறது. விஜேவீரவின் மனைவியும் நான்கு பிள்ளைகளும் ஐரோப்பிய நாடொன்றினால் ஏற்றுக் கொள்ளப்படலாம். முன்பு இவர்களை ஏற்றுக் கொள்ளும்படி இங்கிலாந்தை இலங்கை அரசு கேட்டிருந்தது. ஆனால் இங்கிலாந்தின் வெளிவிவகார அமைச்சு இந்த எண்ணத்தை வரவேற்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சரத் பவாருடன் பம்பாய் ஆணையாளர் மோதல்

பம்பாயின் உதவி மாநகர ஆணையாளரும் மகாராஷ்டிர முதல்வர் சரத் பவாரும் மோதிக் கொண்டுள்ளனர். சரத் பவாருக்கும் பம்பாயில் குண்டுவெடிப்புகளுக்கு பொறுப்பான இப்ராகிம் தாவுத்துக்கும் தொடர்பு உண்டு என்று மாநகர ஆணையாளர் குற்றம் சாட்டியுள்ளார். ஆணையாளர் காய்ரினுர் பம்பாயில் உள்ள சேரிப்புறங்களை இடிப்பதன் மூலம் 'டெமோலிஷன் மனிதன்' என்ற பட்டம் பெற்றவர். பம்பாயில் உள்ள பாதாள உலகின் குற்றக் குழுக்களுக்கும் பவாருக்கும் இடையில் தொடர்புகள் உண்டு என்று அவர் குற்றம் சாட்டுகிருர். பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் 'பவார் ஊழலின், நேர்மையீனத்தின், சாதாரண மக்கள் மீதான ஒடுக்குமுறையின் சின்னம். உயிரோடு எரிக்கப்பட வேண்டிய ஒருவர், தெருவில் நிர்வாணமாக உடைகள் களையப்பட்டு கொண்டு செல்லப்பட வேண்டிய ஒருவர் முதல்வராக வந்திருக்கிருர்' என்று காய்ரினுர் குற்றம் சாட்டினுர். தாவூத்துடன் நெருங்கிய தொடர்பு பவாருக்கு உண்டு என்கிருர் அவர்.

தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்த பவார், காய்ரினுரைப் பதவி நீக்கினுர். ஆயினும் நரசிம்மராவுக்கு ஒரு காலத்தில் சிம்மசொப்பனமாக இருந்த பவாரின் பெருமை தற்போது குலைந்துள்ளது. வெறும் மறுப்புகளுடனேயே பவார் நிறுத்திக் கொண்டு மேலும் கருத்துக் கூற மறுத்து விட்டார்.

தாவூத்திற்கு சொந்தமானது என்று கூறப்படும் பல சொத்துக்களை இந்திய மத்திய பொலிஸ் அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டது. பம்பாயின் மையப் பகுதியில் உள்ள பல கட்டடங்களும் நிலங்களும் தாவூத்திற்கு சொந்தமாயுள்ளன. அவற்றின் பெறுமதி நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களாகும்.

# யுத்தத்தில் காலிழந்தவர்களுக்கு இந்திய டாக்டரின் செயற்கைக் கால்கள்

இலங்கையின் யுத்தத்தில் அங்கங்களை இழந்தவர்கள் பலர் இந்திய டாக்டர் ஒருவரின் முயற்சியினுல் செயற்கை அவயவங்களைப் பயன்படுத்தி நடமாடி வருகிருர்கள். இலங்கை மட்டுமன்றி, கம்போடியா, ஆப்கானிஸ்தான், சோமாலியா, எல் சலவடோர், அங்கோலா, ஹொண்டுராஸ் போன்ற இடங்களிலும் இவர் தயாரிக்கும் அவயவங்கள் பயன்பட்டு வருகின்றன.

டாக்டர் பி.கே.சேத்தியே இந்த ஜெய்ப்பூர் அவயவங்களுக்கு பொறுப்பானவர். இலகுவாகப் பொருத்தக் கூடியதும் மலிவானதுமான அவயவங்களை இவர் தயாரித்து வருகிருர். இலங்கையில் மட்டும் நான்கு ஜெய்ப்பூர் அவயவத் தொழிற்சாலைகள் உள்ளன. மேற்கு நாடுகளில் பயன்படுத்தப்பட்ட முறைகளை பிரதிபண்ணி தயாரிக்கப்பட்ட அவயவங்கள் ஆரம்ப காலத்தில் சிக்கல்களைக் கொடுத்தன. இதனுல் பலர் தொடர்ந்தும் தங்கள் அவயங்களை பயன்படுத்தாது விட்டனர். மேற்கு நாடுகளில் சப்பாத்து அணிந்து, கதிரையில் இருக்கும் பாரம்பரியம் கொண்டவர்களுக்கு அமைக்கப்பட்ட அவயவங்கள் வெறும் காலோடு நிலத்தில் இருக்கும் பாரம்பரியம் கொண்ட நாடுகளுக்கு பயன்பட முடியவில்லை என்கிருர் சேத்தி.

உள்ளூர் பணியாளர்களின் உதவியுடன் இலகுவமான, வளையக் கூடிய கால்களை 1978ல் தயாரித்தார். கிராமத்துப் பணியாளர்கள் குறைந்த செலவில் மண் மூலம் கால் உருவில் அச்சு ஒன்றைத் தயாரித்தனர். ஆரம்ப காலங்களில் மரமும் றப்பரும் ஒன்ருக வெறும் தகடுகளாக ஒட்டப்பட்டு பின்னர் இறுக்கமான றப்பரால் மூடப்பட்டன.

தற்போது பொலியூரேத்தின் அச்சில் வார்க்கப்பட்டு தயாரிக்கப படுகின்றன. இது கிட்டத்தட்ட உண்மையான கால் போன்றது. பெண்கள் இதன் நகங்களை வண்ணம் பூசி அழகு பார்ப்பதுடன் அதற்கு ஆபரணங்களும் செய்கின்றனர். கல் நிறைந்த பகுதிகளில் எந்த வேதனையும் இன்றி நாள் பூராவும் நடமாட முடியும் என்று பலர் கூறுகின்றனர். இதன் மூலம் இவர்கள் கிராமங்களிலேயே தங்க முடியும். இல்லாவிடில் நகரப் பகுதிகளுக்கு சென்று அரச உதவிக்கு கெஞ்ச வேண்டியிருக்கும் என்கிருர் சேத்தி.

சுமார் பத்தாயிரம் பேர் இவரது தயாரிப்புகளால் பயனடைந்துள்ளனர். செயற்கைக் கால்கள் அணிந்தவர்கள் சைக்கிள் ஓடவும் பாரம் ஏற்றவும் மரங்களில் ஏறவும் முடியும்.

# மலேசிய தமிழ் பத்திரிகைக்கு தடை

மலேசியாவில் தமிழ் பத்திரிகை ஒன்று தடை செய்யப்பட்டிருக்கிறது. இரு வார இதழான தூதன் சமீபத்தில் மலேசிய இந்திய காங்கிரஸ் தலைவர் டத்தோ சாமிவேலு பற்றி கடுமையான கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. இதனுல் 22ம் திகதி ஜூன் மாதம் வெளிவர இருந்த இதழ் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்திய சமூகத்தினருக்கு வழங்கப்பட்ட டாக்ஸி அனுமதிப் பத்திரங்கள் ஐம்பது, தனியார் நிறுவனம் ஒன்றுக்கு திசை திருப்பப்பட்டதாக அந்தப் பத்திரிகை எழுதியிருந்தது. சமீப காலங்களாக மைக்கா டெலிக்கொம் பங்கு விற்பனை தொடர்பாக நடந்த ஊழல் பற்றி சாமிவேலுவின் நெருங்கிய சகாவான சுப்பிரமணியம் பாரத் மணியம் என்பவரின் பேட்டிகள் கடந்த மூன்று மாத காலமாக தூதன் பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்தது. இதையடுத்து உள்துறை அமைச்சு இந்த பத்திரிகையை தடை செய்தது. இதற்கு மலேசியாவின் ஜனநாயக செயற்பாட்டுக் கட்சி கடும் கண்டனம் தெரிவித்திருப்பதுடன் தடையை நீக்கும்படியும் கோரியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தலில் ஜே.வி.பி போட்டியிடுகிறது

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி போட்டியிட இருப்பதாக செய்திகள் கூறுகின்றன. தேசிய இரட்சணிய முன்னணி என்ற பெயரில் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் இந்தக்குழு போட்டியிடும் என்று ஜே.வி.பியின் செயலாளர் ஆரிய புளேகொட ரொய்ட்டர் நிருபருக்குத் தெரிவித்திருக்கிறார். தற்போது தேடப்பட்டு வருபவரான சோமவன்ச இன்னும் சில தினங்களில் இலங்கை திரும்புவார் என்றும் புளேகொட கூறினார். அமரசிங்க உட்பட்ட தங்கள் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது பற்றி தாங்கள் அடுத்த வாரம் பாதுகாப்பு அமைச்சுடன் ஆலோசிக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆனால் சோமவன்ச அமரசிங்க நாடு திரும்பினால் அவரை கைது செய்யப் போவதாக பொலிசார் தெரிவித்தனர். ஆனாலும் அமரசிங்க தேர்தலில் பங்கு கொள்வதற்கான அரச அனுமதியைப் பெற்றிருக்கக் கூடும் என்றும் சில நேரங்களில் அவருக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளிக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இருப்பினும் சோமவன்ச கடந்த புதன்கிழமை வந்து சேர்ந்ததாக கொழும்பு விமான நிலையத்தில் உள்ள பத்திரிகை படப்பிடிப்பாளர்கள் தெரிவித்திருந்தனர். ஆனால் அது வெறும் வதந்தி என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருந்தார். சோமவன்ச ஐரோப்பிய தலைநகர் ஒன்றில் தற்போது இருப்பதாகவும் தேர்தலில் பங்குபற்றுவது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதும் அவர் நாடு திரும்புவார் என்றும் பத்திரிகைகள் ஹேஸ்யம் தெரிவித்தன.

ஜே.வி.பியை தேர்தலில் பங்கு கொள்ள விடுவதில் அரசு அதிக அக்கறை செலுத்தலாம் என்றே நம்பப்படுகிறது. ஐ.தே.கட்சிக்கு எதிரான வாக்குகளைச் சிதறடிக்க, ஜே.வி.பியை அரசு பயன்படுத்தக் கூடும் என்றே கருதப்படுகிறது. சுதந்திரக் கட்சிக்கு ஆதரவுள்ள பகுதிகளில் ஜே.வி.பி போட்டியிடுவதன் மூலம் கணிசமான வாக்குகளைச் சிதறடிக்க முடியும் என்று ஐ.தே.க கருதுவதாக கூறப்படுகிறது.

# பெரும் கட்சிகள் வேட்பு மனுத்தாக்கல்

இந்த தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஐ.தே.கட்சி ஆறு மாவட்டங்களில் தாக்கல் செய்துள்ளது. கொழும்பில் மட்டும் இன்னமும் தாக்கல் செய்யவில்லை. சுதந்திரக் கட்சி ஒரு மாவட்டத்தில் மட்டுமே தாக்கல் செய்திருக்கிறது. வேட்பு மனுக்களுக்கான இறுதித் திகதி திங்கட் கிழமையாகும்.

# தலைகீழாய் பாருங்கள்

## தெருவில் கிடைத்த படத்துக்கு கோணங்கியின் கவிதை



மங்கித் தெரியும் மூப்பு
வந்து
முதுகில் தட்டும் போது
இளமையின் அழகில்
கீறல் விழுந்தது
கண்ணுக்கு முன்னே
கண்ணாடி மீது
மங்காது தெரியும்

எங்கிருந்துதான் காவப்பட்டனவோ
இந்த அழியாத தழும்புகள்?
துடைத்தெறிய துடித்தெழுந்தாலும்
ஊசுடம்....

அனுபவம் வந்ததோ
இல்லையோ

அழகு சுமக்கும்
சுவடுகள் மட்டும்

கடவுள் மேல்
சத்தியமாய்
பாருங்கள்
தலை கீழாய்


பாருங்கள் !
கடந்து வந்ததன் கர்வம்
மகுடம் தந்து விடுவதில்லை
நினைப்பு மட்டுமே கிரீடம்
கிடைத்ததென்னவோ....
பாருங்கள் தலைகீழாயே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது


பரீட்சித்துப் பாருங்கள்

Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றனவும் கிடைக்கும்.




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

# உலகமெலாம் தமிழோசை பரப்ப முயலும் தேமதுரம்

தேமதுரம் வீடியோ சஞ்சிகை வெளியாகியிருக்கிறது.... உலகெங்கும் தேமதுரத் தமிழோசை பரப்ப மட்டுமல்ல, உலகெங்குமுள்ள தமிழ் மக்களை கலாசாரப் பாலம் மூலம் ஒன்றிணைக்கவும். புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல, தமிழகத் தமிழர்கள் சென்ற இடங்களான சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுடன் ஒரு மானசீகத் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியில் தேமதுரம் ஈடுபட்டிருக்கிறது. லண்டனைத் தளமாகக் கொண்டு இந்த சஞ்சிகையை வெளியிடுவோர் கனடிய தேமதுரம் வானொலி தயாரிப்பாளர்களில் ஒருவரான ஞானேஸ்வரன். இலங்கை வானொலி, தொலைக்காட்சிகளில் பிரபலமான விக்னேஸ்வரனின் சகோதரரான திரு. ஞானேஸ்வரன் லண்டனில் தொலைக்காட்சி தயாரிப்பு பற்றி பயின்றவர். கனடாவிலும் விஷன் டி. வி மூலமாக ஆசிய கலாசார நிகழ்ச்சி ஒன்றை நடத்தியிருந்தவர்.

புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு தங்கள் தாய் நாட்டின் மீதான தொப்புள் கொடி உறவு மறைந்து போகக் கூடாது என்பதில் அக்கறை கொண்ட தேமதுரம் வானொலி தனது ஆண்டுவிழாவின் போது தமிழ் வானொலி முன்னோடிகளில் ஒருவரான கலாநிதி நடராசாவை கௌரவித்ததுடன் ஈழத்து திரைப்படமான பொன்மணியையும் திரையிட்டதிலிருந்து இவர்களது அக்கறையைப் புரிந்து கொள்ளலாம். தற்போது வீடியோ சஞ்சிகை மூலமாக தங்கள் பணியைத் தொடர விரும்பும் இவர்களின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதொன்று.

ஆரம்ப இதழில் வாழ்த்துச் செய்திகளில் பலர் நல்ல கருத்துக்களை தெரிவித்திருந்தனர். 'திருமணம் முடிப்பதற்கு முன்பாக தனது மகளுக்கு ஆண் நண்பர் இல்லையே என்று மேல் நாட்டு தாய்மார் கவலைப்படுவார்கள். திருமணம் முடியும் வரை தனது மகள் கற்போடு இருக்க வேண்டுமே என்று எமது தாய்மார் கவலைப்படுவார்கள். எமது கலாசாரம் எங்கு சென்றாலும் காக்கப்பட வேண்டும். மொழி பேசப்பட வேண்டும்' என்று நடிகர் சிவகுமார் தெரிவித்த கருத்து சிந்திக்க வைப்பது.

கா.சிவத்தம்பி, சில்லையூர் செல்வராசன் உட்பட இலங்கையின் கலைஉலக முக்கியஸ்தர்கள், கனடிய அறிஞர்கள், லண்டனைச் சேர்ந்தவர்கள், இந்திய எழுத்தாளர் இந்துமதி, ஓவியர் மணியம் செல்வன் என்று பலர் வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார்கள். நிகழ்ச்சிகளை விமல் சொக்கநாதன் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

முக்கியமான அம்சங்களாக மலேசியாவில் ஆலய திருவிழாக்கள் பற்றிய தகவல் நிகழ்ச்சி ஆர்வத்துடன் பார்க்கக்கூடியதாக இருந்தது. எங்கள் சொந்த மண்ணை பார்த்த திருப்தி. அவ்வாறாக அனைத்து வசதிகள், சுதந்திரத்துடன் ஆலய வழிபாடு இன்னொரு மண்ணில் நடைபெறுகிறது.

பி.பி.சியின் வெளிநாட்டுச் சேவை நிலையத்துள் காமிரா புகுந்து விளையாடுகிறது. தமிழோசையின் சங்கர், ஆனந்தி ஆகியோர் ஒலிபரப்பும் போது நேரடியாகவே படம் பிடிக்கப்படுகிறது. வெறும் வானலைகளில் தவழ்ந்து வந்த தமிழோசையை தமிழ் ஒளியாக்கிய பெருமை தேமதுரத்தை சேர்கிறது. பி. பி.சியின் ஆரம்ப கால தமிழ் நிகழ்ச்சிக்கு பொறுப்பாக இருந்த

30ம் பக்கம் பார்க்க..

Books,
Flyers,
Business Cards,
Wedding Cards

Blueline Printing

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
தரமான அச்சுவேலைகளுக்கு..

குன்றாத தரம்!
குறைந்த விலை!
குறித்த நேரம்!

Tel:299 5979
Fax:299 8171

335 Nugget Ave, Unit 6
(McGowan/Sheppard)
Scarborough

www.tamilarangam.net


நகரின் மத்தியில் தனித்துவமான
ஓர் உணவுச் சேவை

# UNIQUE CATERERS

**Caterers of Sri Lankan, West Indian, Chinese and Canadian Cuisine**

31 PASSMORE AVE, UNIT 16
SCARBOROUGH, ONT M1V 4T8
TEL:(416) 292 3535

Food Prepared By Qualified Chefs
Experienced in All Kind of Foods
Trade & Vendor Inquires Welcome

**Give Us A Call**
**We Will Look After All Your Party & Other Unique Needs**

**Contact:**
Herlyn Selvanayagam
416-299-3203
Merlyn Selvanayagam
416-498-7481

திருமண வைபவங்கள், பிறந்த நாள் விழாக்கள் போன்ற அனைத்து வைபவங்களுக்கும் சகல விதமான உணவு வகைகளும் முழுச் சேவையுடன் தரத்துடன் வழங்குகிறார்கள

**Other Services:**
Party Hall Arrangement
Linen, Flower Arrangements
Cutlery, Warmers
D.J Service, Bartenders
Uniform staff, Decorations

**Our Specialities:**

**Sri Lankan Style:**
Rice Curries (Veg & Non Veg)
All kinds of Buriyani, Fried Rice
Kothu Rotti, String hoppers

**West Indian Style:**
All kinds of Fried Rice
Roti & Curry, Dhal Puri

**Also Canadian & Chinese dishes**
Deserts: Your Choice
We also equipped to supply
10-1000 pieces of Short eats
(Appetizers) patties, Rolls, Cutlets etc



உ

# சோதிடம்

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல்
Raphael's Astronomical Ephemeries இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடகங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவர்களுககும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.
★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.
★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்
★ சுபமுகூர்த்தம் நிச்சயித்தல்
★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்கமைவாக விவாகப் பொருத்தம் பார்த்தல்

உங்கள் பிரச்சனை எதுவானாலும்
சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

## சி.சிதம்பரப்பிள்ளை

இளைப்பாறிய ஆசிரியர் (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடர்
தொடர்புகளுக்கு:
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont,L3R 7G7
**(905) 513-9840**



## கிறிஸ்தவ திருமணங்களில்

**மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள**

**மாஜி**
**796 2672**

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

**Net, Colorful Flower Bouquet, Flower Basket**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடர்ந்தால் தொடரும்



பாலசுந்தரன்

நம்பவே முடியவில்லை. இந்த வார ஐந்து நாட்களில் இருவரும் ஒருவருடன் ஒருவர் கதைக்கவில்லை. அதிசயம்தான். ஆனால் இது உண்மை. இப்படி என்றைக்குமே நடந்ததில்லை. அவள் மனம் எனக்கு தெரியாது. ஆனால் எனக்குள் இப்போது ஒரு பயிற்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் வெளியுலகில் சுகம் போல தோன்றினாலும் மனதுக்கு சுகமில்லைதான்.

இது ஐந்தாவது நாள் பிற்பகல் முன்றை தாண்டிவிட்டது. சனி, ஞாயிறை வரவேற்பதில் ஒரு தனி சுகமுண்டு. இயந்திர மயத்தில் இருந்து தற்காலிகமாக பிரிந்து இயற்கையுடன் உறவாடும் காலம். அவள் பக்கம் ஒரு நோட்டம் விட்டேன். 'அது' மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது. பயந்து பயந்து, ஒரு சிரிப்பு சிரித்தாள். அது சிரிப்பு என்பதை விட ஒரு 'இழிப்பு' என்று சொல்லலாம் நாய்கள் ஊளையிடவில்லை. மாடுகள் அழவில்லை ஆனால் இன்று ஏதோ ஒரு துக்குறி நடக்கப்போவது தெரிந்தது. என்னைப்பொறுத்தவரை இது துக்குறியாகவே இருக்கும்.

எல்லோரும் வெளியேறிக்கொண்டு இருந்தனர். வழமைக்கு மாறாக அவள் சற்று நேரத்துடன் வெளிக்கிட்டு என்னருகே வந்தாள். என்னுள் சிரித்தேன். சந்தோஷத்தில் அல்ல இடுக்கண் வருங்கால் நகுக என்பதால்.

"நான் இன்று இரவு உனக்கு தொலைபேசி எடுக்கிறேன்" என்று விட்டு பதிலுக்கோ அன்றி பிரதிபலிப்பை நோக்கவோ காத்திராமல் சென்று விட்டாள்.

அவளே மீண்டும் கதைக்கத் தொடங்கியதில் ஒரு சந்தோசம். ஆனாலும் பெரிய அளவில் எதுவும் தோன்றவில்லை. எதிர்பார்த்த ஒன்றுதான் இன்று அப்படி என்ன புதிதாக கதைக்கப்போகிறாள். ஏன் வீணான கற்பனைகள்? கதைக்கும்போது தெரிந்து கொள்வோம் என்று விட்டேன்.

வெளியேறும்போதுதான் ஞாபகத்திற்கு வந்தது. அது காலையில் வந்த தொலைபேசி பற்றியது. ஊரில் இருந்து பொருட்கள் வந்துள்ளனவாம். வந்து எடுத்து செல்லும்படி கூறியிருந்தார்கள். 'அங்கு' போகவே விருப்பமில்லை. ஆனாலும் தவிர்க்க முடியாது. ஊரில் இருந்து இங்குவரை சுமந்து வந்ததே போதும். அவர்களையே அவற்றை வீட்டை கொண்டுவந்து தாருங்கள் எனலாமா?

அந்த வீடு வேறுயாருடையது மல்ல. நாகுவை வாங்கு, நாம்பன் தருகிறோம் என்பவர்கள் வீடுதான் அது. அவர்களின் உயிர் உறவுக்குடும்பம்.

எப்படியும் 'அந்த' கதையை எடுப்பார்கள் என்றது ஓர் மனம் ".....

. மொத்தத்தில் இதுதான் சம்பந்தம். இனி ஆக வேண்டியவற்றை பார்க்க வேண்டியது தான்" என்று முடிக்கும் அக்குடும்பம் என்றது அதே மனம். அதாவது தங்களது தீர்ப்புக்கு ஏற்றவாறான பிரச்சனைகளை சொல்லி முடிவில் தீர்வாக தமது தீர்ப்பை சொல்வார்கள்.

இல்லை அவர்கள் கனடிய பண்புகளில் பழக்கப்பட்டவர்கள் 'அந்த' கதையை எடுக்க மாட்டார்கள் என்றது மறுமனம்.

தேடி அலைந்து இறுதியில அழைப்பு மணியை அழுத்தினேன். கதவருகே யாரோ வந்துவிட்டு போனது புலந்தது. இது வழமையான ஒன்றுதானே. மாட்டு தொழுவத்தில் எல்லாம் குழப்பி வைக்கப்பட்டு இருப்பது போல எல்லாம் குழப்பி வைக்கப்பட்டு இருக்கும். எவராவது வரும்போது துரிதகதியில் அவை சீராக்கப்படும். இது அப்படியான ஒரு 'கலர்' எடுப்பாக இருக்காது என்றே தோண்டியது இது கண்ணிவெடி பதிப்பாகத்தான் இருக்கும். பிறகென்ன நான் கன்னிவெடிக்கு பலியாகப்போகிறேன்.

"என்ன நீங்கள்..... உள்ளுக்கை வந்து இருங்கோ" என்ற அந்த வீட்டுக்காரர் "இங்க தம்பி வந்திருக்கிறார்... வெளியாலை வாருமப்பா" என்றார் தனது மனைவியை நோக்கி. கள்ளர் எல்லாம் நாடகம்தான். கண்ணிவெடியென்றால் அவர் வெடிக்க வைத்திருப்பார். இது கன்னி வெடியல்லலோ அதுதான் அவவை கூப்பிடுகிறார்.

"தம்பி... என்ன வேலையாலை வாறியள் போலை" என்று அம்மணி கேட்கும்போதே புரிந்தது. அம்மணி அம்மணியைத்தான் அடிக்கப் போறா என்று காலையில் தான் சொல்லியிருந்தேன் வேலையின் பின் வருவேன் என்று. பிறகு என்ன அதில் சந்தேகம். குடிப்பதற்கு குளிராகத் தந்தா அம்மணி. இதமாக இருந்தது.

"என்ன தம்பி நல்லாய் மெலிஞ்சுபோனியள்" அதல்லே வெடி! அம்மணியின்ரை இழுவை புரிந்தது. மெலிந்துபோனேன். ஏன் மெலிந்தேன். சாப்பாடு சரியில்லை. ஏன் சாப்பாடு சரியில்லை. தனிக்கட்டையாக சமைக்கவும் வேலைக்குபோகவும் முடியாது. அப்ப அதற்கு தீர்வு என்ன ஒன்றை கட்டவேண்டியது தானே

26ம் பக்கம் பார்க்க...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சோதிடம் பற்றிப் புரியாமல்.......

## (3618511 எழுதும் தொடரில் சில பகுதிகளுக்கு மறுப்புகள்)

**சிவப்பிரகாசம்**

சோதிடம் பற்றியும் தெரியாமல் சோதிட்மும் தெரியாமல் சோதிடம் பார்க்கும் சோதிடர்களுக்கும் அதே நிலையில் இருந்து கொண்டு பலகால நம்பிக்கைக்கு சேறு வீசும் விமர்சனத்துக்கும்வித்தியாசம் அதிகம் இல்லை. எண் கணிதத்தைப் பற்றி என்னவாவது எழுதிக்கொள்ளுங்கள். ஆனால் இந்து சமயத்தின் பகுதியாக உள்ள சோதிடத்தைப் பற்றி எழுதிய சில 'விபரம் அறியாத் தன்மை' யை இங்கு விளக்குவதே என் நோக்கம். முதலில் பூசிய சேறுகளைத் துடைத்து விட்டு பின்னர் இனிப் பூசப் படக்கூடிய சேறுகளுக்கு கவசத்தை அளிக்கலாம் என நினைக்கிறேன். கடைசியாக வீசப்பட்ட சேறுகளில் தொடங்கி படிபடியாக உள்ளே போவது சரியான அணுகு முறைதானே.

வருடப் பிறப்பு மேலைத்தேச ஜோசிய முறையில் விஞ்ஞான ரீதியாக பங்குனி 21 அளவில் சூரியன் மேட ராசியில் பிரவேசிப்பது கூறப்பட்டுள்ளது. இங்கே கட்டுரையாளர் முதலில் குழப்புகிறார். விஞ்ஞானத்துக்கும் மேலைத்தேச சோதிடத்துக்கும் என்ன சம்பந்தம்? மேடராசி ஆரம்பப் புள்ளி (first point Aries) விஞ்ஞானத்தில் என்ன முக்கியத்துவம் பெறுகிறது? மேலைத்தேச ஜோதிட முறையில் புலப்படு சூரியபாதையும் (Ecliptic) ஒளிவிட்டமும் (Celestial Equator) சந்திக்கும் இடம் மேட இராசி ஆரம்பமாக கொள்ளப்படுகிறது. மேலைத்தேசஜோதிட முறையில் மேட இராசி ஆரம்ப இடத்துக்கும் இந்து சோதிட முறையில் மேடராசி ஆரம்ப இடத்துக்கும் வித்தியாசம் உண்டு. அந்தப் புள்ளி அந்த அந்தச் சோதிட முறைகள் தமக்கென அமைத்துக் கொண்டவை. மேலைத்தேச முறை என்றதும் அது விஞ்ஞானம் என கட்டுரையாளர் தவருகப் புரிந்து கொண்டுள்ளார். மேலைத்தேச முறையில் கூட எப்போதும் மேடராசிப் பிரவேசம் பங்குனி 21ல் அமைவது இல்லை. கி.பி 532ம் ஆண்டளவில் மேலைத்தேச முறையில் கூட எப்போதும் மேடராசிப் பிரவேசமும் இந்து சோதிட மேடராசிப் பிரவேசமும் ஒன்ருக இருந்தது உங்களுக்குத் தெரியுமா? அதாவது வருஷப்பிறப்பு ஒன்றியிருந்தது. அது இன்று 24 நாள் வித்தியாசமாக இருப்பதற்கு இந்துக்கள் விட்ட பிழை தான் காரணம் என்று கூறப்பட்டுள்ளது. இந்த 24ம் நாள் திடீரென்று வரவில்லை. மேட ராசி ஆரம்பத்தின் படிப்படியான விலகல்தான் காரணம். ஏப்பிரல் 14 ஐ அண்டி இந்து வருடப்பிறப்பு எப்போது அமையும் என்ற கட்டுரையாளரின் அனுமானம் தவருனது. 5000ம் ஆண்டுகளுக்கு முன் இந்த வருஷப்பிறப்பு பெப்ரவரி நடுப்பகுதியில் (தற்கால கலண்டர் அமைப்பை பின்னேக்கி அமுல் செய்தால்) அமைந்தது. அது படிப்படியாக மாறிக்கொண்டு வரும். ஆங்கில வருஷத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கையும் இந்து வருஷயத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கையும் வேறுபடுவதே காரணம்.

2600 வருடங்களாக ஈரானில் மார்ச் 21 புத்தாண்டு தினம் என்கிருர் கட்டுரையாளர். அது எப்படி? ஆண்டுக்கு ஒரு முறை வரும் லீப் வருடம், நூறு ஆண்டுக்கு ஒரு முறை இல்லாது போகும் லீப் வருடம் இவை எல்லாம் எப்படி கணக்கில் அடங்கின? போப் கிறகரி செய்த மாற்றம், அதாவது திகதி முறையைச் சரி செய்ய திடீரென்று 11 நாட்களை உடனே நகர்த்தி வைத்தபோதுகூட சூரியனும் சற்றுப் பாய்ந்து கொண்டதா? எண்கணிதம் பற்றி விமர்சித்தபோது கட்டுரையாளர் சொன்ன விஷயங்களை இங்கு மீண்டும் ஞாபகப்படுத்து கிறேன், 2600 ஆண்டுகளின் முன்னர் மார்ச்சு என்றெரு மாதமே இருக்கவில்லை. யூலியன் கலண்டர் ஆரம்பமானது கி.மு 46 ல் என்பதை உணர்க. கட்டுரையாளர் குறிப் பிட்டது சீரான முறையில் மேலைத்தேசத்தில் (ஈரான் உட்பட) மேடராசிப் பிரவேசம் அமைந்ததை என நினைக்கிறேன். தற்கால கலண்டர் முறைப்படி ஒரு வருஷத்தில் 365.24 நாள் (100 வருடத்தில் அமையும் சீர்ப்படுத்தலையும் சேர்த்து) மேலைத்தேச சோதிட முறையில் ஒரு வருஷத்தில் 365,2563604 நாட்கள். வழமையில் உள்ள இந்து சோதிட முறையில் இது 365,2586805 நாட்கள். இந்து சோதிட முறையில் மேடராசி ஆரம்பப்புள்ளியில் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் நுண்ணிய விலகலும் ஆரம்பப்புள்ளி அமைந்த இடமும் மேலைத்தேச கீழைத்தேச முறையில் உள்ள வித்தியாசத்துக்கு காரணம். இவை அடிப்படை முறைகள். மேலைத்தேசத்தவரை அப்படியே பிரதிபண்ணிஞல்தான் அது சரி யென்று ஏற்றுக் கொள்வீர்களா? மேலைத்தேசத்தவர் வைத்திருப்பது எல்லாம் விஞ்ஞானம் அல்ல! சூரியனை அடிப்படையாக வைத்து வருஷம் மாதம் (சங்கிராந்தி) எல்லாமே சரியாக காரணத்துடன் தெளிவாக தமிழ் இந்துக் கலண்டர் அமைந்துள்ளது. அது மட்டுமல்ல. சீராக அது அமைந்துள்ளது என்பதை கட்டுரையாளர் அறியாவிடின் கலண்டர் கணிப்பு பற்றி விஞ்ஞான ரீதியான வருடத்தொடக்கம் என்ன? விஞ்ஞானத்தில் வருடத் தொடக்கத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளதா என்ன? கட்டுரையாளரின் பாஷையில் .... எழுந்தமானமாக உடுக்களிடையே அடையாளங் காணப்பட்ட அந்தப் பன்னிரண்டு இராசிகளில் ஒன்ருன மேடராசிப்பிரவேசம் எப்படி விஞ்ஞானரீதியானது? வருட ஆரம்பம் என்பதற்கு இந்த சோதிடங்களில் தரப்பட்ட வரைவிலக்கணத்துக்கு ஏற்றவாறு எந்தவித தவறுமின்றி இந்து வருடங்கள் இதுவரை அமைந்து கொண்டு வருகின்றன. ஏழைரைச் சனியிலும் அட்டமத்துச்சனியிலும் கெடுதல் மட்டும்தான் நிகழும் என்பதற்கு சோதிட மூலாதாரம் காட்ட முடியுமா கட்டுரையாளரால்? சனியை மட்டும் வைத்துக்கொண்டோ, சனியிருக்கும் இடத்தை வைத்துக் கொண்டோ விளைவுகளைக்கூறமுடியும்

22ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Scarborough Dental Office

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி
சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும்
சிகிச்சை வழங்கப்படும்

• Cosmetic Dentistry • Crown & Bridges
• Gum Treatment • Root canals
• Bleaching • Dentures
• Surgery

## Dr.Athi K.Somasundaram
## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

**பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை**

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**

2155 Lawrence Ave East, Suite 10
(At Birchmount), Scarborough
•Wheel Chair Access •Free Parking

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப்
பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல்
செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை


**Monday-Saturday**
**9 am-9 pm**
**Sundays**
**12 noon-5 pm**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ''நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!



## சிதம்பர வடிவேலனூர்

சந்தையடி மகாவித்தியாலய மாணவர்கள் அன்று வெள்ளிக்கிழமை என்பதை பள்ளிக்கு முன்னேயிருந்த சாப்பாட்டுக்கடைக் கிழவன் பேதுறுவுக்குக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். இந்தக் கிழவன்ர கடைப்புட்டு பேமஸ் ஆன ஒன்று. "பேதுரு புட்டு" பஞ்சு போல இருப்பதற்கு காரணம் புட்டுப் பானைக்குள் கஞ்சா போட்டுக் கிழவன் அவிக்கிறதாம். கிழவன்ர சொந்த இடம் மதுரை. இதனாலேயோ என்னவோ தெரியா கிழவன் மதுரை முனியாண்டி கடையின்ர சாயலிலே தான் சாப்பாடு போடும். ஒவ்வொரு வரியமும் மதுரைக்குப் போய் இந்த முனியாண்டிச்சாமிக்கு பூசை போட்டுட்டுவாரது வழமை. மண்ணச்ச நல்லூரா் தக்காளிக்குழம்பு என்று ஒண்டு வைக்கும் அந்தமாதிரி. ஆனா அந்த தக்காளிக்காய் உள்ளூர் உற்பத்தி. அளவு சாப்பாடு கிழவன் ஒருக்காலும் குடுத்தறியாது. முழுச்சாப்பாடுதான் குடுக்கும். அளவு சாப்பாடென்று ஒருவனுக்கு அளவான சாப்பாடு என்றுதான் பொருள். ஆனா அளவு சாப்பாடு சாப்பிடுறவனுக்கு முழுச் சாப்பாடு கொடுத்தாலும் சாப்பிடுவான். அதால கிழவன் அளவு சாப்பாடு எது முழுச் சாப்பாடு எது எண்டு குழம்பி ஒரு ஆளுக்கு பயித்துக்கு காணக் கூடியதாய்த்தான் நடுக்கும். இதால கிழவனுக்கு ஓகோ ரண்டு வியாபாரம்.

"பல்லோரும் ஏத்தப் பணிந்து" ஆசிரியர்களே! மாணவர்களே!! எல்லோருக்கும் வணக்கம். பிள்ளைகளே உங்களுடைய ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் பாடசாலைக்கு வந்து படித்தால் மட்டும் போதாது. அத்துடன் ஒழுக்க நெறியிலும் ஓங்கி வளரவேண்டும். எங்கள் பாடசாலை யின் மலசலக்கூட கதவு சுவர் எல்லாவற்றிலும் உங்கள் கைவண்ண த்தைக் கண்டேன். பார்ப்பதற்கே வெட்கமாய் இருக்கிறது.

"பச்சை வசனங்கள் என்றும்


# NATIONWIDE CONSULTANTS

AUT O INSURANCE
ACCIDENT CASES
REJECTED CASES
LOW PAYMENT
MUL TI CAR DISCOUNT
INSURANCE FOR
YOUNG DRIVERS
All TRAFFIC TICKETS

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளுக்கும், வாகன போக்குவரத்து சட்ட மீறல் டிக்கட்டுக்களுக்கும் எங்களை நாடுங்கள்

விசாக்கள் பெறுவதில் சிரமமா? குறிப்பாக இந்திய விசா பெறுவதில் தாமதமா? அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதா? சகல குடிவரவு விசாரணை தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

Visitor Visas
Refugee Claims
Rejected Cases
Business Visa
Assisted Classes

CALL
SHAN
321 1311
740-SHAN
BY APPOINTMENTS ONLY




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பச்சையாகவே இருக்கவேண்டும் ஆதலினுல் தான் பூவரசம் குழையால் எழுதுகிரேம்" என்றவரி என்னை ஆட வைத்துவிட்டது. ஆழ்ந்து யோசிக்கவும் செய்துவிட்டது. அன்பு மாணவர்களே உங்கள் உள்ளம் பச்சை. நீங்கள் நினைப்பது பச்சை எனவே பச்சை பாலகன்கள் என்று உங்களைச் சொல்லலாம். பச்சை என்ருல் பசுமை பசுமை என்ருல் இனிமை

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" இதன் கருத்து பச்சைப் பாலகர்களின் கல்வி சுவரில் எழுதுவது என்பதே. எனவே உங்களைப் பொறுத்தளவில் சுவரில் எழுதினது தப்பல்ல. இச்சை தரும் சொல் பச்சை பாலகர்களில் இருந்தே தோன்றும். இதைத்தான் வள்ளுவர், "குழல் இனிது யாழ் இனிது என்பார் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்பார். எனவே பிறருக்கு ஆசை ஏற்பட பச்சைச் சொல்லால் கதையுங்கள். பால்வடியும் சொல்லால் கதையுங்கள் பச்சைப் பாலர்கள் என்ருல் உடுப்பு இல்லாத பாலகர்கள் எண்டும் பொருள். பச்சைக் குமரிகள் எண்டு சொல்வதில்லை. பச்சைகுமரிகள் எண்டால் உடுப்பில்லாத குமரிகள் எண்டு பொருள் கொண்டு வீண் மனத்தைக் குழப்பாதீர்கள். எனவே பிள்ளைகளே! பச்சை எண்ட சொல் இடத்துக்கு இடம் வேறு படுகின்றது. ஆனுல் நீங்கள் மலசல கூடக் கதவு சுவர் என்பவற்றில் எழுதியுள்ள பச்சை வசனத்தின் ஆழம் நீளம் எல்லாவற்றையும் பார்க்கும் போது நெஞ்சுக்கு கொஞ்சம் கஸ்ரமாகத்தான் இருக்கிறது. எனவே எழுதியவர்கள் பாடசாலை விட்டபின் நின்று அழித்து விட்டுச் செல்லவும். இன்றைய சிறுவனே நாளைய மனிதன்"

"அப்பு இன்றைக்கு எங்களுக்குப் பத்துப் பாசல் வேணும். நாங்கள் தான் ஜெற்றியில் காவல். ராத்திரி நேவி வரப் பார்த்தான். நாங்கள் ஒருமாதிரி துரத்திப் போட்டம்."

"உங்கட கடமையை நீங்க ஒழுங்காச் செய்யீறீங்க தம்பி. நாங்க உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத்தானே வேணும்"

"கடமை எண்டு சொல்லாதையுங்க இது உங்கட உரிமையப்பு ஒவ்வொருவரும் உங்களப் போல நினச்சா இவன்களை எப்பவோ துரத்தியிருக்கலாம்."

19 ம் பக்கம் பார்க்க..

# பெண்=0; பெண்<ஆண்; 0> பெண்
# பாரம்பரியச் சமன்பாடுகள்

**சாதனி**

அன்று முதல் தமிழ் மக்கள் – இந்துக்கள்– பெண்ணுக்கு கொடுத்த பெறுமானம் பூச்சியம். இது தான் நிஜம். ஆனுல் அவற்றை சாதுரியமாக மறைத்தும் உள்ளனர். கவிதைகளிலும் காவியங்களிலும் பெண்ணைத் தெய்வம் என்று எழுதும் போது மனத்தில் அவர்களைக் கல்லுக்கு சமானமாக கருதியதைக் கூட எப்போதும் ஆண்கள் ஒத்துக்கொள்ளப் போவதில்லை. இதைச் சில பெண்கள் அன்று புரிந்து கொண்டு அதற்கேற்றவாறும் நடந்துள்ளனர். ஆனுல் பல பெண்கள் இன்றுவரை அதைப் புரிந்து கொள்ளவும் இல்லை. ஆண்களின் 'மேன்மைத்துவ' அன்புக்குள் அடியுண்டு விடுகின்றனர். 'நளாயினி தனது குஷ்டரோகக் கணவனை தானே சுமந்து பரத்தையர் வீட்டுக்கு அழைத்துச் சென்ருளே அதற்காக அவளை காவியங்கள் கற்படையவள் எனப்போற்றியது. இது நளாயினியின் புத்திசாலித தனத்தைக் காட்டுகிறது. எந்தப் பெண்ணுவது குஷ்டரோகியான கணவனுடன் உடலுறவு கொள்ள விரும்புவாளா? தப்பினேம் பிழைத்தோம் என்ற சந்தோசத்தில் கணவனை பரத்தையர் வீட்டுக்கு கூட்டிச் சென்ற அவளது விவேகத்தையே கற்பென கூறப்பட்டது' குறமகள் அடிக்கடி நகைச்சுவையுடன் குறிப்பிடும் ஒரு கருத்து அது.

கற்பு பற்றி வரும் காவியங்களை நோக்கிப் பாருங்கள். ஆண்களின் சிறுமைத்தனங்களையும் எப்படி பெண்கள் ஆண்களிடம் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்கள் என்பதையும் காண்பீர்கள். அதாவது ஆண்களின் ஆதிக்கப்பிடி இறுகும் போது அதில் இருந்து விடுபடும் அந்த விவேகத்துக்குப் பெயர்தான் கற்பு. சீதையை உலகம் சந்தேகப்படுமே என்று சந்தேகப்பட்டான் இராமன். இப்படிப்பட்ட கணவனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று நெருப்புக்குள் குதித்துத் தப்பித்தாள் சீதை. இது அவளது விவேகம். எப்போது பெண் ஒருத்தி ஆண்களின் அதிகார மனப்பான்மையை எதிர்க்கிருளோ அப்போது அவளின் கற்பு அதிகரிக்கிறது என்பதே இதன் பொருள். கற்பு என்பது காம– உடலுறவு சம்பந்தப்பட்டது எனப் பலர் தவருக அர்த்தங் கொள்கின்றனர். அதுதான் அர்த்தம் என்ருல் உலகத்தில் எத்தனையோ பேரை கற்புக்கரசி என்று காவியங்கள் கொண்டாடி இருக்கும் அல்லவா! ஒரு சிலர்தான் காவியப் புலவர்களின் கண்களில் தெரிந்தனர் என்ருல்.... அந்தக் காவிய கற்பரசிகளில் காணப்பட்ட பொதுத்தன்மையை ஆய்ந்து அலசினுல்....... கற்பெனப் படுவது கணவனின் ஆதிக்கத்தை அடியோடு சாய்ப்பது என்பது புலனுகும்.

இன்னெரு ஆணின் உடலழகில் மெய்மறந்து இருந்தமைக்காய் தனது மனைவியைச் சபித்த முனிவரின் கதையைக் கேட்டிருப்பீர்கள். வருடக்கணக்கில் எந்தவொரு சுகமும் இன்றி வாடி இருக்கும் தன் மனைவியின் மனநிலையை அறிய முடியாத தவமா அந்த முனிருக்கு? தான் பிழைவிட்டதை அறியாமல் மனைவியைச் சபித்தது என்ன நியாயம்? அப்படியான அந்த முனிவர் எல்லாம் எதற்கு கலியாணம் செய்யவேண்டும்? ஒரு ஜீவன் கட்டிய பாவத்துக்காய் எல்லாத்தையும் துறக்கவேண்டும் என்ற அதே எண்ணம் இன்றும் பலரிடம் இருக்கிறது. தனது கணவனின் வேஷத்தில் வந்தது இந்திரன் என்று அறியாமல் அவனுடன் குலவி விட்டாள் அகலிகை. ஆத்திரமடைந்த முனிவர் இந்திரனைச் சபித்தது சரி. அப்பாவியான அகலிகையை ஏன் சபித்தார்? இந்திரனின் சூழ்ச்சியை அறியாமல் போனதுக்காய் தன்னையல்லவா சபித்திருக்க வேண்டும்! ஆக அடிப்பதற்கும் சபிப்பதற்கும் ஆத்துக்காரிதான் கிடைத்தாளோ? இவை புராண காலக்

17 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆய்வும் விமர்சனமும்

வ.ந.கிரிதரன்

*அண்மையில் பத்திரிகையொன்றில் வெளிவந்த விமர்சனமொன்றில், ஒரு கவிதை நூலைப்பற்றி விமர்சித்த பொழுது 'தமிழ் என்ன பாவம் செய்ததோ? என்னும் கருத்துப்பட எழுதியிருந்தார்கள். ஒரு படைப்பாளி என்பவன் அவன் படைப்புக்களினூடு தான் வளர்ச்சியடைகின்றான். ஆரம்பத்தில் பத்திரிகைகளில் உரைவீச்சுக்களை அள்ளிக் கொட்டியபடியிருந்த சோலைக்கிளி இன்று தரமான கவிஞனாக உருமாறவில்லையா? ஆரம்பத்தில் சாதாரண படைப்புக்களை ஒரு படைப்பாளி தரலாம். அவற்றை விமர்சிப்பவர்கள் குறைநிறைகளை நாகரீகமாகச் சுட்டிக் காட்டுவது அப்படைப்பாளியை மேலும் முனைப்புடன் படைப்புத் துறையில் ஈடுபட வழி செய்து விடுகின்றது. காலப்போக்கில் அதே படைப்பாளி தரமானதொரு படைப்பைத் தந்து விடலாம்.*

ஆய்வும், விமர்சனமும் ஒன்றா? அல்லது வேறு வேறானவையா? பெரும்பாலான இன்றைய விமர்சகர்கள் இரண்டையும் போட்டுக் குழப்பியடித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலரது விமர்சனங்கள் விமர்சனங்களுமாகவில்லை.... சிலரது ஆய்வுகள் ஆய்வுகளாகவுமில்லை இந்நிலையில் மீண்டும் விமர்சன, ஆய்வுத்துறையை வளம்படுத்த நாம் முயலவேண்டியது அவசியம். அதற்கு முதல் ஆய்வு என்றாலென்ன, விமர்சனம் என்றால் என்ன என்பது பற்றிப் பார்ப்போம். முதலில் விமர்சனம் என்றாலென்ன என்பது பற்றிப் பார்ப்போம். ஒரு படைப்பின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதை அல்லது அப்படைப்பின் நிறை குறைகளை ஆராய்ந்து தீர்வுகளை முன்வைப்பதை விமர்சனமென்று கருதலாம். ஆய்வை விடயத்தைப் பற்றிய தகவல்களை அல்லது அது பற்றிய மேலதிக புதிய விடயங்களைப் பற்றி அறிவதற்குரிய ஒரு படிப்பு அல்லது கற்கை என்று கூறலாம். உதாரணமாக ஈழத்துத் தமிழ் நாவல்களின் வரலாற்றைப் பற்றிக் கூறும் நூலொன்றைப் பார்ப்போம். இந்நூல் ஒரு பூரணமான ஆய்வு நூலுமல்ல, விமர்சன நூலுமல்ல. பொதுவான ஒரு அறிமுக நூலொன்று இதனைக் கூறலாம். (மௌனகுரு, சித்திரலேகா, நுஃமான் போன்றோரால் எழுதப்பட்ட இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம் என்ற நூலையே குறிப்பிடுகிறேன்.)

இது ஒரு பூரணமான ஆய்வு நூலல்ல. ஏனெனில் பலரது படைப்புக்கள் விடுபட்டுப் போயுள்ளன பூரணமான விமர்சன நூலுமல்ல. ஏனெனில் படிக்காத படைப்புக்களைப் பற்றி ஏனைய நூல்களின் தகவல்களின் அடிப்படையில் கருத்துக்கள் பல தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு கீழுள்ள வரிகளைப் பார்ப்போம்.

"ஈழத்து இலக்கியத்தில் இடதுசாரிச் சிந்தனையை அறிமுகப் படுத்திய அ.ந.கந்தசாமி சுமார் அறுபது கதைகள் வரை எழுதி இருக்கலாம் என்று கருதப்படுகின்றது ஆயினும் இவரது கதைகளும் தொகுப்பு நூலாக வெளிவரவில்லை. இரத்த உறவு, நாயினும் கடையர் போன்ற இவரது கதைகளை ஈழத்து விமர்சகர்கள் புகழ்ந்து பேசுவர் (பக்கம் 63) பெரும்பாலான விமர்சன-ஆய்வாளர்கள் செய்யும் தவறுகளில் முக்கியமானது ஏனைய புகழ்பெற்ற எழுத்தாளர்களின் நூல்களில் கிடைக்கப் பெறும் தகவல்களை அடிப்படையாக வைத்து தங்கள் கருத்துக்களைக் கூறுவது. தகவல்களின் அடிப்படையில் அப்படைப்புக்கள் பற்றிய தங்கள் ஆய்வுகளை இவர்கள் பெரும்பாலும் தொடர்வதில்லை. எதிர்கால ஆய்வாளர்கள் இது விடயத்தில் பூரண கவனம் எடுக்க வேண்டும். உதாரணமாக ஈழத்து நாவலைப் பற்றி ஆய்வு செய்பவர்கள் பின்னிணைப்பாக தொடர் கதைகளாகவோ, நூலாகவோ வெளிவந்த நாவல்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டால் அது நன்றாகயிருக்கும் (இது ஏனைய கவிதை, சிறுகதை, போன்ற படைப்பு வகைகளிற்கும் பொருந்தும்.) யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் ஈழத்துப் படைப்பாளிகளைப் பற்றி ஆய்வுகளைத் தந்திருக்கின்றார்கள். இவற்றில் ஒரு சிலவற்றைப் பார்த்துள்ளேன். நூலாக வெளிவராத இத்தகைய படைப்புக்களில் பல அரிய தகவல்கள் தரப்பெற்றிருக்கின்றன. இவை நூலுருப் பெற்றால் இலக்கிய ஆர்வலர்களிற்குப் பயனுள்ளதாக அமைந்து விடும்.

இன்னும் சில விமர்சகர்கள் தமக்குத் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் கருத்துக்களைக் கூறிவிடுகின்றார்கள். இவையும் ஒரு பக்கச் சார்பானவையாகயிருந்து விடுகின்றன. இத்தகைய விமர்சகர்களும் படைப்புக்களை வாசிக்காமல் அல்லது ஒரு சிலவற்றை வாசித்து விட்டு கருத்துக்களைக் கூறிவிடுகின்றார்கள். இவற்றிற்கு உதாரணமாக சுந்தர ராமசாமியின் டானியல், மு.தளையசிங்கம் பற்றிய கருத்துக்களை, அண்மையில் இங்குள்ள பத்திரிகையொன்றில் வெளிவந்த மாலனின் புலம்பெயர்ந்த படைப்புக்கள் பற்றி வெளிவந்த கட்டுரையொன்றைக் குறிப்பிடலாம். கனடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளைப் பற்றி எழுதும் யாருமே தாயகம், செந்தாமரை (இன்றைய மஞ்சரி) உலகத்தமிழர், ஈழநாடு போன்றவற்றை விரும்பியோ, விரும்பாமலோ குறிப்பிட்டே தீரவேண்டும். மாலனின் கட்டுரையில் சிறிது காலம் வெளிவந்து நின்றுபோன 'சக்தி' பற்றி தேவைக்கு அதிகமாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. இங்கு வெளிவந்த முக்கியமான பத்திரிகைகளில் சக்தியும் ஒன்றே. இலக்கிய உலகில் அது தன் சாதனையை ஏற்படுத்துவதற்கு முன்னரே நின்று போனது துர்பார்க்கியமானது. இன்னுமொரு பேட்டியொன்றில் கனடாவில் மக்களாதரவுடன் வெளிவரும் இதழ்களாக 'பொதிகை' 'தேடல்' என்பவற்றைக் குறிப்பிட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சித்திரலேகா ஏனைய பத்திரிகைகளைப் பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. இவ்விதம் தகவல்களின் அடிப்படையில் வெளிவரும் கட்டுரைகள் எவ்விதம் பிழையான தரவுகளை வாசகர்களிடம் கொண்டு செல்கின்றன என்பதற்கு மாலன் கூறிய ஒரு விடயம் உதாரணமாயிருக்கின்றது. அக்கட்டுரையின் ஒரு பகுதியில் சிறு சஞ்சிகைகளே இலக்கிய காத்திரமான விடயங்களைத் தாங்கி வருவதாகவும், தாயகம் குறிப்பிட்ட கருத்தியல் சம்பந்தமான பத்திரிகையாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இது மிகவும் தவறான கூற்று. கனடாவில் வெளிவந்த சிறு சஞ்சிகைகள் அனைத்திலும் வெளிவந்த விடயங்களை விட மிக அதிகமான இலக்கிய காத்திரமான விடயங்களைத் தாயகம் தாங்கி வெளிவந்துள்ளது. தாயகம் ஈழத்துப் பழம் பெரும் எழுத்தாளர்கள் பலரை அ.ந. கந்தசாமி, எஸ்.பொ, இளங்கீரன் போன்றோரை இன்றைய இளந் தலைமுறைக்கு அறிமுகம் செய்துள்ளது. பேராசிரியர் சிவசேகரத்தின் பயனுள்ள கட்டுரைகள் பலவற்றைத் தாங்கி வந்துள்ளது. இன்றைய இளந்தலைமுறையின் காத்திரமான படைப்புக்கள் பலவற்றைத் தாங்கி வந்துள்ளது. இந்திய எழுத்தாளர்களின் தரமான படைப்புக்கள் பல தாயகத்தில் மீள் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன வெளிநாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்கள் பல தாயகத்தில் வெளிவந்துள்ளன. வந்து கொண்டிருக்கின்றன.

இத்தகைய காரணங்களினால் தான் சரியான ஆய்வுகளும், விமர்சனங்களும் இன்றைய நிலையில் தேவையாகயிருக்கின்றன. சில விமர்சனங்கள் வேறு விதத்தில் கேடு விளைவித்து விடுகின்றன. விமர்சனங்கள் எப்பொழுதுமே ஆக்க பூர்வமானவையாக இருக்கவேண்டும். படைப்பாளிகளின் குறை நிறைகளை எடுத்துக் கூறி அவனது எதிர்கால வளர்ச்சிக்கு உதவக் கூடியவையாக விமர்சனங்களிருக்க வேண்டும். அண்மையில் பத்திரிகையொன்றில் வெளிவந்த விமர்சனமொன்றில், ஒரு கவிதை நூலைப்பற்றி விமர்சித்த பொழுது 'தமிழ் என்ன பாவம் செய்ததோ? என்னும் கருத்துப்பட எழுதியிருந்தார்கள். ஒரு படைப்பாளி என்பவன் அவன் படைப்புக்களினூடு தான் வளர்ச்சியடைகின்றான். ஆரம்பத்தில் பத்திரிகைகளில் உரைவீச்சுக்களை அள்ளிக் கொட்டியபடியிருந்த சோலைக்கிளி இன்று தரமான கவிஞனாக உருமாறவில்லையா? ஆரம்பத்தில் சாதாரண படைப்புக்களை ஒரு படைப்பாளி தரலாம். அவற்றை விமர்சிப்பவர்கள் குறைநிறைகளை நாகரீகமாகச் சுட்டிக் காட்டுவது அப்படைப்பாளியை மேலும் முனைப்புடன் படைப்புத் துறையில் ஈடுபட வழி செய்து விடுகின்றது. காலப்போக்கில் அதே படைப்பாளி தரமானதொரு படைப்பைத் தந்து விடலாம். (டாக்டர் ஷிவாகோவைத் தந்த பிறகுதான் போரின் 'பண்டர்நாக்கை உலகு அறிந்து கொண்டது. அப்பொழுது அவரிற்கு வயது ஐம்பதிற்கு மேலிருக்கும். அது வரைகாலமுமான அவரது எழுத்தனுபவமே அந்நாவலாக உருப்பெற்றது.) வேறுவகையான விமர்சனங்களும் வெளிவராமலில்லை. இத்தகைய விமர்சனங்கள் தனிப்பட்ட காரணங்களிற்காக வெளிவருபவை. உதாரணமாக அமைப்பொன்றைச் சேர்ந்தவர் அவ்வமைப்பைத் தூக்கிவைத்து விமர்சிப்பது. சிலர் தங்களது நன்றிக்கடனைக் காட்டவும் விமர்சனமென்று ஏதோ எழுதி விடுகின்றார்கள். தவறான போக்குகளிலிருந்து இன்றைய தமிழ் ஆய்வுத் துறையையும் விமர்சனத் துறையையும் சரியான பாதைக்கு மீட்டெடுப்பது இன்றைய படைப்பாளிகளின் கைகளில் தான் தங்கியுள்ளது. படைப்பாளிகள் தங்களிற்கிடையில் சுயவிமர்சனம் செய்வதும் ஒருவகையில் ஆக்கபூர்வமான விமர்சனத் துறையை உருவாக்க வழிவகுத்து விடும் என்றே நம்புகின்றேன்.

## பாரம்பரியச் சமன்பாடுகள்.

கதைகள் அல்ல. இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சாபக்கேடுகள்.

பெண்களுக்கு இந்துமதத்தில் அளிக்கப்பட்ட சில முறைமுகமான அநியாயங்களைப் பார்ப்போம். திருமணப் பொருத்தம் பார்க்கும்போது ஆயுள் பொருத்தம் என ஒன்று பார்ப்பார்கள். இந்தப் பொருத்தத்தில் பார்க்கப்படுவது ஆணின் ஆயுள் அதிகரிப்பதாய் உள்ள சம்பந்தத்தையே. அதாவது ஆணுக்கு நீண்ட ஆயுளும் பெண்ணுக்கு குறைந்த ஆயுளுமாய் அமைய வேண்டும். அதற்கு நல்ல பெயர் ஒன்றும் வைத்திருக்கிறார்கள் அதுதான் 'தீர்க்கசுமங்கலியாய்' வாழு பெண்ணே. அதாவது விளக்கமாய் சொன்னால்.... சீக்கிரமாய் ஆணுக்கு முன்னராக இறந்திடு மகளே! ஆண்களை அதிக காலம் வாழ வை அ(ட)ப்பாவிப் பெண்ணே!

இன்னொரு பொருத்தம் கணப் பொருத்தம். பெண்ணுக்கு அமையும் கணம் ஆணுக்கு அடங்கி நடப்பதாய் அமைய வேண்டும். பெண்ணுக்கு இராட்சத கணம் அமைந்தால் அது அதிகாரம் பண்ணக் கூடியது என்பதால் வரன் தேடுவது கொஞ்சம் கஷ்டம். ஆணைப் பெண் அதிகாரம் செய்வது எமது முதாதையரால் என்றும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. செவ்வாய் தோஷம் என்பதைப் பார்க்கும் போது கூட ஆண் விரைவில் இறப்பதற்கான சாத்தியம் இருப்பின் அது விலக்கப்படும். பெண் இறப்பதைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. பெண் இறந்தால் இறக்கட்டுமே.... ஆணுக்கு அடுத்த தாரம் கட்டி வைக்கலாம் என்ற எண்ணமா?

நடந்து செல்லும் போதுகூட கணவனின் பின்னால்தான் நடந்து செல்ல வேண்டுமாம். இவ்வாறான நடைமுறைகள் மூலம் பெண்ணின் 'முன்னுக்கு வரும்' மனப்பான்மையை மனோவியல் ரீதியாக மழுங்கப்படுபதே நோக்கம். சீதனம் என்ற முறை உருவாக்கப் படும்போது வெறும் பெண்ணுக்குப் பெறுமதி இல்லை என்ற கருத்தே காணப்படுகிறது. மனைவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆணுக்கு எந்தவித சலுகையும் இல்லாமல் ஆவதில்லை. ஆனால் கணவன் இறந்துவிட்டால் இந்தப் பெண் சுபகாரியத்தில் பங்கேற்பதை எவரும் விரும்புவதில்லை. ஒதுக்கி விடுகிறார்கள். ஏனிந்தப் பாகுபாடு? ஆண்கள் தம்மை உயர்வுபடுத்திக் கொள்வதற்காகத்தான்! ஏ பெண்ணே ஆண்கள் இல்லாவிடில் உன் பெறுமதி பூச்சியம் என்று சொல்லாமல் சொல்கிறார்கள். பெண்களும் பயந்து நடுங்கி அணைச்சாலும் அடிச்சாலும் அத்தான் பாதம் சரணம் என்று தமது அடிமைத்தனத்தை வலிந்து ஏற்றுக் கொள்கிறார்கள்.

பெண்ணின் பெருமை பற்றி

23ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சயனம்



ஏயர்லங்கா இயந்திரப் பறவை தரை குத்தி இறங்கி ஓடி ஊர்ந்து தரித்து நின்றது.

எல்லோரையும் போலவே கதிரவேலு மாஸ்ரரும் வள்ளிநாயகி தையலக்காவும் இலங்கையில் கால் பதித்தனர்.

வள்ளிநாயகி இவ்வளவு நேரமும் தொண தொணத்துக் கொண்ட வாயை சற்று சாத்தி மௌனித்திருந்தா. அவவின் மனது மட்டும் அந்தக் கேள்விக்கு பதிலைத் தேடிக் கொண்டிருந்தது.

கேள்வி என்னவோ மிக மிகச் சாதாரணமானதுதான்– ஏன் திரும்ப இலங்கைக்கு வாறம்?

"இந்த மனிசனின்ரை வாயைக் கிளறி எடுக்கிறதெண்டால்.... முப்பத்தாறு வருட அனுபவத்தின் சாரம் மெல்ல மனதில் மொய்த்தது.

கதிரவேலு வாத்தியார் அப்படி பெரும் அழுத்தமான மனிசனில்லைத்தான். இருந்தும் சில விடயங்களை மனிசன் எவருக்கும் விளக்கம் சொல்லாமலே சாதித்துத் தான் முடிக்கும்– ஆனால் இப்போது எதற்கு அடம் பிடித்து நிற்கிறார் என்பதை பையப் பையத்தான் அறிந்து கொள்ள வேணும்.

குடிவரவு, சுங்கம் எல்லாச் சோதனைகளையும் வாத்தியாரின் வார்த்தைப்படி இந்த நெருக்குவாரங்களையெல்லாம் தாண்டி வெளியே வந்தால், இவரின் சக வாத்தியாரான முஸ்தாபா வாத்தி காத்து நிற்பது தெரிந்தது.

நண்பர்கள் இருவரும் கட்டித் தழுவிக் கொண்டனர். வள்ளிநாயகி ரீச்சர் புன்முறுவலுடன் மட்டும் கலந்து கொண்டா "என்ன கதிரர் மாற்றமுமில்லாமல் போன மாதிரியே திரும்பி வாறாய்?" முஸ்தாபா சம்பாசனையை தொடங்கி வைத்தார். "அப்ப என்ன நானும் மனிசியும் கனடாவிலை இருந்து ரண்ணிங் சோட்ஸ்சோடையே வருவமெண்டு நினைச்சாய்?"

இந்த இடத்தில் எல்லோரும் சிரித்தனர், முஸ்தாபாவும் சேர்ந்தே சிரித்து சமாளித்துக் கொண்டார்– எல்லோரும் என்பதில் முஸ்தாபாவின் மகன் சாஜகானும் 'வான்' றைவர் பசீரும் அடக்கம்.

எல்லோரும் வானில் ஏறிக் கொண்டனர். முஸ்தாபா வாத்தியார் எதிர்பார்த்திருந்தது போல் கனமான பொதிகள் ஏதுமில்லை. இரண்டு சிறிய சூட்கேஸ்கள் அவ்வளவு தான்.

வான் சில நிமிடங்கள் ஓடியிருக்கும். ஆனால் எவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

"மாஸ்ரர் இனி எப்ப மட்டில?" நிசப்தத்தை உடைத்தான்.

" நான் இனிச் செத்தாலும் அங்க போக மாட்டன்"

" ஆவியா எண்டாலும் அங்கிட்டு போறேலே எங்கிறிங்கலா? – பசீர்

பசீர் தானாய் சிரித்தான் தனது பகிடிக்கு.

"இஸ்லாத்திலே ஆவி எல்லாம் இருக்கா?" கதிரவேலர் திருப்பித் தாக்கினார்.

" என்ன நா மௌத்தாறதை பற்றியா சொல்லிக்கிட்டன்?– பசீர் கதிரவேலருக்கு ஏதோ சுட்டிருக்க வேண்டும் தணிந்தார்.

" கனடா வெறுத்துத்தான் திரும்பிறன்"

கதிரவேலு வாத்தியார் நிதானமாய்ச் சொன்னார்– அவர் மனைவி வள்ளிநாயகியும் அவர் நண்பர் முஸ்தாபா வாத்தியாரும் ஏகநேரத்தில் கதிரவேலரை நோக்கினார்.

கதிரவேலர் அதற்கு மேல் எதுவும் சொல்லவில்லை ஏதோ யோசனைக்கு தாவினார் மீண்டும் நிசப்தம்.

"கனடா எப்படி நாடு?" மீண்டும் பசீர்தான்.

ஒரு கண நிதானிப்பின் பின் கதிரவேலர் தொடர்ந்தார்.

" நேரத்தை மதிக்கிற நாடெண்டுதான் எல்லாரும் சொல்லிச்சினம், எனக்கென்னண்டால் நேரத்தை விலை பேசிற நாடாய்தான் படுகுது"

பசீருக்கு இது விளங்கவில்லை.

" கனடாவிலை சோலி செஞ்சு பிழைக்கேலுமா?"

கனடாக் கனவில் இருக்கும் சாஜகான் ஆர்வமாய் கேட்டான்.

சாஜகானை ஒருமுறை உற்றுப் பார்த்து விட்டு கதிரவேல் மாஸ்ரர் சொன்னார் "வேலை செய்யலாம். செய்யத்தான் வேணும் பிழைக்கலாமா என்றது எனக்கு சொல்லத் தெரியவில்லை."

இது சாஜகானுக்கு விளங்கவில்லை. முஸ்தாபா இப்போது புகுந்தார்.

"கதிரர் கேக்கிறன் எண்டு குறை நினைக்கோணும் உங்களுக்கு கனடாவிலை ஏதும் பிரச்சனையே?"

கதிரவேலர் ஒன்றும் சொல்ல

அருண்

www.tamilarangam.net

வில்லை. முஸ்தாபாவின் பக்கம் திரும்பி ஒருமுறை பார்த்து சிறு கணம் நிதானித்து "இல்லை" என்பதற்கு தலை ஆட்டினார்.

மீண்டும் கேள்விக்குறி

'வான்' உயர் நீதி மன்றத்தின் முன் உள்ள சிறு குச்சில் திரும்பி மூன்றும் வீட்டில் நின்றது.

இவர்கள் இறங்கினர்

"ம்மா... வாப்பா இட்டாந்திட்டார்" என பெலத்து அறிவிப்புச் செய்தாள் முஸ்தாபாவின் மகள் (எத்தனையாம் கால் என்பது எனக்குத் தெரிய வரவில்லை)

முஸ்தாபா ஆசிரியத் தம்பதிகளை வழிநடத்தி உள்ளே அழைத்துச் சென்றார்.

ஆட்டுக் குடலை கொதிநீரில் சுத்தம் செய்து கொண்டிருந்த முஸ்தாபாவின் மனைவி பாருக் பேபியும் இரு மகள்மாரும் முக்காடு இழுத்து போட்டுக் கொண்டு புன்முறுவல் செய்தனர்– முஸ்தாபாவின் அவ்விரு மகள்மாரும் வள்ளிநாயகி ரீச்சரிடம் படித்த பெண்கள்.

"ஆட்டு ஆணம்" மணத்தை பரப்பி வைத்திருந்தது. அந்த வீட்டு வழி எங்கும் வள்ளி நாயகிக்கு வயிற்றைப் பிரட்டியிருக்கவேண்டும்– சமாளித்து விட்டார்.

கதிரவேலர் முந்தி யாழ்ப்பாணத்திலை இருக்கக்கிலை ஆட்டுக்கறி என்றால் மிக விருப்பந்தான் ஆனால் கனடாவில் ஆடு கோழி, கோழி ஆடு என்று சாப்பிட்டு ஆட்டுக்கறியில் அவ்வளவு விருப்பில்லைத்தான்– ஆனால் என்ன செய்வது விருந்தோம்பல்– விருந்து கொள்ளல் எம் பண்பாடாச்சே.

கதிரவேலர் மேல் நனைக்க புறப்பட்டார்.

கனடா ஞாபகம் வந்தது "தண்ணிக்கு காசு. கவனமாய் பாவியுங்கோ – இது அப்பாட்மென்ற் இல்லை" என மூத்த மகன் நச்சரிப்பது நினைவுக்கு வந்தது. கொழும்பிலோ தண்ணீர் பஞ்சம் ஊரிலோ வளவுக்கு ஒரு கிணறு.

கதிர்வேலர் சூட்கேசைத் திறந்து துவாயை எடுத்துக் கொள்ள முற்பட்டார். இரண்டு சுங்கான்கள் விழுந்தன. ஒன்றை எடுத்து அருகில் இருந்த முக்காலியில் வைத்தார். அது முஸ்தாபா மாஸ்ரருக்கான அன்பளிப்பு. ஒரு சேட்டும் சில இனிப்புப்பண்டங்களும் இரு சிறுவர் உடுப்புகளும் வைத்தார்– மற்றச் சுங்கானை எடுத்து சில கணம் உற்றுநோக்கி ஏதோ நினைப்புள் அமிழ்ந்தார். – ஆனால் கதிரவேலரோ சுங்கான் பாவிப்பதில்லை.– சுருட்டுத்தான்– ஒரு சுங்கானை மீள சூட்கேசுக்குள் வைத்தார்.

இந்த சுருட்டு விசயத்திலே கனடாவில் பல சிரமப்பட்டிருக்கிறார். "சுருட்டுப் பிடிச்சால் வீடு மணக்கும்" "பிள்ளைகளுக்கு கூடாது" "காப்பற் மணக்கும்" என்றெல்லாம் மகனிடமிருந்து கட்டுப்பாடுகள் வரும். என்ன செய்ய... 'வின்ரர்' என்றால் வெளியிலும் போகமுடியாது. கோடையில் ஒரு நாள் சுருட்டுப் பிடிக்க அருகிலுள்ள பூங்காவுக்கு சென்றபோதுதான் தேவசகாயம் பழக்கமானார்.

இருவரும் தம் மனச் சங்கடங்களை அடிக்கடி பரிமாறிக்கொள்வதுண்டு. தம்தம் மனைவியுடன் ஆறுதலாய் கதைக்கக் கூட கனடாவில் அவகாசம் இல்லாமல் போனதையிட்டு வருந்திக் கொள்வர், பேரப்பிள்ளைகளை மேய்ப்பதிலேயே தம் மனைவிமார் தம்மிடமிருந்து ஒதுங்கவேண்டியிருந்தது இவர்கட்கு ஆறாத ஆதங்கம்– என்ன செய்வது பிள்ளைகள் ஆசையாய் கூப்பிடுகிறார்கள் என்று எல்லாவற்றையும் விட்டு கனடா பறந்து வந்ததை புகைவதுண்டு.

துவாயையும் சவர்க் காரத்தையும் எடுத்துக் கொண்டு பின்புறம் போனார். மிகக் கிட்டடியில் இருந்து வந்த அழுகுரல் சத்தங்கள் அவர் காதில் விழுந்தது.

கக்கூசுக்கு போய்விட்டு வந்த சிறுவனை (சலீமா, நசீரோ அடையாளந் தெரியவில்லை) வினவினார்

'என்ன மகன் அழுது கேக்குது?"

"நாலாம் வூட்டு ரகிமோட பாத்திமா கிழவி மௌத்தாச்சுது" என்று சொல்லிக் கொண்டே அப்பால் போய்விட்டான்.

செத்த வீட்டில் இப்படி அழுகுரல்களை கேட்க ஓரளவு நிம்மதி வந்தது. கனடாவில் ராசையர் மரணமடைந்த போது பிரேதத்தை வீட்டில் வைத்திருக்கவில்லை. வீட்டில் ஒப்பாரி இல்லை. "பியூனறல் ஹோமில்" பார்வைக்கு வைத்திருந்தனர். கண்ணீர் விட்டனர். அவர் மனிசி கத்தி அழுததை மகன்மார் தடுத்து வைத்தனர்.

இந் நிகழ்வை கண்ணுற்ற கதிர்வேலருக்கு அதிர்ச்சியாய் போய்விட்டது. சுடலை இல்லை விறகில்லை நெஞ்சாக்கட்டை இல்லை கொள்ளி வைப்பு இல்லை போறணையுள் பிரேதத்தை தள்ளி விட்டு கறண்டில் எரித்து சாம்பல் கொடுத்தார்கள்.

"சாகிறதெண்டால் கனடாவில் சாவதில்லை" எனக் கதிரவேலர் அன்றே தீர்மானம் செய்து கொண்டார்.

கதிரவேலர் மீண்டும் வீட்டுள் புகுந்த நேரம்.

"ாத்தாலே தான் தெரியும் இண்டைக்கும் போட் ஓடுதா எண்டு" என முஸ்தாபா வள்ளிநாயகி ரீச்சருக்கு சொல்லிக்கொண்டிருந்தார்.

சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் அலுப்புத்தீர உறங்கினர் கதிரவேலர் தம்பதி. இவர்கள் விழித்த போது பொழுது சாய்ந்திருந்தது.

வள்ளிநாயகி மெதுவாய் பேச்சைத் தொடங்கினா "அங்க பிள்ளையள் என்ன குறைவைச்சதுகள்? பிடிவாதமாய் வந்திட்டியள்!"

"பாவம் அதுகள் அதுகள் பாட்டையே அதுகளுக்கு பார்க்க நேரமில்லை அதுக்குள்ளை எங்களாலையும் ஏன் கரைச்சல்?"

"அதுகள் கரைச்சலெண்டு சொன்னதுகளே?"

"அடி விசரி சொல்லியா தெரிய வேணும் விளங்க வேணும்! பெரியவன் அண்டைக்கொரு நாள் சின்னவனோடை கதைச்சது கீழே எனக்கும் விழுந்தது– அப்பா அம்மாக்கு வெல்பயார் எடுப்போமா எண்டு கேட்டவன். தன்னாலை பாக்கேலாது எண்டு முறையிட்டவன். பேஸ்மெண்டை ஆருக்கும் கொடுத்தால் கூட தனக்கு காசு வரும் எண்டு சொன்னவன். எங்களாலே ஏன் அதுகளுக்கு கரைச்சல்....."

"அதனாலதான் வெளிக்கிட டனீங்களாக்கும்" இது வள்ளிநாயகி

" சீ, அதனால இல்லை–ஆ– சிலதை நான் யோசிச்சுப் பாத்தன். வெளிக்கிட்டிட்டன்"

"அந்தச் சின்னன்கள் பாவம் அதுகளோட மல்லாடப் போற மாலதி பாவம்"

"அதுக்கு நான் என்ன செய்யிறது. ஆனால் அந்தப் பிள்ளையை நினைக்க மனவருத்தமாய்தான் இருக்குது மாமா, மாமி எண்டு அன்பு காட்டுற மருமகளை விட்டிட்டு வாறதெண்டால் எனக்கு

23 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சுழலும் உலகம்

# அல்ஜீரிய அவலங்கள் ஒரு தொடர்கதை!

தி.உ.மாகாந்தன்

அல்ஜீரியாவை ஒரு இஸ்லாமியக் குடியரசாக மாற்ற வேண்டும் என அல்ஜீரியாவின் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்தும் ஆயுதப் போராட்டம் இப்போது மூன்றாவது வருடத்தினுள் பிரவேசித்துள்ளது. இரண்டு மாத காலமாக தாக்குதல்களை மந்த நிலையில் வைத்திருந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் இப்போது அரசின் பலநிலைகள் மீதும் தமது தாக்குதல்களை மந்த நிலையில் வைத்திருந்த இஸ்லாமியத் தீவிரவாதிகள் இப்போது அரசின் பல நிலைகள் மீதும் தமது தாக்குதல்களை விஸ்தரித்துள்ளனர். ஜனாதிபதி லியமினே செருலாஸின் பேச்சுவார்த்தை ஒருபுறம், இராணுவப் பலப்பிரயோகம் என்ற இரட்டைக் கொள்கை இஸ்லாமியத் தீவிரவாதிகளின் இத்தாக்குதல்களால் இப்போது கேள்விக்குறியாகியுள்ளது.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் சமீபத்தில் ஒரு உயர் சுங்க அதிகாரியான அப்துல்லா மௌசுனியை கிழக்கு அல்ஜியர்சில் உள்ள டெர்காறு நகரிலுள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொன்றுள்ளதாக ஏபிஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. மக்களின் ஆதரவு இப்போது தலைமறைவு இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும், 1962ம் ஆண்டு அல்ஜீரியா பிரான்சிலிருந்து சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து அரசியல் நடத்தும் அரசியல்வாதிகளுக்குமிடையில் பிளவு பட்டுள்ளது. இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீள ஆரம்பித்திருக்கும் இந்த தாக்குதல்கள் ஒரு புறமாக இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீது இராணுவ அழுத்தத்தைப் பிரயோகித்துக் கொண்டு மறுபுறமாக சிறைகளில் இருக்கும் இஸ்லாமிய இரட்சண்ய முன்னணித் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துதல் எனும் ஜனாதிபதி செருலாசின் இருமுக அரசியல் தந்திரத்துக்கு அடியைக் கொடுத்துள்ளது. 29 மாதங்களுக்கு முன்னர் அல்ஜீரியாவில் நடந்த முதலாவது சுதந்திரமான தேர்தலின் முதலாவது சுற்றில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் வெற்றியடைந்ததும் அதனைத் தொடர்ந்து மேற்கு நாடுகளின் ஆசீர்வாதத்துடன் அல்ஜீரியாவின் இராணுவம் இந்த ஜனநாயகத் தேர்தலை இரத்துச் செய்தது. அன்று தொடங்கியதுதான் அல்ஜீரியாவின் இன்றைய அவலங்கள்.

இஸ்லாமியத் தீவிரவாதிகளால் முடுக்கி விடப்பட்டிருக்கும் இந்த புதிய தாக்குதல்கள் ஒரு புதிய பொருளாதாரத் தலையிடியையும் அல்ஜீரியாவுக்கு கொடுத்துள்ளது. அல்ஜீரியாவுக்கு தற்போதுள்ள வெளிநாட்டுக் கடன் 26 பில்லியன் டொலர்கள். சர்வதேச நிதி நிறுவனங்களிடமும், அல்ஜீரியாவுக்கு கடன் கொடுத்த வெளிநாடுகளிடமும் அல்ஜீரிய அரசு இந்தக் கடன்களை மீளக் கொடுக்க வேண்டிய கால எல்லையை நீடிக்குமாறு கோரியிருந்தது. அத்துடன் புதிய வெளிநாட்டு முதலீடுகளையும் வேண்டி நின்றது. ஆனால் இஸ்லாமியத் தீவிரவாதிகள் தமது தாக்குதல்களை விஸ்தீரணப்படுத்தி விரிவ படுத்தியிருக்கும் இன்றைய புதிய நிலை வெளி நாடுகளுக்கு தயக்கத்தையும் அல்ஜீரிய அரசுக்கு புதிய சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இஸ்லாமியத் தீவிவாதிகளது தாக்குதல்கள் முடுக்கப்பட்டிருப்பது அல்ஜீரிய அரசாங்கத்தை மாத்திரமல்ல அல்ஜீரியாவின் எதிர்காலம் குறித்த கவலையை பிரான்ஸ்; ஸ்பெயின், இத்தாலி மற்றும் அமெரிக்க அரசாங்கங்களுக்கும் ஏற்படுத்தியுள்ளது. காரணம் உள்நாட்டில் சீர்குலையும் சூழ்நிலைகளால் அல்ஜீரியாவிலிருந்து பெருமளவு மக்கள் தெற்கு ஐரோப்பாவை நோக்கி வெளியேறத் தொடங்கி விடுவார்கள் என்ற கவலையும் அவர்களை இப்போது சூழ்ந்துள்ளது. கடந்த சில வாரங்களில் புதிதாக இராணுவத்துக்குச் சேர்க்கப்பட்ட 25க்கும் மேலானோரை இஸ்லாமியத் தீவிரவாதிகள் கொன்றது இந்தக் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

அரசாங்கத்தின் செய்தித் தடைகளையும் மீறி அல்ஜீரிய நகர்களான தெலா, ரெனெஸ், ஜஜெல் துறைமுக நகர்ப்பகுதி போன்ற இடங்களில் இராணுவத்துக்கும், இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கடும் மோதல்கள் நடந்து வருவதாக அல்ஜீரியப் பிரஜைகளும் வெளிநாட்டு ராஜதந்திரிகளும் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டு ராஜதந்திரிகளின் கருத்துப்படி இஸ்லாமியத் தீவிரவாதிகளின் சமீபத்திய தாக்குதல்கள் அன்றாட வாழ்க்கையில் வன்முறைகள் பெருகுவதை உலகுக்கு காட்டும் முயற்சியாகவே உள்ளன எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த இருதரப்புக்குமிடையே சிக்கிக் கொண்ட அல்ஜீரிய மக்களின் நிலையே பரிதாபகரமானது. இஸ்லாமியத் தீவிரவாதிகளாலும் மக்கள் கோரமாக வெட்டிக்கொல்லப்படுகின்றனர். அரச கொலைக்குழுக்களாலும் மக்கள் கொல்லப்படுகின்றனர்.

இஸ்லாமியத்தீவிரவாத அமைப்பினுள்ளிருந்து வரும் தகவல்களும் திருப்திகரமானவை அல்ல. இவ்வமைப்புக்கள் பற்றித் தகவல் அறிந்தவர்களின் கருத்துப்படி இஸ்லாமிய இரட்சண்ய முன்னணியின் தலைவர்களால் மிகத் தீவிரம் வாய்ந்த வன்செயல் வெறிகொண்ட ஒரு சிறுகுழுவை கட்டுப்படுத்தமுடியாமல் உள்ளது. அதுமட்டுமல்ல இந்த தலைவர்களால் தமது சொந்த இராணுவப் பிரிவான ஆயுத இஸ்லாமிய முன்னணியைக் கூட கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. இந்த நிலை வன்முறை கலந்து விட்ட அல்ஜீரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களின் அவலங்களுக்கு முற்றுப புள்ளி வைப்பதற்கு எவ்வகையிலும் உதவாது. இந்த வன்முறைகளால் கொல்லப்பட்டவர்களை தொடர்பாக அல்லது பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக இதுவரை அரசாங்கத்தால் அதிகாரபூர்வமான புள்ளிவிபரங்கள் எதுவுமே இதுவரை வெளியிடப்படவில்லை. இதற்கான காரணம் உண்மையான இந்தப் புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட்டால் அது அல்ஜீரியாவின் 27 மில்லியன் மக்களை மாத்திரமல்ல, அல்ஜீரியாவின் அயல்நாடுகளையும் அதிர்ச்சியடையச் செய்யும் என்பதனால்தான் முக்கிய பிரஜைகள், உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டால் மாத்திரமே அரசாங்கம் அறிவிக்கிறது. மற்றைய மரணங்கள் குறித்து அரசு மௌனமே சாதிக்கிறது. ஆனால் அல்ஜீரியப் புத்திஜீவிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் கணிப்பின்படி இஸ்லாமியத் தீவிரவாதம் வன்முறைக் கிளர்ச்சியாக வெடித்த கடந்த இரண்டு வருடங்களில் குறைந்த பட்சம் நாலாயிரம் அல்ஜீரியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த சிலமாதங்களாக தினம் தோறும் சராசரியாக 40 பேர் கொல்லப்பட்டு வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் அப்பாவிப் பொதுமக்களே. அதுமட்டுமல்ல கடந்த செப்ரெம்பர் மாதத்திலிருந்து இஸ்லாமியத் தீவிரவாதிகளின் இலக்காக அல்ஜீரியாவில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் அமைந்தனர். இதுவரை அல்ஜீரியாவில் வசித்த 37 வெளிநாட்டவர்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்கள் அல்ஜீரியாவில் வசிக்கும் வெளிநாட்டவர்களை அல்ஜீரியாவை விட்டு வெளியேற்றுவதையும், அல்ஜீரியாவில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகளை நிறுத்துவதையும் மையயமாகக் கொண்டே நிகழ்த்தப்பட்டன. இதில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர்.

பகல் நேரங்களில் சந்தடி மிக்க அல்ஜீரிய வீதிகள் இப்போதெல்லாம் பொழுது சாய்ந்ததும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இரவு 11.30 தொடக்கம் காலை 4 மணி வரையிலான ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கிறது. ஏற்கனவே சீர்குலைந்து போய்க் கொண்டிருக்கும் அல்ஜீரியச் சமூகம் ஆயிரக்கணக்காக வெளியேறிச் கொண்டிருக்கும் வைத்தியர்கள், வழக்கறிஞர்கள், பொறியியலாளர்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள், முகாமையாளர்கள், மற்றும் முன்னணிப் பிரஜைகள் ஆகியவர்களால் மேலும் பாதிப்படைந்து வருகிறது. ஆனால் வெளியேறுபவர்களோ, இஸ்லாமியத் தீவிரவாதிகளின் அடுத்த இலக்காக தாங்கள் அமைந்து விடுவோமோ என்ற அச்சத்திலேயே நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள்.

சிறையில் இருக்கும் இஸ்லாமிய இரட்சண்ய முன்னணித் தலைவர்களான அலி பென்ஹாஜி, அபாசி மடாமி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த விரும்பிய ஜனாதிபதி ஸெருலாசின் முயற்சிகளும் கைகூடவில்லை. ஆனால் ஜனாதிபதியின் இந்த முயற்சி எல்லாத் தரப்பையும் திருப்திப்படுத்தவில்லை. அல்ஜீரியாவின் புத்திஜீவிகள் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாகரீகங்களில் ஆர்வங் கொண்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயகக் கட்சிகள் ஜனாதிபதியின் இந்த முயற்சி குறித்து அதிர்ச்சியும், அதிருப்தியும் அடைந்துள்ளனர். இதற்கான காரணம் இராணுவமும், இஸ்லாமிய இரட்சண்ய முன்னணியும் இக்கட்சிகளை விலக்கி தமக்குள்ளே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்தி விடுவார்களோ என்பதுதான். அரசியல்வாதிகள், இராணுவத்தினர், முன்னாள் அமைச்சர்கள், வர்த்தகர்கள், குடும்பப் பெண்கள், ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்கள், ராஜதந்திரிகள். . இப்படி அல்ஜீரியாவின் பல்துறையினருமே இன்று தமது நாட்டின் எதிர்காலம் குறித்து ஒரு பொதுவான, கலக்கமான மனநிலையிலேயே உள்ளனர்.

அரசாங்கம், இஸ்லாமியத் தீவிரவாதிகள் இந்த இரு தரப்பினர்க்கிடையேயும் மக்கள் எந்தப் பக்கத்துக்கும் சார்பு எடுக்க மறுக்கிறார்கள் என்பது ஒரு ஓய்வு பெற்ற உயர் இராணுவ அதிகாரியின் கருத்து. இன்றைய அல்ஜீரியாவைப் பொறுத்தவரை பெரும்பான்மை அல்ஜீரிய மக்கள் இந்த அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் புதிய முகங்கள் பதவிக்கு வருவதையே விரும்புகிறார்கள். அதேசமயம் இதுபோலவே பெரும்பான்மை அல்ஜீரிய மக்கள் ஒரு இஸ்லாமிய அல்ஜீரியக் குடியரசையும் ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் இன்றைய இஸ்லாமியத் தீவிரவாதிகளின் கிளர்ச்சி யதார்த்தத்துக்கு இசைவானது அல்ல. அதுமட்டுமல்ல ஒரு நாட்டை வழிநடத்தும் திறமையும் அற்றது என்பது அவர்களது கருத்து.

இஸ்லாமியத் தீவிரவாதம், இராணுவ அடக்குமுறை இந்த இரண்டு சக்திகளுக்கு இடையிலும் சிக்கித் தவிக்கும் அல்ஜீரியாவின் அவலங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான காரணங்கள் சமீபகாலங்களில் எதுவுமே இல்லை.

## நமச்சிவாய...

"தம்பி, நீங்க பதினெண்டுக் கெண்டாலும் வாங்க, எல்லாம் ரெடியாய் இருக்கும். நேரம் இருந்தா வெள்ளன வெண்டாலும் வந்தால் காரியமில்ல"

"டிங் டிங்ங்......"

" என்ன சாப்பாடெல்லாம் இண்டைக்கு கெதியா நடக்குது."

"இல்லசேர், இவங்கள் பிள்ளையள் வந்து பத்துப் பாசல் கேட்டுட்டுப் போறான்கள் அதுதான் கெதிக்கென செய்தனான். சாப்பிடுங்கோவன் சேர்"

"சரி போடு பார்ப்பம்"

"அவங்களுக்கு நீ இப்படி ஸ்பெசலாக்குடுத்தா உனக்கு கட்டுமோ"

"என்ன சேர், அப்படிக் கேட்டுப் போட்டயள். ஊரைக் காக்கிற பிள்ளையளுக்கு அவிச்சுப் போடுறத்தில என்ன அப்படி குறைஞ்சு போகப் போகுது"

"ஓம் அது சரி ஆனா எனக்குத் தெரிஞ்சது மாதிரி மற்றாக்களுக்கு தெரியாமல் இருந்தா சரி"

"அப்பு பாசல் எடுக்க வந்திருக்கிறம்."

"ஓம் நில்லுங்க. பத்துப்பாசல் இருக்கு எடுத்தெண்டு போங்கோ"

"டேய் கிழவா! நாங்க அவங்களுக்கு ஆரு சோறு போடுறாங்க எண்டு கண்டுபிடிக்கத்தான் வந்தனாங்க, உன்னை விடப்படாதடா, பிடிச்சு போஸ்ரில கட்டி சொல்ல வேண்டியதை சொன்னா சரி வரும்."

"தேச விரோதிகளுக்கு இதைவிடப் பாடம் என்னெண்டு சொல்லிறது"

ஒரு காட்போட் மட்டையுடன் கிழவன் பாடசாலைக்கு முன்னுள்ள போஸ்ரில் மண்டையைப் போட்டபடி. .. ஆனாலும் அந்தக் கிழவனின் இறப்பு மக்களுக்கு என்னவோ சொன்னபடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சோதிடம்...

என்று சில சோதிடர்கள் சொல்வதை வைத்துக் கொண்டு ஒரு புராதனக் கலைமீது நையாண்டியா? சோதிடக் கலைக்கு விஞ்ஞானம் என்கிற செயற்கைக் கால் எவரும் வைக்க முனையவில்லை. விஞ்ஞான பூர்வமாக விளக்கங்கள் அளிக்க முற்படுவதற்கு காரணம் அந்தப் பாஷைதான் பலருக்குப் புரியும் என்பதாலேயே உதாரணமாக அணுசக்தியை சாதாரண சினிமாப் பார்க்கும் பழக்கமுள்ள கல்வாசனையற்ற ஒருவனுக்கு புரிய வைக்க 'உலகம் சுற்றும் வாலிபனில் நம்ம வாத்தியார் குளிசைக்குள் மின்னலைப் புகுத்துவாரே அது மாதிரி' என சொல்வது போலத்தான்.

அடுத்தது இராகு கேதுக்கள் பற்றியது. இராகு கேது என்பவை நிஜக் கிரகங்கள் அல்ல வென்றும் அவை சாயாக் கிரகங்கள் என்றும் சோதிட அரிச்சுவடியாக சொல்லப்பட்டிருப்பது கூடத் தெரியாமல் விமர்சனமா? விளங்கப்படுத்த ஆங்கிலப் பதத்தை உபயோகிக்கிறேன். இதை NODES என்று சொல்லுவார்கள். சூரியன் சந்திரன் என்னும் இரு முக்கிய கிரகங்கள் செல்லும் 'புலப்படு பாதை' யின் திசைகளின் சந்திக்கும் புள்ளிதான் அது. இப்புள்ளி அசைந்து கொண்டே இருக்கும். அந்தப் புள்ளிக்கு அப்படி ஏன் கிரக அந்தஸ்து கொடுக்கப்பட்டது எனக் கேட்கலாம். அதற்கும் விஞ்ஞான உதாரணம் தான் காட்டவேண்டும். இரண்டு காந்தத்தை பக்கத்தில் வைத்துவிட்டு விளைவை அறிய காந்தங்களை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் காணாது. தேறிய காந்தப்புலத்தையும் அவதானிக்க வேண்டும். இது விஞ்ஞானக் குஞ்சங்களுக்கு சரிகை அல்ல. விஞ்ஞானத்தால் விஞ்ஞானத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அதற்குப் பெயர் 'ஜோசிய விஞ்ஞானப் புலுடா' வா? ஒரு பொருளால் இன்னொரு பொருள் மீது ஏற்படும் பாதிப்புகள் எல்லாவற்றையும் அதற்கான காரண சக்திகள் எல்லாவற்றையும் விஞ்ஞானம் கண்டுபிடித்துவிட்டதா? அப்படி எப்போதாவது விஞ்ஞானம் உரிமை கொண்டாடி உள்ளதா? அது அவ்வாறிருக்க இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானத்தினால் விளக்கமுடியாத விஷயங்கள் எல்லாம் பொய்த்துவிடுமா? நியூட்டனுக்கு முதலே புவியீர்ப்பு பற்றி இந்துக்கள் கூறியுள்ளார்கள். அது தாமதமாக எம்மை வந்து அடையவில்லை. விஞ்ஞானிகள்தான் தாமதமாக அதை அறிந்தனர். ஜோதிடம் எழுதப்பட்ட அதே வேத கால நூல்களில் புவியீர்ப்பு பற்றியும் உண்டு.

புராண மரபில் இருந்துதான் கிரகங்கள் இராசிகளின் குணம் பெறப்பட்டது என கட்டுரையாளர் எங்கு ஆராய்ந்தார். புராணங்கள் எழுதப்பட்டது எப்போது? ஜோதிடம் எழுதப்பட்டது எப்போது என்பதற்கு இந்துக்கள் கூறும் காலத்தை ஏற்காவிட்டாலும் நில அகழ் ஆய்வாளர்கள் கூறியவற்றையாவது அவர் எடுத்து நோக்கவில்லையா? ஜோதிடம் புராணத்தை முந்தியது. ஜோதிட விஷயங்களையும் சில இந்து தத்துவ விஷயங்களையும் விளக்க புராணங்களில் சில உருவக பாத்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அது தவறு? விஞ்ஞானத்தின் சில விஷயங்களை அதீதப்படுத்தி இன்று கற்பனையாக நம்பமுடியாத எத்தனையோ கதைகளும் திரைப்படங்களும் வந்துவிட்டன என்பதனால் விஞ்ஞானத்தை நையாண்டி பண்ண முடியுமா?

கட்டுரையைப் படித்த போது ஒன்று மட்டும் தெரிகிறது. மேலைத்தேச கீழைத்தேச வானியில் ஜோதிடங்களில் தகுந்த அறிவோ ஆய்வோ இன்றி வெறும் ஊகங்களுடன் அமைந்துள்ளது. பல இடங்களில் கட்டுரையாளரே அதை குறிப்பிட்டுள்ளார். வெறும் ஊகத்தை வைத்துக் கொண்டு நெடுநாளைய நம்பிக்கையை அசிங்கம் பண்ணுவது தப்பு! நெடுநாளைய நம்பிக்கை எல்லாம் சரியென்று நான் வாதிடவில்லை. பிழை என்று சொல்லும் போது அதைப் படித்து விட்டு வாருங்கள். பெறுமதியான காரணங்களைச் சொல்லுங்கள். வெறும் சொல நையாண்டிகள் ஆரோக்கியமான விளைவை மனித வளர்ச்சிக்கும் தராது: விஞ்ஞான வளர்ச்சிக்கும் தராது: அறிவு வளர்ச்சிக்கும் தராது.

# எண் தமிழ் பற்றி....

க.நீலாம்பிகை
(இலங்கையிலிருந்து)

கடந்த 4.3.1994 இல் தாயகத்தில் வெளியாகியிருந்த 'எண் தமிழ்' கட்டுரையின்படி தசம எண் வடிவத்தை (Decimal) தற்போது அராபிய சமஸ்கிருத தமிழ் எண்கள் கொண்டுள்ளன. உண்மையில் நவீன எண்கள் 'அல்கொவாரிலாமி' எனும் அரேபியரால் இந்தியாவிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பல சமயம் இலகுவாக்கப்பட்டு அரேபியாவிலுள்ள கார்டோவா என்னும் முஸ்லீம்களுக்கு மட்டுமான கல்லூரியில் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. இதை அடிலாட் (ADELARD) என்னும் ஆங்கிலேயர், தன்னையும் ஒரு முஸ்லீம் எனக்கூறி, அப்பாடசாலையில் கற்று பின் ஐரோப்பாவில் 12ம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளார். பின் மேலும் இலகுவாக்கப்பட்ட முறையில் அவை இந்தியாவை அடைந்துள்ளன. 100, 1000, 100000 எனும் எண்களின் பிரயோகம் சங்க காலத்தில் இருந்தே (கி.மு. 3ம் நூற்றாண்டு) தமிழில் இருந்துள்ளன. பூச்சியம் சூன்யம் என்பவை ஆரியர்களுடைய கருத்துக்கள். 1 அரேபியர்களுடையது. ஏனைய எண்வடிவங்களும் தசம பண்பும் தமிழினுடையது. தமிழில் முன்பு (உதாரணமாக) 3245 ஐ ங சூ உ ள ச ய ந என எழுதியுள்ளார்கள். 3x 1000+ 2x100+ 4x10+ 5 என்பதுதானே தசமப்பண்பு.

மலையாளத்திற்கும் தமிழிற்கும் மிகுந்த தொடர்புண்டு. கி.பி. 10ம் நூற்றாண்டளவில் தமிழில் இருந்து தோன்றியதுதான் மலையாளம் (சேரர்). அவ்வெண்களுக்குத்தான் தமிழுக்கு அடுத்தபடியாக நவீன எண்களுடன் அமைப்பில் அதிக ஒற்றுமை உண்டு. தமிழ் 6ம் (சா) தமிழ் 9 உம் ஏறக்குறைய ஒரே அமைப்பை உடையன. இவ் ஒற்றுமை 6ற்கும் 9ற்கும் இடையே உள்ள ஒற்றுமை போன்றது. அனேகமாக இவை தமிழ் மூலத்தில் இருந்து இலகுபடுத்தப்பட்டிருக்க வேண்டும் (அல்கோவாரிலொமியால்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாரம்பரிய...

எழுதிய காவியங்கள் ஆணின் சிறுமையைப் பற்றியும் எழுதாமல் விட்டது அதிசயந்தான். எப்படி எழுதுவார்கள்? பெண்களை தட்டிக் கொடுத்தே பணிய வைக்கவல்லவா அவை எழுதப்பட்டன. மனைவி கணவனைத் தொழலாம். கணவனும் மனைவியைத் தொழலாம். அது அவர்களின் அந்தரங்க அன்பின் நிமித்தம் வருவது. ஆனால் கணவன் நல்லவனோ-கெட்டவனோ கல்லோ-புல்லோ, எதுவானாலும் மனைவி அவனைத் தொழுது நடக்கவேண்டும் என்றால் அது படு அபத்தம். பதிபக்தி என்பார்கள். ஆனால் அந்தப் பதி மனைவிக்கு மேல் பக்தி கொள்ள வேண்டும் என்று சொல்லமாட்டார்கள். சிவ சக்தி பற்றிய கதைகளில் சக்தியிடம் சிவன் சொல்லும்போது சிவன் பணிந்து செல்வதையும் சக்தி சிவனிடம் செல்லும்போது சக்தி பணிந்து செல்வதையும் காண்பீர்கள். அந்தப் பரஸ்பர பணிவுதான் நியாயமானது. பெண்கள் உருவாக்கப்பட்ட போதே தரம் குறைந்த மூலப்பொருட்களால் உருவாக்கப்பட்டார்கள் என்று கருதப்படுகிறதா? பெண்களை ஏன் இப்படி கிள்ளுக்கீரையாக நினைத்து விட்டது இந்த தமிழ்-இந்து சமுதாயம், குடும்பத்தில் ஒரு பிரச்சனை-பிரிவு வந்து விட்டது என்றால் எந்தவொரு விசாரணைகளும் இன்றி பெண்ணின் மேல் பழியைத் தூக்கிப் போட்டுவிடுவார்கள். ஆண்களின் இளகிய உள்ளம் தவறு செய்யாதாம்? சரியோ பிழையோ ஆண்கள் செய்வதற்குப் பெண்கள் தலையாட்டி கொண்டிருப்பதுதான் வாழ்க்கையென்றால் பெண்களை ஆறறிவு படைத்த மனிதன் இனத்தில் இருந்து விலக்கி விலங்கினத்துனத்துடன் சேர்ப்பதற்கு ஒப்பாகும். அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அதைப் புரியாமல் சேவை செய்வதே ஆனந்தம் என பெண்கள் சமுதாயம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்கிறது.

குடும்பம் என்றால் அதில் ஆணும் பெண்ணும் ஒற்றுமையாக வாழ பணிவு என்பது அவசியம். எனவே பெண்கள் அடங்கி ஒடுங்கிப் போகத்தான் வேண்டும். இது சில பழமைவாதிகள் வாதம். ஆனால் அப்படியா ஆண்கள் நினைக்கிறார்கள். ஏதோ கூலிக்கு வைத்த வேலைக்காரி போல அல்லவா நினைக்கிறார்கள். அப்படி ஆண்டான்- அடிமையாய் வாழ்வதற்கு பெயர்தானா இல்லறம்? அதைத்தான் ஓம்பவேண்டும் என்று வள்ளுவரும் வரிந்து கட்டிக்கொண்டாரா? பணிவு, அன்பு, பாசம் எதுவென்றாலும் கொடுத்துத்தான் வாங்கவேண்டும். பசுமாட்டில் பால் கறப்பது போல ஏமாற்றிப் பலகாலம் பெற்றுக் கொள்ளமுடியாது.

பெண்களுக்கும் ஆண்கள் தமக்கிணையாக எப்போது பெருமதி அளிக்க நினைக்கிறார்களோ அன்று தமிழ்- இந்து-மக்களிடையில் ஒரு முன்னேற்ற உத்வேகம் பிறக்கும். உடைந்து போன மனங்களுக்கு ஒத்தடம் கிடைக்கும். இவ்வாறான ஒரு நிலையை இவ்வாறான ஒரு நிலையை கட்டுப்பாட்டுடன் தமிழ் ஈழத்தில் உருவாக்க முழுமூச்சாக இருக்கும் விடுதலை இயக்கத்தினர் பாராட்டுக்குரியவர்கள். புலம் பெயர் தளங்களில் சூழலின் பாதிப்பால் பெண்களின் கைகளில் சவுக்கு இடம்மாறி சகலமும் தலைகீழாக்கூடிய சந்தர்ப்பங்கள் காலத்தின் கட்டாயம்.

## சயனம்...

மனவருத்தமில்லையே? சுருட்டுக்கு காசு தா, முத்திரைக்கு காசுதா எண்டு சின்ன அலுவல்களுக்கு அவன்களிட்டை கெஞ்சுற மானக் கேட்டை அந்தப் பிள்ளை கேக்காமல் செய்யிற உபகாரங்களிலைதானே மறந்திருந்தனான். பாவந்தான்....... என்ன செய்யிறது?" கதிரவேலர் பெருமூச்சோடு நிறுத்தினார். வள்ளி நாயகியார் மௌனமாய் இருந்தார்.

அன்று இரவும் முடிந்து காலை புலர்ந்தது. காலைக் கடன்கள் உணவு எல்லாம் முடிந்து முஸ்தாபா இவர்களை பேட்டியெடுத்துக் கொண்டிருந்தார்- முஸ்தாபா இன்று அச்சுக்கூடத்துக்கு போகவில்லை- அவர் இப்போ அச்சுக் கூட முதலாளி.

அந்நேரம் சாஜகான் வந்து அன்று கிளாலிப்படகுச் சேவை ஊர்ஜிதமானதை அறிவித்து விட்டு சென்றான்.

"நீங்கள் கனடா போனீங்கள் அதிலை எனக்குப் பொறாமை இல்லை. இப்போ உயிருக்கு ஆபத்து இருந்தும் உங்களால யாழ்ப்பாணம் போக முடியுதே. இப்பதான் எனக்குப் பொறாமையாயிருக்கு. அங்க பிறந்து அங்க வளந்து அங்க படிச்சு அங்க படிப்பிச்சு ஏன் அங்க உள்ளவங்களோட பழகி அவர்கள் பேசுறதையே பேசி அந்தக் காத்தையே சுவாசிச்சு என்னால எல்லாம்" முஸ்தாபா கண் கலங்க கூறினார்.

கதிரவேலராலயோ, வள்ளி நாயகியாலயோ எதுவும் சொல்ல முடியவில்லை ஏதோ உண்மை அம்மணமாய் கண்முன் நின்றது.

வாத்தியார் தம்பதியர் விடை பெறும் நேரம் எல்லார் கைகளையும் தழுவி விடைபெற்றனர். உபகாரங்களுக்கு நன்றி கூற முடியவில்லை ஏனெனில் அது மனதில் பசுமரத்து ஆணிபோல் இருந்தது.

வெள்ளையர் போல் "தாங்ஸ்" சொல்லிய கையுடன் உபகாரத்தை மறக்கும் பண்பாடு எமக்கில்லையே. நன்றி சொல்லிக்கொள்ளாமல் அதை மனதில் சுமந்து புன்னகையில் இனங்காட்டி புறப்பட்டனர்.

இப்போதும் முஸ்தாபா கூட வந்தார் அவர் கதிரவேலரின் கைகளைப் பற்றி கனிவுடன் கேட்டார்.

"கதிரர் நீங்கள் ஏன் தான் திரும்பி வந்தனீங்களெண்டு எனக்குச் சொல்லக் கூடாதா என்ன?

"நாங்கள் திரும்பி வரவில்லை. திரும்பிப் போறம். யாழ்ப்பாணத்துக்கு அங்கை எனக்கு கடமை இருப்பதை இப்போது தான் நினைச்சன்"

மௌனம்- நீங்கள் நினைப்பது போலவே முஸ்தபாவும் நாட்டுப்பற்றைப் பற்றி யோசிச்சார். அதுதான் இல்லை- கேளுங்கள் கதிரவேலர் தொடர்கிறார்.

"பிள்ளையள் கூப்பிட டோனே எல்லாத்தையும் மறந்து நான் அங்க ஓடிட்டன். எனக்கு ஐயா இருப்பதை அவருக்கு நான் செய்ய வேண்டிய கடமை இருப்பதை அங்கு போய் அதுவும் ஒரு கடையில் கிடந்த சுங்கான் தான் ஞாபகப் படுத்திச்சுது- அதுதான் உனக்கு நான் தந்த சுங்கான் போல என்ர ஐயாவுக்கு வாங்கிக் கொண்டு போறன்.... முஸ்தாபாவின் கண்களை கண்ணீர் வருடியது.

கதிரவேலர் தொடர்ந்தார்

"பிள்ளைகளோட இருக்கோணும் பிள்ளையள் எங்களுக்கு அதுகள் இதுகளைச் செய்யவேணும் எண்டு நாங்கள் எதிர்பார்ப்பது போலத்தானே என்ரை ஐயாவும் என்னட்டையிருந்து எதிர்பார்ப்பார்!"

வண்டி நிற்பாட்டப்பட்ட அதிர்வில்தான் வள்ளிநாயகி அதிர்ச்சியில் இருந்து மீண்டா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

*பிற்பகல் சுமார் 6 மணி தொடக்கம் நள்ளிரவு பல்வேறு விதமான சித்திரவதைக்குள்ளாக்கி பின்னர் சுமார் 50, 60 பேரைக் கொண்ட ஜேவிபி படுகொலைக் குழுவினரால் இறுதியில் இவர்கள் படுகொலை செய்யப்பட்ட போதிலும் அத்தோடு அக்கொலைகாரர்கள் திருப்தி அடையவில்லை. நந்தசேன சில்வாவின் தலையை உடலில் இருந்து துண்டித்தனர் ஜயவர்தனவின் வலது கையை முழங்கைக்கு அருகில் வெட்டினர் பின்னர் வெட்டப்பட்ட அக் கைத் துண்டை, நந்தசேனவின் உடலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட தலையில் வாயுள் திணித்து அத்தலையை தெருவில் உள்ள மரம் ஒன்றில் தொங்கவிட்டு தெருவில் பயணம் செய்பவர்களின் காட்சிப் பொருளாக்கினர். ஜேவிபியை பகிரங்கமாக விமர்சனம் செய்தது மட்டுமே நந்தசேன சில்வா இழைத்த ஒரே ஒரு தவறாகும். ஜயவர்தனவும் அவருடன் சேர்த்து கொலைசெய்யப்பட்ட ஏனையவர்களும் ஜேவிபிக்கு எதிராக எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. ஜயவர்தனவும் இன்னுமொரு நபரும் இழைத்த குற்றம் நந்தசேன சில்வாவுடன் இருந்ததாகும். மற்றைய இருவரும் ஏன் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை கொலைகாரர்கள் அறிவார்களா என்பதும் கேள்விக் குறியாகும்*

பயங்கரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட உபாயத்தின் மூலமாக மக்களுக்கு பயிற்சியோ அல்லது போராட்டத்தின் ஊடாக புடம் போடப்படலோ கிடைக்கப் போவதில்லை. தமது சக்தி பற்றிய நம்பிக்கையும் மக்களுக்கு ஏற்படப் போவதில்லை. இதன் மூலமாக பீதியையும் நடுக்கத்தையும் ஏற்படுத்தியே மக்கள் போராட்டத்திற்குள் இழுக்கப்படுகின்றனர். மக்கள் மத்தியிலே பீதியும் நடுக்கமும் நிலவும் வரையே மக்கள் தம்மைச் சுற்றி இருப்பர். அதனையும் விட பீதியையும் நடுக்கத்தையும் ஏற்படுத்தக் கூடிய பிறிதொரு சக்தி தோன்றியவுடன் மக்களால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு கரைந்துபோய்விடும். அது மட்டுமன்றி எவர்களால் கூடுதலாக பீதியையும் நடுக்கத்தையும் ஏற்படுத்த முடிகின்றதோ அவர்களுக்கு அடிபணியும் நிலையும் ஏற்படும். அவ்வாறே பயங்கரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட இவ் உபாயத்தின் மூலமாக ஆளும் வர்க்கம் பலம் பெறுவது மட்டுமே நிகழும். இதனை நாம் ஜேவிபி நடவடிக்கைகளின் போது தெளிவாகக் கண்டோம்.

ஜேவிபி அங்கத்துவ இணைப்பாக்கம், தலைமை, செயற்பாட்டுக்கான வேலைத்திட்டம், உபாயம் ஆகிய அனைத்தையும் நோக்கும் போது ஜேவிபி பாட்டாளி வர்க்க இயக்கம் அல்ல என்பதும் குட்டி முதலாளித்துவ இயக்கமே என்பதும் தெளிவாகிறது.

ஜேவிபி குட்டி முதலாளித்துவ அமைப்பு மட்டுமல்ல அது சிங்கள குட்டி முதலாளித்துவ அமைப்பாகும். அங்கும் இங்குமாக தமிழ் இளைஞர்களும் முஸ்லிம் இளைஞர்களும் சிறிய எண்ணிக்கையினர் இருந்த போதிலும் அது கவனத்தில் கொள்ள முடியாத அளவேயாகும். புனருத்தாரன திணைக்கள புள்ளி விபரங்களின்படி (6342 பேர் தொடர்பான விபரங்கள்) ஜேவிபி அங்கத்தவர்களில் 98.4 வீதம் சிங்களவர்களாகும். தமிழ் முஸ்லிம் பறங்கியர் உட்பட ஏனைய சகல இனத்தவர்களதும் பிரதிநிதித்துவம் 1.6 வீதம் மட்டுமேயாகும். ஆனால் நாட்டின் மொத்த சனத்தொகையை கருத்தில் கொண்டால் சிங்கள பிரதிநிதித்துவம் சுமார் 74 வீதமாகும்.

மதரீதியாக எடுத்துப் பார்க்கும் போதும் ஜேவிபி அங்கத்தவர்களில் 97 வீதமானோர் பௌத்தர்களாகும். கிறிஸ்தவர் கத்தோலிக்கர், இந்து, இஸ்லாம் ஆகிய மதத்தைச் சார்ந்தோர் 3 வீதம் அளவு குறைந்த விகிதாசாரமேயாகும். (புனருத்தாரன திணைக்கள புள்ளிவிபரங்களில் இருந்து) இதற்கமைய ஜேவிபியின் இணைப்பாக்கம் சிங்கள-பௌத்த அடித்தளத்தைக் கொண்டது எனவும் பிரதானமாக சிங்கள பௌத்த குட்டி முதலாளித்துவ அரசியல் ஸ்தாபனம் எனவும் கூறமுடியும். அதன் வேலைத்திட்டம், நோக்கங்களும் கோரிக்கைகளும் அதற்கு பொருத்தமானவையாகவே இருந்தன.

**ஜேவிபி வன்முறைச் செயல்களின் சமூகவியல் ரீதியான காரணங்கள்;**

ஜேவிபி தனது நோக்கங்களை அடைவதற்காக முன்னெடுத்த செயல் முறைகள் முதலாளித்துவ ஆட்சியாளர்களால் தமது இராணுவம், பொலீஸ், கொலைக் கும்பல்களை ஈடுபடுத்தி செயல்படுத்தும் குரூர, மிலேச்ச அடக்குமுறைகளைவிட எவ்விதத்திலும் சளைத்தவை அல்ல.

"மரணத்திற்கு மரணம், சித்திரவதைக்கு சித்திரவதை, தீவைப்புக்கு தீவைப்பு குழந்தை குடும்பங்களை அழித்தல்" (ஜேவிபியால் 1989 மார்ச் மாதம் 22ம் திகதி நடாத்தப்பட்ட எதிர்ப்பு இயக்கம் தொடர்பாக தேசபக்த மக்கள் இயக்கத்தால் 1989 மார்ச் 12ம்திகதி வெளியிடப்பட்ட பிரசுரத்தைப் பார்க்கவும்)

இது ஜேவிபியின் கோஷமாகும். ஒன்றுக்கு ஒன்று என்னும் ரீதியில் இக்கோஷம் ஜேவிபியால் செயல்படுத்தப்பட்டது என்பது உண்மை ஆனால் ஜேவிபியினால் இம்சைப்

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்ணன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ.லோகநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தப்பட்டவர்கள் இக்கோஷத்தின் மூலம் கூறப்படுபவர்கள் தான் என்றும் இல்லை. வெறுமனே ஜேவிபியின் கருத்தை அங்கீகரிக்காத காரணத்தால் ஜேவிபியை விமர்சித்த காரணத்தால் குரூரமான முறையில் இம்சைப் படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கையில் அடங்கார். மேலே கூறப்பட்ட ஒன்றுக்கு ஒன்று செய்தல் மார்க்சிஸ உபாயம் அல்ல. அது முதலாளித்துவ வர்க்கத்தின் அல்லது பிற்போக்கு வர்க்கத்தின் உபாயமாகும். ஆகக்குறைந்தது ஒன்றுக்கு ஒன்று செய்தல் என்ற ரீதியாவது இம்சைப்படுத்தலை செய்திருந்தால் அதில் ஏதோ ஒரு பண்பற்ற நியாயமாவது இருக்கிறது என்று கூறமுடியும். ஆனால் மேலே உள்ள கோஷத்தில் கூறப்பட்டவை எதையுமே செய்யாத மனிதர்கள் மீது இம்சையை கட்டவிழ்த்து விடும்போது அப் பண்பற்ற நியாயத்தை கூட பாதுகாக்க முடியாது போயிற்று.

பிற்போக்கு ஆளும் கும்பல் தனது ஆயுதப்படை பொலீஸ், படுகொலைக் கும்பல் மூலமாக செய்விக்கும் குரூர வன்முறை நடவடிக்கைகள் ஆச்சரியத்திற்குரியவை அல்ல. அவை அவர்களுடைய ஆயுதங்களாகும். ஆனால் மானிட சமுதாயத்தின் விமோசனத்திற்காக போராடும் பாட்டாளிவர்க்க இயக்கம் என கூறிக்கொள்ளும் இயக்கம் அவ் ஆயுதத்தை அவ்வாறே பாவித்ததை காண்பது ஒரு பாரதூரமான பிரச்சனையாகும்.

ஜேவிபியின் வன்முறை நடவடிக்கைகள் பிற்போக்கு வர்க்கத்தினர் வன்முறை நடவடிக்கைகளைப் போன்றே மனிதத் தன்மை அற்றதும், மிலேச்சத்தனமானதும், குரூரமானதுமாகும் திடீரென துப்பாக்கி பிரயோகம் செய்து தப்பி ஓடிய இடங்களைத் தவிர சுதந்திரமாக பயம் ஏதும் இன்றி படுகொலைகளைச் செய்த சந்தர்ப்பங்களைப் பார்க்கும் போது ஜேவிபியினர் எவ்வளவு தூரம் கடும் சினத்தால், கோபத்தால் பழிதீர்க்கும் உணர்வால் பீடிக்கப்பட்டிருந்தார்கள் என்பதைக் காணலாம்.

இது தொடர்பான உதாரணங்களை வேண்டிய அளவுக்கு வழங்க முடியும் ஆனால் அதற்கான அவகாசம் இங்கு போதாது. ஓரிரு உதாரணங்கள் பின்வருமாறு: அல்லே பிரதேசத்தின் கஸ்முதுன்வத்தையைச் சார்ந்த நந்தன சில்வா, மொரட்டுவை பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டி.எம். ஜெயவர்தன உட்பட இவரைப் படுகொலை செய்தவிதம் இவ்வாறான ஒன்றாகும். பிற்பகல் சுமார் 6 மணி தொடக்கம் நள்ளிரவு பலவேறு விதமான சித்திரவதைக்குள்ளாக்கி பின்னர் சுமார் 50, 60 பேரைக் கொண்ட ஜேவிபி படுகொலைக் குழுவினரால் இறுதியில் இவர்கள் படுகொலை செய்யப்பட்ட போதிலும் அத்தோடு அக்கொலைகாரர்கள் திருப்தி அடையவில்லை. நந்தசேன சில்வாவின் தலையை உடலில் இருந்து துண்டித்தனர் ஜயவர்தனவின் வலது கையை முழங்கைக்கு அருகில் வெட்டினர் பின்னர் வெட்டப்பட்ட அக் கைத் துண்டை, நந்தசேனவின் உடலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட தலையில் வாயுள் திணித்து அத்தலையை தெருவில் உள்ள மரம் ஒன்றில் தொங்கவிட்டு தெருவில் பயணம் செய்பவர்களின் காட்சிப் பொருளாக்கினர். ஜேவிபியை பகிரங்கமாக விமர்சனம் செய்தது மட்டுமே நந்தசேன சில்வா இழைத்த ஒரே ஒரு தவறாகும். ஜயவர்தனவும் அவருடன் சேர்த்து கொலைசெய்யப்பட்ட ஏனையவர்களும் ஜேவிபிக்கு எதிராக எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. ஜயவர்தனவும் இன்னுமொரு நபரும் இழைத்த குற்றம் நந்தசேன சில்வாவுடன் இருந்ததாகும். மற்றைய இருவரும் ஏன் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை கொலைகாரர்கள் அறிவார்களா என்பதும் கேள்விக் குறியாகும்

கண்டிப் பிரதேசத்தில் ஜேவிபியால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு இயக்கத்துடன் இணையாமல் வேலைக்குச் சென்ற காரணத்திற்காக பஸ்வண்டிச் சாரதி ஒருவருக்கும் அரசாங்க ஊழியர் ஒருவருக்கும் வழங்கப்பட்ட தண்டனை மேலும் இரு உதாரணங்களாகும். எதிர்ப்பு தினத்தன்று வண்டியை ஓட்டிய தவறுக்காக அச் சாரதியின் இரு கைகளும் வெட்டப்பட்டு சாரதிக்குரிய ஆசனத்தில் இறக்கும் வரை கட்டி வைக்கப்பட்டதோடு மேலே குறிப்பிட்ட அரசாங்க ஊழியரின் தலை வெட்டப்பட்டு, வெட்டப்பட்ட தலை தட்டு ஒன்றில் வைக்கப்பட்டு அவரது மனைவிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மொனராகலை மாவட்டத்தில் தம்பகல்ல பிரதேசத்தில் முன்னர் ஜேவிபியிலிருந்து விலகி ஜனதா சங்கத்துடன் இணைந்து வேலைசெய்து அதன்பின்னர் ஜனதா சங்கத்தில் இருந்தும் விலகுவதாக பகிரங்கமாக அறிவித்து மீண்டும் ஜேவிபியுடன் இணைந்து வேலை செய்ய உடன்பட்ட களு புஞ்சி எனப்படும் விஜித நந்தசிறி உட்பட நால்வர் பேச்சுவார்த்தைக்கு என அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இவர்கள் கொல்லப்பட்டது உயிரோடு வயிறும் மார்பும் வெட்டப்பட்டு குடல்களும் இருதயமும் வெளியே இழுக்கப்பட்ட நிலையிலேயேயாகும். மரண ஓலம் இடும்போதும் துண்டு துண்டாக இவர்களை வெட்டிய கொலைகாரர்கள் இவர்களைக் கொன்றது மட்டற்ற திருப்தியுடனேயாகும். இந்நால்வரில் களு புஞ்சி மட்டுமே அரசியலில் ஈடுபட்டார். மற்ற மூவரும் ஜேவிபியுடன் இணையாததே செய்த தவறாகும்.

மொனராகலை மாவட்டத்தின் மீகஹபிட்டிய பிரதேசத்தில் ஏழு எட்டு பேரைக் கொலை செய்த ஜேவிபி அங்கத்தவர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரால் படுகொலை செய்யப்பட்ட அனைவரும் மனிதத் தன்மை அற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டே கொல்லப்பட்டனர். கைது செய்யப்பட்ட பின்னர் அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில், கொல்லப்படுபவர்களை கத்தியால் குத்தி இரத்தம் ஓடச்செய்து பயத்தைப் போக்கிக்கொள்ளுமாறு தனது பிரதேசத்தலைவரால் தனக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாக கூறினார்.

குருணகலை மாவட்டத்தில் மாகோ பிரதேசத்தில் இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டுள் நுழைந்து அவருடைய மனைவியையும் குழந்தைகளையும் கொன்றதுடன் நிறுத்திக் கொள்ளாத ஜேவிபி தேசபக்த மக்கள் இயக்கத்தின் வீரர்கள் நான்கு வயதுடைய குழந்தையின் தலையை இரண்டாகப் பிளந்து மூளையை எடுத்து மேசையில் காட்சிக்காக வைத்துச் சென்றனர். பொல்காவலை பிரதேசத்தில் இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டுள் நுழைந்து அவரின் ஆறுமாத பெண் குழந்தையை கிணற்றுள் போட்டு கொன்றனர். கொலைகாரர்களின் கையில் சிக்கியது இம் மழலைச் செல்வம் மட்டுமேயாகும்.

ஜேவிபி யினால் கொலை செய்யப்பட்டவர்களின் மரணச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சடங்குகளுக்கு தடைவிதிக்கப்பட்டது. இறுதிக் கிரிகைகளில் பத்து பேருக்கு மேல் கலந்து கொள்வது, வெள்ளைக் கொடி ஏற்றுவது, பெட்டியினுள் பிரேதத்தைப்போட்டுமுடி புதைப்பது, புதைத்த பின்னர் மயானத்தில் அடையாளக்கோபுரம்கட்டுவது (புதை குழியை மண்ணினால் உயர்த்துவது கூட தடை செய்யப்பட்டது) ஆகியவற்றுக்கு தடைவிதிக்கப பட்டது. கொலை செய்யப்பட்டவர்களை முழங்காலுக்கு மேல்உயர்த்திக் கொண்டு செல்வதற்கு கூட தடை விதிக்கப்பட்டது இக்கட்டளைகளை மீறுபவர்களுக்கு ஜேவிபியின் வாக்கியங்களிலேயே கூறுவதாயின் "குரூர மரணம்" உரிமையாக்கப் பட்டது. அதி பிற்போக்கு சக்திகள் கூட தம்மால் படுகொலை செய்யப் பட்டவர்களுக்கு எதிராக இவ்வாறான கட்டளைகளை பிறப்பிக்க வில்லை. ஜேவிபியினர் பிரேதத்தை கூட பழிவாங்கினர்.

மனிதத்திற்கே இழிவை ஏற்படுத்தும் இவ்வாறான இம்சைகளுக்காக அடிப்படைச் சமூகவியல் காரணங்கள் என்ன? ஒரு சிலரைப் பொறுத்தவரை இம் மிலேச்சத்தனம் சிங்களவர்களது வரலாற்றுரீதியான மரபுரிமையாகும்.

இவர்களது கூற்றின்படி ஒரு புறம் சிறுபராயம் தொடக்கம் சென்ற பௌத்த கோவில்களின் சுவர்களில் தவறு இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கும் நரகத்தைப் பற்றிய சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன. இயம மகாராசனின் கட்டளைப்படி இயம தூதுவர்களால் வழங்கப்படும் பல்வேறுவிதமான சித்திரவதைகள் பற்றிய உணர்வு, சிறு பராயம் தொடக்கம் சிங்கள பௌத்தர்களின் மனதில் பதிக்கப்பட்டுள்ளது. மறு புறம் சிங்கள கொடியில் காணப்படுவது மிருகமாகும். தேசியக் கொடி மூலமும் மிருக உணர்வே ஊட்டப்படுகிறது ஆகியவாறு மிலேச்சத்தனம் என்பது சிங்களவர்களது வரலாற்று ரீதியான உரிமை என்னும் கருத்தை முன்வைக்கின்றன. சிலர் இக்கருத்தை உறுதியாக கொண்டுள்ளனர்.

இக் கருத்தை வன்மையாக தாக்கும் இன்னுமொரு சாரார் ஜேவிபியினர் மார்க்சிஸத்தை அணைத்துக் கொண்டதே அவர்கள் கடைப்பிடித்த குரூர வன்முறைக்கான காரணம் எனக் கூறுகின்றனர். மேலே உள்ள கருத்தை முன்வைப்பவர்களும் இக் கருத்தை முன்வைக்கின்றனர். ஜாதிக சிந்தனையின் பிரதான ஆசானாகிய குணதாச அமரசேகர இக்கருத்தையே உறுதியாகக் கூறுகின்றார்.

அவர் இவ்வாறு கூறுகிறார்.

"இப்படுகொலைகளுக்கு அவசியமான 'தருமவரத்தை' அவர்கள் பெற்றுக் கொண்டது ஏதோ ஒரு தரும மெய்யறிவில் இருந்தாகும். இப்படுகொலைகள் செய்யப் படவேண்டிய நல்ல காரியங்கள் என்றே அத் தரும மெய்யறிவு அவர்களுக்கு போதித்துள்ளது.

...... பௌத்த கோவில்களின் சுவர்களில் வரையப்பட்டுள்ள இயம தூதுவர்களின் சித்திரங்களில் இருந்து அல்ல இத் 'தரும வரத்தை' அவர்கள் பெற்றுக் கொண்டது. பௌத்த கோவில் சுவர்களில் அல்ல, அவர்களது உள்ளச் சுவர்களில் செதுக்கப்பட்டிருந்த சந்ததி சந்ததியாக வரும் தரும மெய்யறிவை அழித்து அதன்மேல் புதிய தரும மெய்யறிவை செதுக்குவதில் வெற்றி கண்ட பிரபல மதத்திற்கு தத்துவத்திற்கு இவ் இளைஞர்கள் இரையாகியிருந்தால் மட்டுமே இவ்வாறான ஒன்று நேர்ந்திருக்க முடியும்....

அவர்கள் உள்ளத்துள் இத் தர்ம மெய்யறிவை தோற்றுவித்த, அவர்களை இரையாக்கிய இந்த மத தத்துவம்தான் என்ன? அது வேறு எதுவும் அல்ல. இவ் இளைஞர்களால் தமது விமோசனத்துக்காக உள்ள ஒரே ஒரு பாதை என கருதப்பட்ட மார்க்சிஸம்தான்" குணதாச அமரசேகரவால் எழுதப்பட்ட 'காலைக் கதிரிலிருந்து அருணோதயத்திற்கு' (சிங்கள மூலம் என்னும் நூலில் 73-74 ம் பக்கங்கள்)

தொடரும்

## தொடர்ந்தால் தொடரும்...

அந்த 'ஒன்றும்' தயார்.

"எனக்கெண்டால் நான் கொழுத்துக் கொண்டு வாறமாதிரி இருக்குது. நீங்கள் இப்படி சொல்லுறியள்" அம்மணியை திசை திருப்பினேன்.

"தம்பி பகிடி விடாதையுங்கோ. இந்த நாட்டில நல்லாய் சாப்பிடவேணும். குளிர் எண்டால் குளிர். வெய்யில் எண்டால் வெய்யில் உடம்பு தாங்காது." அம்மணி அடுக்கிக்கொண்டே போனா.

"எனக்கு கொஞ்சம் வேலையும் செய்ய இருக்கு..." என்று அம்மணியை குறுக்கிட்டேன்.

"பகிடி விடாமை இருந்து இரவு சாப்பிட்டு போம்"

"இல்லை .....உண்மையாய் கொஞ்சம் வேலையிருக்கு"

"நாங்களும் உம்மை போலதான் உடனை திரும்ப வேணுமெண்டால் ஒரு அலுவல் இருக்கு எண்டு சுத்துறனுங்கள் தான். .. இரும் இருந்து சாப்பிட்டு போம்" அம்மணி அன்புகட்டளையிட்டா. நான் அடிபணிந்தேன்.

எனக்கு கதை எதிலும் ரசனை ஏற்படவில்லை எண்ணமெல்லாம் வந்த பொருட்கள் என்னவாக இருக்கும் என்பதில்தான். அனேகமாக கடிதமும் வந்திருக்கும். ஒரு கிழமைக்கு அதையே திரும்பத்திரும்ப படித்து இன்புறலாம். இது 'நா' விவகாரம் என்றபடியால் வைத்து இழுத்தடிக்குதுகள். இதுவே 'சீட்டு' விவகாரம் என்றால் கதவையே திறந்திருக்காதுகள்.

"அதுசரி.. ஆர் ஊரிலை இருந்த வந்தவை, அங்கை நிலைமை எப்படியாம்" என்றேன்.

"இல்லை எனக்கு தெரியும்தான் அங்கை ஒரே பிரச்சனை எண்டு இப்ப எப்படி எண்டுதான்...."

"நான் பிரச்சனையைபற்றி கதைக்கேல்லை... வந்த ஆளைப்பற்றித்தான் சொல்லுறன்"

"யாரது"

"யாரதோ?" என்ற அம்மணி "பிள்ளை அந்த சாமான்களை கொஞ்சம் கீழை கொண்டு வாறியே" என்றா மாடியை நோக்கி.

பிள்ளையோ யாரது? எனக்கு எதுவுமே புரியவில்லை. படிகளில் யாரோ நடந்து கீழே வருவது புரிந்தது. ஒருகணம் ஒரேகணம் எல்லாமே நின்றுபோயின. வந்திருப்பது அதே 'நாகு' தான்.

'நாகு' வை பார்த்த கணத்தில் இருந்து எதுவுமே கேட்கவில்லை, தெரியவில்லை, மணக்கவில்லை. அவர்கள் என்ன கேட்டிருப்பார்கள் என்பதில் பிரச்சனை இல்லை. அவற்றுக்கு நான் என்ன பதில்கள் கொடுத்திருப்பேன் என்பது எனக்கு தெரியாது. எதுவுமே ஞாபகத்தில் இல்லை.

அங்கிருந்து வெளியேறும் போது உணர்ந்தேன் 'நா'வை பார்த்ததில் இருந்து மேரியையும் அவளின் தொலைபேசி அழைப்பையும் மறந்திருந்திருக்கிறேன்.

தொடர்ந்தால் தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தொடர் நாடகம்**

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

**தமிழில்: நேசன்**

**எங்களுக்கு அவன்மேல் கோபம் இல்லை எங்களுக்கும் அவனுக்கும் இடையில் பெரிய இடைவெளி இருக்கின்றது. அவ்வளவுதான். அவன் கட்சியில் சேர்ந்ததற்குக் காரணம் அது அவனுக்கு எடுக்கவேண்டிய ஓர் சரியான முடிவாக இருந்தது. நாங்கள் இருவரும் சேர்ந்ததற்குக் காரணம் எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.**

ஹோடரர்: அதன் அர்த்தம் என்னவென்றால் உனக்கு முக்கியமானது, வயிறு புடைக்கச் சாப்பிடுவது. மற்ற விசயங்கள் எல்லாம் அதற்குப் பிறகு தான். ஹியுகோ மற்ற விசயங்களை சுயமரியாதை என்று கூறிக் கொள்கிறன். அவன் அவ்வாறு அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதை யாரும் மறுக்க முடியாது. தமக்கு விரும்பிய சொற்களை எவனும் தாம் விரும்புவது போல பாவிக்கலாம்.

ஸ்லிக்: அது சுயமரியாதை இல்லை. அவன் சொல்வது தான் சுயமரியாதை எனில் அது எனக்கு அருவருப்பை தருகிறது. அவன் தன் தலைக்குள் வந்த சொல்லை உபயோகிக்கிறன். ஹியுகோ தலையால் சிந்திப்பவன்.

ஹியுகோ: அப்படியென்றால் நான் எதனால் சிந்திக்க வேண்டும் என்கிறய்?

ஸ்லிக்: உம்முடைய வயிறு பெருத்திருக்கிறது. எனது நண்பரே. நீர் சிந்திப்பது உமது தலையால் அல்ல. உனக்கு பசி என்றால் என்னவென்றே தெரியாது. நீயும் எனது அம்மாவைச் சந்திக்க வரும் சமூக சேவையாளர் மாதிரித் தான். எனது அம்மா குடித்திருக்கும் வேளை இந்த சமூகசேவையாளர் வந்து எனது அம்மா சுயமரியாதையுடன் இருக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவது போல இருக்கிறது.

ஹியுகோ: அது உண்மையில்லை.

ஜோர்ஜ்: நீ எப்போதாவது பசியோடு இருந்திருக்கிறயா?? உனக்கு நாளாந்தம் பசியெடுக்க வேண்டும் என்பதற்காகவே பயிற்சி செய்ய வேண்டிய அவசியம் இருக்கும் என பந்தயம் பிடிக்க நான் தயார்.

ஹியோ: நீ சொல்வது ஒரு வகையில் சரிதான். எனக்கு பசி என்ன என்பது என்ன என்றே தெரியாது. நான் குழந்தையாக இருந்த போது எனக்குத் தரும் ரொனிக்கில் பாதியைக் கூடக் குடிப்பதில்லை. எவ்வளவு அனியாயம்? பின்பு எனது பெற்றோர் எனது வாயை பலவந்தமாக திறந்து டொனிக்கை எனது குரல்வளைக்குள் ஊத்துவார்கள். ஆனால் ஒரு போதும் நான் உடம்பில் சதை போட்டுக் கொழுத்ததில்லை. பின்பு அவர்கள் எனக்கு இறைச்சிக்கடையில் இருந்து ஆட்டு இரத்தம் எடுத்துக்குடிக்கத்தந்தார்கள். அதன் பின்பு இறைச்சி சாப்பிடுவதேயே விட்டுவிட்டேன். எனக்கு பசியெடுப்பதில்லை என்று ஒவ்வொரு இரவும் எனது அப்பா கூறுவார். நீ சாப்பிடாவிட்டால் வருத்தம் வரும் என்றும் கூறுவார். பின்பு அவர்கள் எனக்கும் விலையுயர்ந்த மீனெண்ணெயும் வாங்கித் தந்தார்கள். அதேவேளை வீதியில் ஒரு நேரச்சாப்பாட்டிற்கு தமது ஆத்துமாவை விற்கும் மனிதர்களையும் பார்ப்பேன். அவர்கள் எனது யன்னலருகே வந்து தமக்கு ஒரு ரொட்டித் துண்டு தருமாறு கேட்பார்கள். எங்களுக்கு சாப்பாடு மிதமிஞ்சி இருக்க, எங்கள் காவற்காரனுக்கு ஒரு கரண்டியும் குப்பைத்தொட்டியைக் கிளறும் கிழவிக்கு ஒரு கரண்டியும் தனது காலை முறித்துக்கொண்ட தச்சுத் தொழிலாளிக்கு ஒரு கரண்டி உணவும் எனது பெற்றோர் கொடுப்பார்கள். நான் வீட்டை விட்டு வெளியேறிக் கட்சியில் சேர்ந்து கொண்டேன். ஆனால் இங்கு வந்தது நான் கேட்கும் பழைய பாட்டு என்னவென்றால் 'உனக்கு பசியென்றால் என்னவென்று தெரியாது. ஹியுகோ உனக்கு என்னதான் தெரியும்? ஏனெனில் நீ ஒருபோதும் பசியுடன் இருந்ததில்லை" அது சரிதான் நான் பசியுடன் இருந்ததில்லைதான். ஒரு போதும் இல்லை. இப்ப நீங்கள் சொல்லுங்கள், நீங்கள் என் மீது வாந்தி எடுக்காமல் இருக்க நான் என்ன செய்யவேண்டும்? (மௌனம்)

ஹோடரர்: அவன் சொன்னதை நீங்கள் கேட்டீர்களா? சொல்லுங்கள் அவன் என்னதான் செய்யவேண்டும் என்று சொல்லுங்கள். சிலிக் அவனிடம் இருந்து நீ எதை எதிர்பார்க்கின்றய் அவன் தனது தலையை வெட்டிக் கொள்ள வேண்டுமா? அல்லது கண்ணீர் விடவேண்டுமா? அல்லது தனது மனுஷியை உங்களுக்குத் தரவேண்டுமா? நீங்கள் அவனை மன்னிப்பதற்காக அவன் உங்களுக்காக எதைச் செய்ய வேண்டும்?

ஸ்லிக்: நான் மன்னிப்பதற்கு அவன் எதையும் செய்யவில்லை.

ஹோடரர்: இல்லை அவன் வறுமையில் இருக்காமல் எமது கட்சியில் சேர்ந்தது குற்றம்தானே.

ஜோர்ஜ்: எங்களுக்கு அவன்மேல் கோபம் இல்லை எங்களுக்கும் அவனுக்கும் இடையில் பெரிய இடைவெளி இருக்கின்றது. அவ்வளவுதான். அவன் கட்சியில் சேர்ந்ததற்குக் காரணம் அது அவனுக்கு எடுக்கவேண்டிய ஓர் சரியான முடிவாக இருந்தது. நாங்கள் இருவரும் சேர்ந்ததற்குக் காரணம் எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஹோடரர்: அவன் வேறு ஏதாவது செய்திருக்க முடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா? மற்றவர்கள் பசியுடன் இருப்பதைப்பார்ப்பது கூட ஓர் ஜீரணிக்க முடியாத ஓர் விடயம்தான்.

ஜோர்ஜ்: பசியை சகித்து கொண்டு வாழ்பவர்கள் ஏராளம்

ஹோடரர்: அதற்குக் காரணம் அவர்களிடம் சிருஷ்டி வளம் இருக்கவில்லை. இந்த பெடியன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியில் சேர்ந்ததற்குக் காரணம் அவனிடம் ஏராளமான பொருள் இருந்தது.

ஸ்லிக்: ஓகே. அவனை ஒருவரும் கரைச்சல் கொடுக்க மாட்டார்கள் அவனை எங்களுக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான் அதற்கு எங்களுக்கு உரிமை உண்டு.

ஹோடரர்: எந்த உரிமையை நீ சொல்கின்ருய்? எங்களுக்கு ஒரு உரிமையும் இல்லை எங்களுக்கு அவனைப் பிடிக்கவில்லையாம். கெட்ட வேசை மக்கள். நீங்கள் உங்கட பொலீஸ் போட்டோ முஞ்சியை கண்ணுடியில் பார்த்துவிட்டு பின்பு உங்களுடைய உணர்வுகளைப் பற்றி பேச வாருங்கள். எந்த ஓர் மனிதனின் மதிப்பும் அவன் செய்யும் வேலையில் தான் இருக்கின்றது.

ஹிகோ: (உரத்த குரலில்) நீங்கள் என்னை பாதுகாக்க பண்ண வேண்டாம்? நீங்கள் யார் எனக்காக பேச? இந்த விஷயத்தில் நீங்கள் எதுவும்செய்யப்போவதில்லைஎன்பது எனக்குத் தெரியும் அது எனக்கு பழகிப்போன விஷயமும் தான் இவர்கள் இருவரும் எனது வீட்டுக்கு வரும்போது அவர்கள் சிரிக்கும் பாணியிலே அவர்களைப் புரிந்து கொண்டேன். எனது குடும்பத்தாரும் தகப்பனும் பாட்டனும் உண்பதற்கு உணவு வைத்திருந்தார்கள் என்பதை சொல்லிக்காட்டிடவே அவர்கள் இங்கு வந்தார்கள். நான் எந்த சமாதானம் சொன்னாலும் இவர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இவர்களைப்போல் நூறுயிரம் பேர் என்னைப்பார்த்துச்சிரிப்பார்கள். நான் என் வாழ்வு முழுவதும் இவர்களுடன் போராடினேன், அவமானப் படுத்தப்பட்டேன், நான் எனது குடும்பச் சரித்திரத்தை மறக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தேன் நான் உண்பதற்கு உணவு இல்லாதவர்களை எவ்வளவு நேசித்தேன். மதித்தேன், அவர்கள் குறித்து பொருமையும் பட்டேன். எல்லாமே அர்த்தமற்றது. நான் இதற்குமேல் இவர்களுக்காக எதுவும் உழைக்கமுடியாது. நான் பணக்காரண் புத்திஜீவி, கைகளினுல் உழைக்கத் தெரியாதவன். அவர்கள் எப்படி வேண்டுமானுலும் என்னைப்பற்றி கதைக்கட்டும் ஓர் மனிதனின் குணம்சம் அவன் தோற்றத்தில்தான் தெரியுமெனின் அவர்கள் சொல்லுவது சரி.

(சிலிக்கும் ஜோர்ஜும் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்)

ஹோடரர்: (ஜோர்ஜையும் சிலிக்சையும் நோக்கியபடி) நான் இனிமேல் ஹிகோவை பகிடி பண்ணமாட்டேன். இவன் கையால் வேலை செய்யமாட்டான் ஆனுல் இவனை எப்படி வேலை வாங்குவது என எனக்குத் தெரியும். சரி சரி கதையை விடுவோம்.

ஹோடரர்: இப்ப வீட்டை சோதனை இடும் விஷயத்திற்கு வருவோம்.

ஸிலிக்ஸ்– ஆமாம் சோதனை அதை இப்ப?

ஹோடரர்: உங்களிடம் நான் ஒரு ஆலோசனையும் கேட்கவில்லை. நான் உங்களுக்கு கட்டளையிட்டால் மட்டுமே நீங்கள் சோதனை செய்யலாம். (ஹிகோவைப் பார்த்தபடி) நான் உன்னை நம்புகிறேன், ஆனுல் நீ யதார்த்தநிலையை புரிந்திருக்க வேண்டும் இன்று நான் உன்னை சோதனை செய்யவேண்டாம் என கட்டளை இட்டால் இன்னெருவனும் தன்னை சோதனை இடவேண்டாம் எனக் கேட்பான். பின்னர் ஒருநாள் உண்மையாக கொலைகாரன் இங்கு வந்து எங்கள் எல்லோரையும் கொல்வான். இப்ப அவர்கள் உன்னிடம் மரியாதையாக சோதனை செய்யக் கேட்டால் சோதனை செய்ய விடுவாயா? (அவனை நோக்கியபடி) நான் உன்னை சோதனை செய்யப்போவதாக் கேட்டால் (சற்று யோசித்த பின்) உன்னிடம் ஏதாவது ஆயுதங்கள் இருக்கின்றதா?

ஹிகோ: இல்லை

ஹோடரர்: உனது மனைவியிடம்

ஹிகோ: இல்லை

ஹோடரர்: நல்லது நான் உன்னை நம்புகிறேன் (ஜோர்ஜையும் சிலிக்ஸையும் பார்த்து) நீங்கள் இப்ப வெளியே போங்கள்.

யசீக்கா: கொஞ்சம் பொறுங்கள் (அவர்கள் வருகின்ருர்கள்) அவர்கள் உன்னை நம்பினுல் நீயும் அவர்களை நம்ப வேண்டும்.

ஹிகோ: நீ என்ன செய்கின்ருய்

யசீக்கா: நீங்கள் எங்கு வேண்டுமானுலும் சோதனை செய்யலாம்.

ஹிகோ: ஆனுல்.....ஏன் அவர்களை சோதனை செய்யக் கூடாது?

யசீகா: ஹிகோ நாங்கள் ஏதோ ரிவோல்வரை ஒளித்து வைத்திருக்கின்றமாதிரி நீ அவர்களை நினைக்கத் தூண்டுகின்ருய்.

ஹிகோ– உனக்கு விசர் பிடித்திருக்கின்றது.

யசீக்கா– அவர்களை சோதனை செய்ய விடுவோம். அவர்களை கேட்பதை செய்யவிட்டால் உனதுமரியாதையும் பாதுகாக்கப்படும்.

ஹிகோ: பிறகு ஏன் காத்துக்கொண்டு இருக்கின்றீர்கள் அவர்கள் சொல்வது கேட்கின்றது தானே.

ஸ்லிக்ஸ்– நான் நினைத்தேன்.

ஹிகோ– நீ என்ன நினைக்கின்ருய் என்று எனக்குள் கவலை இல்லை, அவர்கள் சொல்வதைச் செய்

ஸிலிக்ஸ்– சரி, சரி,

ஜோர்ஜ்: இவ்வளவு நேரமும் சோதனை செய்வதற்கு ஏன் இவர்கள் இவ்வளவு எடுப்பு எடுத்தார்களோ தெரியாது.

ஹோடரர்: (சிலிக்கையும் ஜோர்ஜியையும் நோக்கி) மனிதர்களில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல பாடம். நான் எப்போதும் மற்றவர்களில் நம்பிக்கை வைப்பன் மற்றவர்களும் என்னை நம்புவார்கள். ஹும் கவனமாக சோதனை செய்யுங்கள் வேலையைச் சரியாகச் செய்யாவிட்டால் சோதனை செய்வதில் எவ்வித பயனுமில்லை சிலிக் அந்த அலுமாரிக்குப் பின்னுல் பார். அந்தலாச்சிகளை பொக்கட்டுகளையும் சல்லடைசெய்.

ஸிலிக்ஸ்– ஆம் எல்லாவற்றையும் பார்த்துவிட்டேன்.

ஹோடரர்: திருப்பியும் சோதனை செய். மெத்தைக்கு அடியில் என்ன இருக்குதென்று பார் நல்லது. ஹும் சிலிக் மேலும் அலசிப்பார். ஜோர்ஜ் இந்தப்பக்கமாக பார். (ஹியுகோவை நோக்கி) அவனையும் அலசு. அவனது கோட் பொக்கட்டுக்களைப் பார். அவனது காற்சட்டைப் பொக்கட்டுக்களை பார். நல்லது. அவனது பின் பொக்கட்.

யசிக்கா: என்னை சோதனை செய்யவில்லையா?

ஹோடரர்: நீயாகவே கேட்டால்... ஜோர்ஜ்.. ஹும்.

ஜோர்ஜ்: ஓகே. (முகம் சிவந்தபடி யசிக்காவை நோக்கி நகர்கிருன். அவனது விரல்கள் அவளது உடலெங்கும் ஓடுகிறது. அவள் பலத்துச் சிரிக்கிருள்)

ஸ்லிக்: (றிவோல்வர் இருந்த பெட்டியை நோக்கி) இந்த சூட்கேஸ்க்குள் ஒன்றும் இல்லையா?

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**

★ இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள், உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன், கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப்பொருட்கள் அனைத்தும் மலிவு விலையில்
★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின் ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும் விற்பனைக்கும் பெறலாம்
★ இந்திய இலங்கை, கனடிய பத்திரிகைகள், சஞ்சிகைகள் CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

**(416) 421 3429**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எப்போதும் வரும்




**நிவேதிகா**

அரைகுறை ஆடைகளுடன் ஆபிரிக்க பெண்மணிகளும், வெள்ளைக் காரிகளும் வெப்பம் தாங்க முடியாமல் புற்தரையில் அமர்ந்து சூரியஸ்நானம் செய்து கொண்டிருந்தார்கள். நைலெக்ஸ் சேலைகளை கட்டிக்கொண்டு சில வயோதிப தாய்மார்கள் கட்டுகளின் மீது அமர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

"வீட்டுக்குள்ளேயிருந்து என்ன செய்வது அதுதான் இப்படி வந்து உட்கார்ந்திருக்கினம்" என என் தண்பி விஜிதா சொல்ல நானும் மௌனமாய் சிரித்துக்கொண்டேன்.

"உன்ட அம்மாவ இங்கு கூப்பிடலையோ" என்றாள்

"ஏன் இங்கு வந்து கூண்டுக்குள்ள வாழ்வது போல வாழச் சொல்லுறியோ? அவ அங்க சந்தோசமாயிருக்கட்டும்" என்றேன்.

அமைதியானாள்...... வெயிலில் வெகு தூரம் நடந்து சென்று வந்ததால களைப்பு அதிகமாயிருந்தது.

"முன்பு ஊரில் என்றால் எவ்வளவு தூரம் நடந்தாலும் களைக்காது. இப்ப கொஞ்ச தூரம் நடந்தா களைக்குது" என்றாள்.

வட்டுக்குள்ளேயிருந்தா அப்படித் 'தான்" என்றேன்.

"வீட்டிலயிருந்து கடிதம் வந்ததோ"

"ஓம்"

"என்ன எழுதியிருக்கினம்"

"நிறைய எழுதியிருக்கினம்" என்றாள்

"நிறைய என்றால் என்ன சொல்லேன்" என்றேன்.

"வழமையான பாட்டுடன் தான்" என்றாள்.

அவளை கேள்விக்குறியுடன் பார்த்தேன். அவளது முகத்தில விரக்தியும் வேதனையும் குடிகொண்டிருந்தது.

"எனக்கு கனடா பிடிக்கவில்லை மீனு" என்றாள்

"ஏன் உனக்கு என்ன நடந்தது"

"எத்தனை வருஷம் இந்த பக்டரியிலயிருந்து கஸ்டப்பட்டு வேலை செய்தும் என்ன பயன் எங்கட வறுமை தீருதேயில்லையே"

அவள் சலித்துக்கொண்டாள். நான் அவளை கேள்விக்குறியுடன் பார்த்தேன்.

அங்கிருந்து வருகின்ற கடிதங்களைப் பார்த்தா தலையே சுற்றுது, அவர்களுக்கு நாங்கள் படும் துயரங்களோ கஸ்டங்களோ கொஞ்சம் கூட தெரியாது. வெளியூர் என்று காசு இலவசமாக அள்ளி அள்ளி அரசாங்கம் கொடுக்குது என நினைத்து தான் அவர்கள் இப்படியெல்லாம் எழுதுகிறார்கள். அந்த கடிதத்தின் வரிகள் எங்கள் மனதை எத்துனை வேதனையில் ஆழ்த்தும் என அவர்கள் நினைப்பதில்லையே!

அந்த புற்தரையின் வாங்கின் மீது அமர்ந்திருந்த அவள் சொல்லிக்கொண்டிருந்தாள் நானும் கேட்டுகொண்டிருந்தேன்.

---

## தேமதுரம்..

சோ.சிவபாதசுந்தரனும் கருத்து தெரிவிக்கிறார்.

சினிமா பற்றிய ஜமுனா ராஜேந்திரனின் கருத்துக்கள் வித்தியாசமானவை. அவர் தமிழ் திரைப்படங்களில் சமீப காலங்களில் வந்த நல்ல திரைப்படங்கள் பற்றி ஒரு நிகழ்ச்சியைத் தந்திருக்கிறார். மகாநதி, தேவர் மகன், கிழக்குச் சீமையிலே, மகளிர் மட்டும் போன்ற படங்கள் சமீப காலங்களில் தமிழ் திரையுலகில் ஏற்படுத்த முனையும் பாதிப்பு பற்றிய இவரது தொகுப்பு சுவாரஸ்யமாக இருந்தது. இன்னமும் அதிகமாக அந்தப் படங்களில் இருந்து 'கிளிப்'கள் போட்டிருந்தால் மேலும் நன்றாக இருந்திருக்கும்.

புலம் பெயர்ந்தோரை தாயகத்திற்கு அழைத்துச் செல்ல நல்லூர் முருகன் தேர்திருவிழாவும் உண்டு.

வாழ்த்துரைகள் அதிகமாக இருப்பதால் நிகழ்ச்சிகள் குறைவாக உள்ள பிரமையை ஏற்படுத்தினாலும், எதிர்வரும் காலங்களில் இந்த குறைபாடு தவிர்க்கப்படும் என்று நம்பலாம். யாழ்ப்பாணத்து நிகழ்ச்சிகள் அதிகம் சேர்க்கப்படும் இடத்து ரசிகர்களின் ஆர்வத்தை அதிகளவில் பெற வாய்ப்புண்டு. கலைநிகழ்ச்சிகள், செய்திகள், கலைஞர் அறிமுகம் இன்னோரன்ன விடயங்களைச் சேர்த்துக் கொண்டு தேமதுரம் முழுமை பெறும் என்று எதிர்பார்க்கலாம். தொழில்நுட்ப ரீதியான திறமைகளைப் பெற்றுக் கொண்ட தயாரிப்பாளர் இந்த முயற்சியில் நிச்சயம் வெற்றி பெறுவார் என்றே நம்புகிறோம். தேமதுரம் வீடியோ தமிழ் வீடியோக் கடைகளில் வாடகைக்கு உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சிறு குழந்தையை வண்டிலிலே வைத்து தள்ளிக்கொண்டு போன தமிழ் தாய் அந்த குழந்தை குதிக்க எத்தனித்த போது ஆங்கிலத்தில் அக்குழந்தையை பேசிவிட்டு பெல்ட்டை சரி செய்து விட்டாள்.

விஜிதா கண்களை அவள் பக்கம் காட்டி தோள்களை குலுக்கிக்கொண்டாள்...

"எந்த உறவினர்களிடமிருந்து கடிதம் வந்தாலும் அது பல சைபர்களை போட்டுதானே வருகுது. நேற்று ஒரு கடிதம் வந்தது அது அக்கா எழுதியிருக்கா. அம்மாவையும், அப்பாவையும் உடனே கூப்பிடு நீ தான் நெடுகலும் பஞ்சம் பாடிக்கொண்டிருக்கின்றாய், இங்க பார் கொழும்பில வந்து பார் எத்தன சனம் தாய் தகப்பன், அண்ணை, அக்கா, சொந்தக்காரங்க அத்தனை பேருக்கும் வீடு எடுத்து குடுத்து மாதா மாதம் ஆயிரக்கணக்கில பணம் அனுப்புதுகள், கிழமைக்கு ஒரு தரம் போன் பண்ணுதுகள், உங்களுக்குத்தான் நெடுகலும் கஸ்டம்" அவள் சொல்லி முடிப்பதற்குள் நான் குறுக்கிட்டேன்

"விஜிதா அவர்களை குறை சொல்லி என்ன பயன்? எங்கட சனங்களும் அப்படித்தானே இங்கிருந்து ஊருக்கு போய் அங்கு பெரிய விலாசம் காட்டி விட்டு வாறது. செய்யும் தொழிலையும் சொல்வதில்லை, ஆயிரக்கணக்காய் உழைப்பதாய் சொலவது, இங்கிருப்பவர்களும் தங்களது கஸ்டங்களையெல்லாம் சொல்வதில்லை. எப்படியோ பணம் அனுப்புகின்றார்கள். அதை பார்த்த அவர்களும் நீ அக்கறையில்லாமல் இருப்பதாய் எழுதுகின்றார்கள்.

உனக்கு தெரியுமா என் நண்பி சித்திராவை? அவள் கொழும்பில ஒன்பது வருஷமாய் காத்திருக்கின்றாள். கணவன் இங்கு வந்து ஒன்பது வருஷம். பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் மனுசன் காசு உழைத்த காசை வீட்டுக்கு அனுப்புவார், இங்கு அவர் வீட்டு வாடகை கட்டவேணும், சாப்பாட்டு செலவு, எல்லாம் எப்படியோ வட்டிக்கும் எடுத்து அங்கு காசு அனுப்பி வட்டியையும் கட்டிக்கொண்டு இருக்கிறார்.

மனுசன் இப்ப இரண்டு வேலை செய்யுது. காசு கட்டி பிள்ளைகளை எடுக்க வேண்டும் என இதையெல்லாம் யார் எழுதபோகின்றார்கள்? போய் வந்தவர்கள் எழுதுவார்களா?

வயதான தாய் வந்து கொழும்பில நிக்குது.. மகன் வந்து ஏழு வருசம் இன்னும் லான்டட் பேப்பர் கிடைக்கவில்லையாம், தாய் போனில் சொல்லி அழுகுதாம்

"பாழாய் போனவனே. போன வருஷம் போனவன் எல்லாம் குடும்பத்தையே கூப்பிட்டு போட்டான். நீ என்ன செய்கின்றாய்? இரண்டு வருஷத்துக்கு முதல்ல போன சுந்தரலிங்கம் வந்து கலியாணமும் செய்து கொண்டு மனுசியையும் கூட்டிக்கொண்டு போய்விட்டான் உனக்கு தான் ஒன்றும் முடியாது. உன்ன படிக்க வைச்சது வீணடா என மனுசி அழுகுதாம் அந்த பொடியனும் என்ன செய்வான். சில பெற்றோர்கள் சொல்லி புரிந்து கொள்வார்களா? இங்கு என்ன நடக்கின்றது என அவர்களுக்கு உண்மையாகவே தெரியாது.

கனடாவில் எல்லாமே பசுமையான வாழ்வு. நிறைய பணம் கார், பங்களா, வசதியான வாழ்க்கையென வாழ்ந்து கொண்டிருப்பதாக எண்ணுகின்றார்கள், கடந்த மூன்று மாதங்களுக்கும் எத்தனை


ஓம் ஸ்ரீசாயிராம்

**HEALTH FOODS HERBAL CLINIC**

**சாயி மூலிகை மருத்துவ நிலையம்**

எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட கீழ்க்கண்ட எண்ணெய் வகைகள் கிடைக்கும்;

கூந்தல் வளர்ச்சித் தைலம்

- பொடுகுத் தைலம்
- பீனிசத் தைலம்
- கிரந்தி எண்ணெய்
- சருமத் தைலம்
- வாத நோவெண்ணெய்
- கடுக்காய்க் குழிசை
- முக்கூட்டுக் குளிசை
- கஸ்தூரி கோரோசனை மாத்திரை
- பேறுகால சரக்குத்தூள்

நாட்பட்ட சகல நோய்களுக்கும், இயற்கை முறை மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்.

மகப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு விசேடமான மூலிகை முறைகள் உண்டு.

**Director & Counsellor**

**Prof.Dr.(ms) A.Ganesaal**

12 St.Dennis Drive # 627
Don Mills. Ontario M3C 1G2
Tel: (416) 467 6393
FaX (416) 467-7270

**கம்பியூட்டர் ஜாதகம்**

கம்பியூட்டர் முறையில் தமிழில் ஜாதகம் பத்தே நிமிடங்களுக்குள், கணித முறையிலோ வாக்கிய முறையிலோ கணித்துக் கொடுக்கப்படும்

★ எண்கணிதம் ★ திருமணப் பொருத்தம்
★ ஜோதிடம் ★ பெயரிடுதல்
★ கைரேகை ★ பெயர்மாற்றம்
★ கிரகதோஷ பரிகாரம்

முதலிய பிரச்சனைகளுக்கு பெண்டுல சுழற்சியின் மூலம் துல்லியமான அச்சொட்டான பலாபலன்கள் ஆராய்ந்து கூறப்படும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்கொலைகள், வெளியே வராத விவாகரத்துக்கள், இதெல்லாம் எப்படி? பிரான்சில்கூட தற்கொலைகள் அதிகரித்து வருகின்றதாம்... மாடிகட்டிடங்கள் கட்டி வைத்திருப்பது குதித்து தற்கொலைசெய்து கொள்ள என தான் இந்த தற்கொலை புரிந்து கொள்பவர்கள் கூட நினைத்துக்கொள்கின்றார்கள் போலும். .. இங்கு வாழ்க்கை அப்படி இங்கு வந்த வயோதிப பெற்றோர்கள் எல்லாம் சந்தோஷமாகத்தான் இருக்கின்றார்களா வீட்டுக்குள்ளே அடைந்து அடைந்து மகன்மாரோடு, மகள்மாரோடு இருக்க முடியாமல் தனி குடித்தனம் போய்விடும் வயோதிப பெற்றோர்கள் எத்தனை பேர் என அவர்கள் அறிவார்களா? இங்கு வந்து விடவேண்டும் வந்து விடவேண்டும் என புலம்பி பின் வந்த பின் அழுது கொண்டிருப்பார்கள்.

விஜித்தா நல்லா யோசித்து பார். இங்கு வறுமையில்லையென சொல்லுகின்றாயா? எப்படியாவது உழைத்து விட வேண்டும் என்று தானே ஒவ்வொரு தமிழ் கடையிலும் பார். அப்பம், தோசை, இட்லி, இடியப்பம், காலை சாப்பாடு, மாலை சாப்பாடு எல்லாம் பெட்டியில் அடைத்து விற்பனையாகின்றது.

இங்கு ஓடருக்கு இடியப்பம் செய்து கொடுக்கப்படும் என போர்டுகளும், அருகருகே கடைகளும், மாபெரும் மலிவு விற்பனைகளும், பெருகிக் கிடக்கின்றன. அங்கு அப்பம்சுடுவதும் கூலி வேலைசெய்வதும் கௌரவத்துக்கு குறைச்சல் என்று நினைப்போம் ஆனால் இங்கு அப்படி முடியாது.

ஒரு அறையில் ஐந்து, ஆறு பேர் தங்கியிருப்பதும், இரண்டுவேலை செய்வதும் ரெஸ்ரோரனரில் விடிய விடிய கோப்பை கழுவதும், பக்டரியில் கண்விழித்து காவலிருப்பதும், நிலம் துப்பரவு செய்வதும், பீரோ கிளினிங்செய்வதும் அங்குள்ளவர்களுக்கு தெரியுமா? இவையெல்லாம் அவர்களுக்கு தெரிந்திருக்க ஞாயமில்லை.

அங்கு வீட்டு வாடகை கட்டாவிட்டால் வீட்டு உரிமையாளரிடம் தவணை சொல்லி தப்பித்து விடலாம். இங்கு அப்படி முடியுமோ? உழைக்காமல் வீட்டில் உட்கார்ந்து சுகபோக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் இருக்கின்றார்கள் அது மனசாட்சிக்கு விரோதம் தானே. நாங்கள் நேர்மையாய் உழைக்கின்றோம். உழைத்து உழைத்து என்ன கண்டோம்.

அவர்கள் கேட்கும் கேள்வி "நீ எங்களுக்கு என்ன செய்தாய்" என்று தானே. விஜித்தா பேசாமலிரு நீ எப்போது உனக்கு வசதி வருகுதோ அப்போது அவர்களுக்கு உதவி செய் அதுவரை அவர்கள் எப்படியோ வாழ்ந்து கொண்டுதானிருக்கப்போகின்றார்கள்" என்றேன்.

அவள் என்னை நிதானமாக பார்த்தாள்...

பார் இந்திய அகதிமுகாம்களிலும், வடக்கு அகதி முகாம்களிலும், சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு கிடப்பவர்களையும் விடவா இவர்கள் கஸ்டப்படுகின்றார்கள்... ஒரு உயர்வான வாழ்க்கை தேவையென்றால் கஸ்டப்பட வேண்டும் உழைக்கவேண்டும் அப்போதுதான் உயர்வான வாழ்க்கை வரும். வெறுமனே பிறரை எதிர்பார்த்து கொண்டிருந்தால் வந்து விடுமா? உலகத்தில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இறைவன் கை, கால்களை கொடுத்திருக்கின்றான், திறமையை கொடுத்திருக்கிறான், பிறகேன் பிறரை குற்றம் சொல்ல வேண்டும்.

சீதனம் வாங்கி திருமணம் செய்து கொள்ளும் ஆண் மகன் கூட ஒரு வகையில் திறமையற்றவன். காலமெல்லாம் அவனுக்கு சேவை செய்யப்போறவளிடம் கூலி வாங்கிக் கொள்கிறான். காதலிப்பவன் கூட சீதனம் கேட்கும் கலிகாலம் அல்லவா இது.. உனக்கு தெரியுமோ இப்போது பெடியன்களும் கலியாணம் முடிக்காமல் குடும்பம் நடத்தி விட்டு பின் விட்டு பிரிந்து விடுகின்றார்கள். பின்பு தான் தன் தவற்றை உணர்ந்த அவள் அழுது தீர்க்கிறாள்."

"அவையளுக்கு அறிவு எங்கே போகின்றது" என்று கோபத்துடன் விஜித்தா சொன்னாள். அடுத்த வாங்கில் ஒருசோடி மெய்மறந்த நிலையில் முத்தம் கொடுத்துக்கொண்டிருந்ததை கண்ட விஜிதா மெல்ல சிரித்துக்கொண்டாள் அன்று நிறைய ஏஜன்சிமாரை பொலீஸ் பிடித்து போட்டதாமே என்றாள்

"ஆமாம் நானும் பார்த்தேன்" என்றேன்.

" மீனா எங்களுக்கு வேலைக்கு போவதும், வீட்டு வேலையும், ஓய்வில்லாத பொழுதுமாயிருக்க சில பெண்கள் போனிலே ஊர் வம்பு அளந்து கொண்டிருக்கின்றார்களே? அவள் இப்படி இவள் இப்படியென இதை நினைத்தால் எரிச்சல் தான் வருகின்றது."

"ஒவ்வொரு நிமிடத்துக்கு போன் கதைப்பதற்கும் காசு அறவிட்டால் வாயை பொத்திக்கொண்டிருப்பினம்" என்றேன். சிரித்தாள் அந்த சிரிப்பில் அவளின் முகத்தில் முன்பிருந்த விரக்தி தெளிந்திருந்தது.

இரவு ஏழு மணியாகிவிட்டிருந்தது... இப்போது வீட்டுக்கு போய் சமைக்கவேண்டும். அவர் வந்து விடுவார் நாளைக்கு நீ ஓவர்டைமோ என கேட்டாள். " ஓமோம் என்றேன். நாளைக்கு ஒரு கலியாண வீடு எனக்கு என்றவள். விடைபெற்று பிரிந்தாள். வேலைமுடிந்து களைத்துப்போய் வரும்போதெல்லாம் அந்த மரத்தடி வாங்கின் கீழ் அமர்ந்து சில நிமிடங்கள் கதைத்துக்கொண்டால் மனது ஆறுதலாயிருக்கும் என விஜித்தா அடிக்கடி சொல்லுவாள். தனது குடும்ப சுமைகளையெல்லாம் கொட்டிவிட்டு போவாள். அவளது கணவனும் பாவம் இரண்டு வேலை செய்கின்றார் முன்பெடுத்த பணத்திற்கு வட்டி கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இந்த வட்டிக்காரர்களுக்கு மட்டும் எங்கிருந்து தான் பணம் வருகின்றதோ? எங்கிருந்தும் வரும், அது எப்படியும் போகும் என நினைத்துக்கொண்டேன்.

வீட்டுக்குள் நுழைந்தபோதே ஒரு கடிதம் கிடந்தது. ஊரிலிருந்து தான் . சோபாவில் அமர்ந்த நான் கடிதத்தை உடைத்தேன்............ நெருக்கமான எழுத்துக்கள் நாலு பக்கம் அப்படி என்ன விசேஷமாயிருக்கும்.

அன்பின் மீனா உன் மாமாவும், மாமியும் அன்புடன் எழுதிக்கொள்வது, மகன் தான் எழுதுகிறானில்லையென்றால் உனக்கு புத்தி எங்கு போனது. நீ பொறுப்பான பிள்ளையென்றுதான் நினைத்தோம் அதுவும் இப்போ மண்ணாய் போய்விட்டது. நாங்களும் கடிதம் வரும் கடிதம் என எதிர்பார்த்து ஏமாற்றம் தான் அடைகின்றோம். அவனுக்கு பொறுப்பு ஒன்று இருக்கு என்பதை மறந்துவிடவேண்டாம் என சொல்.. அங்கு இருப்பதால் எங்களை மறந்துபோய்விட்டான். ஊட்டி ஊட்டி வளர்த்து என்ன பயன். லண்டனிலிருந்து மகள் கடிதம் போட்டிருந்தாள் பிள்ளைகள் பெருசாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ந்திட்டினமாம் மோட்கேஜில் வீடு வாங்கியிருக்கினமாம். ணம் கொஞ்சம் கஸ்டமாம், நீ எங்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் அவளுக்காவது கொஞ்சம் பணஉதவி செய்யலாம் தானே! பிள்ளைகளின் படிப்புக்கு எவ்வளவு செலவாகும் என்பது உனக்குத் தெரியும் தானே! பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் எல்லாம் கொழும்புக்கு வீடெடுத்து வந்து விட்டார்கள். கனடா வரப்போகின்றார் களாம் அவன் ராசு போய் மூன்று வருசஷம் தான், எட்டுபேரையும் கூப்பிட போறான். நீங்கள் இருவரும் ஒன்பது வருஷமாய் என்ன செய்கின்றீர்களோ தெரியாது. நாங்களும் கொழும்பில் தங்க வீடு வேண்டும். உடனடியாக ஒரு மூன்று லட்சம் ரூபாய் அனுப்பிவிடவும் எதிர்பார்த்துக்கொண்டிருப்போம். மற்றும் சுகமாயிருக்கவும் பதில உடனடியாக போடவும்.

இப்படிக்கு அன்பு

அம்மா, அப்பா என இருந்தது

ஆரம்பத்தில் மீனு என தொடங்கி பின் மகனுக்கு எழுதப்பட்டு இப்படிக்கு என்பதின் கீழ் அம்மா, அப்பா என இருந்தது. படித்து விட்டு அவரின் மேசைமீது வைத்தேன். இரவு களைத்துப்போய் வந்த அவர் குளித்து விட்டு சாப்பிட்டபின்பு சொன்னேன். கடிதம் வந்திருக்கு என எந்தவித உணர்ச்சியுமின்றி கடிதத்தை படித்தார் அவருக்கு தெரியும் ஊரிலிருந்து கடிதம் வந்தால் எப்படியிருக்கும் என. களைப்புடன் துயரமும் சேர்ந்து கொள்ள உறங்கிப்போனோம். அதிகாலையில் இருவரும் எழுந்து குளித்து விட்டு அவசர அவசரமாய் வேலைக்கு கிளம்பினோம் சப்வேயருகே இருவரும் கைகாட்டியபடி பிரிந்து போனோம்.

இயந்திரங்களின் இரைச்சலில் அவர் இரவு சொன்ன வார்த்தைகள் என் காதுகளுக்குள் ஒலித்தவாறேயிருந்தது "மீனு ஏன் நாங்க இரவு பகலா கஸ்டப்படுறதை யாருமே புரிந்து கொள்வதில்லை. அம்மாக்கு அங்கு காணிவீடு எல்லாமேயிருக்கு. பேங்கில் பணமிருக்கு . இங்கு வந்து இருக்க சொன்னதற்கும் அங்கு யார் வருவா இந்த நாட்டை விட்டுப்போட்டு என அடிக்கடி சொல்லுவார்.... நானும் கேள்விக்குறியுடனே தூங்கிப் போனேன் துக்கமெல்லாம் தூக்குப் போட்டுக்கொண்டு செத்துப் போய்விட்டன. கனவில் இந்த இயந்திரங்கள் வந்து என்னை பயமுறுத்தின.

இயந்திரங்களின் இரைச்சலின் மத்தியில் சூப்பவைசர் வந்து கூப்பிட்டாள். நானும் மற்ற மூவரும் ஆபீஸ் அறைக்கு சென்றோம். பக்டறியை மூடப்போவதாகவும் வேறு எங்காவது வேலை தேடிக் கொள்ளுமாறும் சொல்லப்பட்டது. இன்னும் மூன்று நாள் தான் இங்கு வேலை செய்யலாம். இனி அதிகாலையில் பேப்பரை பார்த்து விட்டு வேலைதேடி படியேற வேண்டியதுதான்.

வேலைமுடிந்து வீட்டுக்கு வந்த எனக்கு மனது நிம்மதியில்லை விஜிதாவையும் இரண்டு மூன்று நாட்களாய் காணவில்லை. அப்படியே சோபாவில் உறங்கிப்போனேன். போன் அடித்து திடீர் என விழித்துக்கொண்ட போது மணிக்கூட்டை பார்த்தேன். இரவு எட்டு மணியாகிவிட்டிருந்தது. சமையலை முடித்துவிட்டு குளித்து விட்டு வெளியே வந்தேன் அவர் வீட்டுக்குள் வர சரியாக இருந்தது. போன் அடித்தது அவர் தான் எடுத்தார். அது கொழும்பிலிருந்து வந்த கோல் என அவர் சத்தம்போட்டு கதைத்திலிருந்து தெரிந்தது.

என்ன அம்மாவோ? எப்ப? என இடிந்து போய் சோபாவில் உட்கார்ந்தார் அவரின் அம்மா இறந்து போய்விட்டாவாம்... எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் அப்படியே உட்கார்ந்து விட்டேன். அவரும் ஒன்றும்பேசாமல் உட்கார்ந்திருந்தார். . அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிக்கொண்டிருந்தது. எங்கள் கடமைகளிலிருந்து நாங்கள் தவறிவிட்டதாக எனக்கு பட்டது. மரணம் என்பது எங்கோ ஒரு நாள் ஒவ்வொருவருக்கும் வரத்தான் போகின்றது. ஆனால் அது எப்போதும், எதிர்பாராமல் வந்துவிடுகின்றது. நாம் நினைக்காத நேரங்களில் எல்லாம் வந்து விடுகின்றது. அம்மா கொழும்பில் வீடு வேண்டும் என கேட்டு எழுதிய கடைசி கடிதத்தில் இப்படி தனக்கு ஒரு முடிவு வரும் என நினைத்திருப்பாவா என அவர் மனம் எண்ணி அழுதது. மௌனமான அந்த கணங்களில் அழுவதை தவிர வேறு என்ன செய்யமுடியும். திகதி கேட்க கூட அம்மாவை தேடும் அப்பாதான் தனித்துப்போயிருப்பார். இனியாவது அவர் இங்கு வருவாரா? அல்லது நாட்டை விட்டு வரமாட்டேன் என்ற அம்மா! இப்போது அம்மா வாழ்ந்த இடம், கல்லறை இவற்றை விட்டு வரமாட்டேன் என அப்பா சொல்லுவார். எங்களால் மட்டும் எல்லாவற்றையும் விட்டு வர எப்படி முடிந்தது?

## கியூறியஸ்..

சென்றிருக்கிறார்கள்" என்று.

எவ்வளவு உண்மை. அவுஸ்திரேலியா முதல் அமெரிக்கா வரை சென்ற ஈழத்தமிழன் ஈழத்திலிருந்து எதைத் தான் கொண்டு செல்லவில்லை. பனங்கிழங்கு, ஊர்ச்சண்டை, துப்பாக்கிச் கலாசாரம் என்று எல்லாச் செல்வங்களையும் தமிழர்கள் கொண்டு சென்றிருக்கிறார்கள். இவற்றை விட்டு விட்டு வராமல் கொண்டு வந்து சேர்ந்ததால் தானே இத்தனை தொல்லை.

★ ★ ★

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்
சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் ஊர்ச் சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டு ஒருவன் வெகு தூரத்தில் வரக் கண்டு வீட்டிலொளிப்பார்...
எப்போது கை கட்டுவார் இவர்
யாரிடத்தும் பூனைகள் போல் ஏங்கி நடப்பார்..
கொஞ்சமோ பிரிவினைகள்?..
கோத்திரம் ஒன்றாயிருந்தாலும் ஒரு கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்..

பாரதி தீர்க்கதரிசி தான்.

அடுத்த வார இதழ்
தாயகத்தின் ஐந்தாண்டு
நிறைவு மலராக
வெளிவருகிறது.

'தாயகம்
வெளிவராதிருந்தால்'
என்பது பற்றிய உங்கள்
கருத்துக்களை இந்த வார
இறுதியில் ஒலிநாடாவில்
பதிவு செய்யுங்கள்.
963 5738



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'




# இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம் 'பீடியும் மிச்சக் காசுமாம்'

**அறிஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூரியஸ் ஜி**

இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம் தரும் ஆர்.வி.ஜி பீடிகள் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? இப்போது பீடி யார் குடிப்பார்களோ? முன்பு கியூரியஸின் ஐந்தாம் வகுப்பு நண்பர்கள் பின்னுளில் பீடி குடித்ததைக் கண்டதுண்டு. இங்கே கனடாவுக்கு யாரும் பீடி இறக்குமதி செய்ததாயும் காணோம். 'தமிழீழத்து மண்வாசனை தரும் 'புலி பிராண்ட்' பீடியை வாங்கி, விடுதலைக்கு உரமிடுங்கள்' என்று யாராவது விளம்பரம் போடாத வரைக்கும் சரி.

சிறுவயதில் பீடி குடிப்பவர்கள் பாடு சிக்கல். கடையில் போய் பீடி வாங்கினுல்.. கடைக்காரர் தந்தைக்கு தெரிந்தவராக இருப்பார். இதனுல் சில 'சுத்திஜீவி விண்ணர்கள்' கடைக்குப் போய் கேட்பார்களாம். 'ஒரு பைக்கட் பீடியும் மிச்சக்காசுமாம்'

இந்த 'காசுமாம்' என்பதில் உள்ள அழுத்தம் வேறு யாரோ இவருக்கு காசு கொடுத்து விட்டிருக்கிறார் என்ற பிரமையை ஏற்படுத்த..

★ ★ ★

இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம் தரும் பீடி மாதிரி, படிக்க படிக்க இறுதி வரை இன்பம் தரும் உலகத்தமிழர் படித்தேன். புலியரித்து.. சே.. புல்லரித்துப் போய் விட்டது. 'வெளிநாடுகளில் பரப்பப்படும் ஆயுதக் கலாசாரம்'. நாசகார சக்திகள் குறித்து எச்சரிக்கை' என்றிருந்தது. மமா மியா!

'சிறிலங்கா முதல் கொண்டு பிராந்திய (வேறு யார் இந்தியா தான்), சர்வதேச நாசகார சக்திகள்' தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சர்வதேச சதிவலையைப் பின்னுவதாகவும் இந்த அடிப்படையிலேயே 'பிரான்சில் நடைபெற்ற சம்பவங்களும்குறிப்பாக கனடா, ரொறன்ரோவில் 'தேடகம்' நூல்நிலையம் எரிக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளதாம்.

ஆகா.. என் காதுகளேயே என்னுல் நம்ப முடியவில்லையே! அதென்ன பிரான்சில் நடைபெற்ற சம்பவம்.. சபாலிங்கம் கொலை என்று சொல்வதில் தயக்கம் என்ன?

★ ★ ★

சரிநிகரில் வந்த செய்திக்குறிப்பு ஒன்றின் படி சபாலிங்கம் கொலைப்பட்ட போது அவரது வீட்டைச் சுற்றி யாரும் உள்ளே செல்ல முடியாதபடி புலிகள் காவல் போட்டிருந்தார்களாம். (ஒருவேளை 'தமிழீழ மக்கள்' கோபம் கொண்டு அவர் வீட்டைத் தாக்குவதைத் தடுப்பதற்காக கயிறு கட்டிப் பாதுகாப்பு கொடுத்தார்களோ என்னவோ?

மற்றது புலிகளின் பினாமிப் பத்திரிகையான பாரிஸ் பத்திரிகை ஒன்று அதன் பின்பக்கத்து மூலை ஒன்றில் 'பாரிஸில் தமிழர் சுட்டுக் கொலை' என்று செய்தி வெளியிட, அதன் கனடிய மறுபிரசுரம் 'மொட்டையாக' உளறியிருந்தது. இன்னொரு பாரிஸ் பத்திரிகையும் பின்புறத்தில் அதே இடத்தில் தமிழர் கொலை என்று பிரசுரித்தது.

பாரிஸில் கொலை, இலங்கைப் பத்திரிகைகளில் முன்பக்கச் செய்தி. ஆனுல் பாரிஸ் பத்திரிகையில் பின் பக்கத்தில் சிறு குறிப்பு. மொத்தத்தில் மேலிடம் இச்செய்தி பின்புறம் போடும்படி கட்டளையிட்டிருக்க வேண்டும்.

★ ★ ★

முன்பு இப்படித் தான். ஈழமுரசு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது முன்பக்கத்தில் கிட்டுவின் வீரசாகசமும் பின்புறத்தில் பிரபாகரன் ஈழம் வந்த செய்தியும் வந்ததால் தான் கிட்டு 'தளர்பதியானுர்'

புலிகளுக்கு (ஓகே.. நீங்கள் ஈழவிடுதலைக்குத் தான் ஆதரவு!) ஆதரவு செய்யும் ஈழநாடு, தமிழன் ஆகிய பத்திரிகைகளுக்குள்ளேயே பெரும் 'கஜாலாம்'. ஈழநாட்டின் ஜேர்மன் முகவர் பற்றி சமீபத்தில் புழுகிக் கொண்ட போது அவர் விடுதலைப் போராட்டத்திற்கு நிறையப் பணம் சேர்த்துக் கொடுத்தவர் என்று ஈழநாடு புழுக, தமிழன் ஜேர்மன் புலிகளை தொடர்பு கொண்டு கேட்க, அவர்கள் அப்படி இல்லை என்று மறுக்க, இறுதியில் முகவர் 'வாய்க்குள் காலை வைக்க வேண்டியதாயிற்று'.

★ ★ ★

இதைப் போலவே, சபாலிங்கம் கொல்லப்பட்ட செய்தியை 'பிரான்சில் நடைபெற்ற சம்பவம்' என்று சொல்வதன் காரணம் என்ன? சபாலிங்கம் எழுந்து வந்து மானநட்ட வழக்குப் போடுவார் என்றா?

"ஆயுதக் கலாசாரம் என்பது கட்டுப்பாடற்ற, மக்கள் தளமற்ற சிறு குழுக்களால் ஆயுதங்கள் கையாளப்படும் போது ஏற்பட வாய்ப்புண்டு. இத்தகைய ஆயுதக் கலாசார நடவடிக்கைகளையே வெளிநாடுகளில் இத்தகு குழுக்கள் மூலம் பரப்ப நாசகார சக்திகள் முயன்று வருகின்றன. இலட்சியப் பற்றற்றவர்கள், கொள்கைப் பிடிப்பற்றவர்கள், மனித உணர்வற்றவர்கள், சுயநலவாதிகள், காக்காய் பிடிப்பவர்கள், அண்டிப் பிழைப்பவர்கள், காட்டிக் கொடுப்பவர்கள் ஆகியவர்களால் செய்யப்படும் ஆயுதக் கையாடல்களே வெளிநாடுகளில் தமிழீழப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளாக வளர்ந்து வருகின்றன. மேலும் சமூகத்தினுள்ளும் ஆயுதம் மோகம் என்ற வெறித்தனமான மனநோயாக 'ஆயுதக் கலாசாரம்' பரப்பப்பட இச்சக்திகள் காரணமாய் அமைந்து விடுகின்றன'

www.tamilarangam.net

இதைக் கேட்க புல்லரிக்கலே? ஆயுதக் கலாசாரம் பற்றி இவர்கள்! எல்லாம் காலம் மகனே! எதற்கும் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டால் இதற்கு காரண கர்த்தாக்கள் தெரிவார்கள். இங்கே வன்முறையை வளர்த்தது யார்?

இவர்கள் இப்படி பதட்டப்படுவதற்கும் காரணம் இருக்கிறது. 'சட்டவிரோத குற்றவியற் செயல்களைப் புரிந்து மேற்குலக அரசாங்கங்களினதும் மக்களினதும் வெறுப்பையும் கோபத்தையும் எழுப்பி எமது சட்டபூர்வ செயல்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு செய்ய விழைவார்கள்' பயமே இதற்குத் தான்.

★ ★ ★

தேடகம் புனரமைப்புக்காக புனருத்தாரணக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தேடகத்தை கட்டி எழுப்புவதற்காக, நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். நிதி உதவி அளிக்கவிரும்புவோர் 968 2603 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு... நிதி மிகுந்தோர் பொற்குவை...

★ ★ ★

'கலை இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வை சித்தரிப்பதாக அமைய வேண்டும். கலையும் இலக்கியமும் வாழ்க்கையை கருப்பொருளாகக் கொண்டவை. வாழ்க்கையை தரிசித்து நிற்பவை. வாழ்பனுவத்தை குறியீடு செய்பவை. எமது வாழ்வும், அனுபவமும் விடுதலை வேண்டிய போராட்டத்துடன் இணைந்து நிற்கின்றது. இந்த சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்து விட்டது. எனவே எமது கலை இலக்கியங்கள் இந்தப் போராட்டத் தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அனுபவத் தழும்புகளை, உணர்வலைகளை சித்தரித்துக் காட்ட வேண்டும்'

தலைவர் பிரபாகரன் சொன்ன இந்தக் கருத்துக்களோடு நான் முழுமையாக உடன்படுகிறேன். 'வெளிநாடுகளில் சுதந்திரமாக கருத்து தெரிவிப்பதற்கான எமது போராட்ட வாழ்வை எமது கலை இலக்கியங்கள் சித்தரிக்கின்றன. எமது கலையும் இலக்கியமும் எமது இந்த போராட்ட வாழ்வையே தரிசித்து நிற்கின்றன. எமது வாழ்வும் அனுபவமும் இந்த கருத்துச் சுதந்திரத்துக்கான போராட்டத்துடன் இணைந்து நிற்கின்றது. எனவே தான் எமது கலை இலக்கியங்கள் இந்த போராட்ட தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அனுபவத் தழும்புகளை, உணர்வலைகளை சித்தரித்துக் காட்டுகின்றன.' இந்த விடயத்தில் தலைவர் கியூரியஸ் உடன் உடன்படாமலா போகப் போகிறார்? (அதுசரி, இந்தக் கருத்துக்களில் லெனின் சொன்ன கருத்துக்களின் வாடை வீசுவது போல் உள்ளதே என்கிறார் முனிவர் அயே! )

★ ★ ★

புலிகள் வங்கி திறந்திருக்கிறார்கள். வங்கிகளைக் கொள்ளையடித்தவர்கள் வங்கி திறப்பதும் ஒரு வகையில் முன்னேற்றம் தான். ஆனால் உலகளாவிய பொருளாதார மந்த நிலை காரணமாக, வட்டி விகிதங்கள் குறைந்து செல்கின்றன. இங்கே சராசரி வட்டி பத்து வீதத்திற்கும் குறைவாக இருக்க, புலிகள் ஆறு மாத வைப்புக்கு 15 வீத வட்டியும் இரண்டு வருட வைப்புக்கு 17.5 வீத வட்டியும் வழங்குகிறார்களாம். வாங்கும் கடன்களுக்கு வட்டி இரண்டு வீதம் இதை விடக்கூட பரவாயில்லை. நம்ம விண்ணர்கள் புலிகளிடம் கடன் வாங்கி, ஊருக்குள் வட்டிக்கு கொடுத்து பிழைத்துக் கொள்வார்கள்.

★ ★ ★

லண்டனில் இருந்து தாகம் என்றொரு மாத சஞ்சிகை... புலம் பெயர்ந்த சஞ்சிகை உலகில் வித்தியாசமான முயற்சி.. அராஜகத்திற்கு எதிரான விமர்சனங்களை முன்வைக்கின்ற, கருத்துச் சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கின்ற தொனி தெரிகிறது. சுகன், நிலா குகதாசனின் கவிதைகள். . மாத்தயா துரோகி குற்றம் சாட்டப்பட்டது பற்றி லண்டனில் வெளியிடப்பட்ட சுவரொட்டிகளின் புகைப்படங்கள்,(பெரிய புலி புல்லுத் தின்னுது, மாத்தயாவைத் தான் தின்னும். நாம் நேசிப்பது புலிகளையே, பலிகளை அல்ல. கடலில் கிட்டு தியாகி, களத்தில் மாத்தையா துரோகி) சினிமா பற்றி யமுனா ராஜேந்திரன், சந்திரசேகரன் பிணை விவகாரம் என்று பல ஆக்கங்கள். தரமானவை. சுவையானவை. முறிந்த பனையை மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார்கள்.

தொடர்புகளுக்கு: Thagam, P.O.Box 3186, London E17 6TJ. சந்தா விபரம் தெரியவில்லை. இதழ் ஒன்று ஒரு பவுண்ட் என்றிருக்கிறது.

★ ★ ★

# அறு(சு)வை

அதுசரி.. உரசு பத்திரிகை என்னாச்சு. . காணோமே? கனடிய புலம் பெயர்ந்த பத்திரிகை உலகுக்கும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் எவ்வளவு பெரிய இழப்பு! காசுக்கு பத்திரிகை வாங்குகிறார்கள் இல்லை என்று இலவசமாக கொடுக்க புறப்பட்டு, அப்படியும் மக்கள் வாங்குகிறார்கள் இல்லை என்றால்.. உலகத்தமிழர் மாதிரி வீடு வீடாகத் திணிக்கலாமே! இலக்கிய விடயங்களை பழக்க தோசம் காரணமாக வெளியிட்டு, இப்போது வெளியிடுவதே தோசமாகி விட்டது.

★ ★ ★

நக்கீரன் உலகத்தமிழரின் சங்கப்பலகையில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற போலி மனித உரிமை அமைப்பு என்று கூறியிருந்தார். அது சரி.. மனித உரிமை என்பது என்ன என்று இவருக்குத் தெரியுமோ? ஐயன்மீர், அடிப்படை மனித உரிமைகளை மறுக்கின்ற புலிகளுக்கு வக்காலத்து வாங்குகின்ற நீவிர் எல்லாம் பேச வந்திட்டீர். மனித உரிமை என்பது தலைவருக்கு சாமரம் வீசுவதோ, வழிபாடு செய்வதோ அல்ல. அல்லது பக்கம் பக்கமாக எழுதிக் குவிப்பதோ அல்ல. ஒருவேளை மனித உரிமை அமைப்பு என்பது உலத்தமிழர் அமைப்பு என்று கருதிக் கொள்கிறீரோ? முஸ்லிம்கள் வெளியேற்றம், ராஜினி கொலை, செல்வி உட்பட பலர் வதைமுகாமில், வெளிநாடுகளில் பத்திரிகைகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது தாக்குதல்.. இதெல்லாம் என்னவாம்?

★ ★ ★

வரலாறுகளை மாற்றுவதில் சோவியத் சாம்ராஜ்யத்துக்கு இணையானவர்கள் புலிகள் தான். முன்பு விண்வெளி வீரர் ஒருவர் பின்னாளில் சோவியத்துடன் முரண்பட்டு ஒதுக்கப்பட்ட போது, எல்லா விண்வெளி வீரர்களுடன் அவர் எடுத்த படங்களில் எல்லாம் அவரது படம் நவீன முறைப்படி அழிக்கப்பட்டு பிரசுரிக்கப் பட்டிருந்தது. பின்னர் கொர்பியின் காலத்தில் இந்த இரண்டு படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

இதே போல புலிகளும் மாத்தயா என்றொருவர் இயக்கத்தி லிருந்தார் என்பதை மறைக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாமே செய்கிருர்கள். முன்பு உலகத்தமிழரில் கதாநாயகனுக காட்சி தந்த மாத்தயா இன்று மறைக்கப்படுகிருர். இம்முறை உலகத்தமிழரில் கரும்புலி மில்லர் பற்றிய கட்டுரையில் 'பொறுப்பாளரிடமிருந்து தாக்குதல் ஆரம்பிக்கும்படி கட்டளை பிறக்கப்பட்டது' என்றிருக்கிறது. யார் பொறுப்பாளர்? மாத்தயா தான். பெயரைச் சொல்வதில் அப்படி ஒரு சிக்கல்.

★ ★ ★

மாத்தயா மீது எல்லாக் குற்றங்களையும் சுமத்தி இயக்கம் தன் பாவங்களைக் கழுவிக் கொள்ளும் என்ற மாதிரி கியூறியஸ் சொன்னது எவ்வளவு உண்மை. முஸ்லிம்களை வெளியேற்றியது, தாண்டிக்குளத்தில் புளொட்டுடனுன மோதலில் மக்கள் இறந்தது, புலிகளின் கட்சியில் தனது ஆதரவாளர்களை பதவியில் இருத்தியது என்று சகல குற்றங்களுமே... மாத்தயாவின் தலையில் கட்டப்படுகின்றன. என்ன செய்ய? முற்பகல் செய்யின், தெய்வம் நின்றறுக்கும்.

★ ★ ★

காலம் சென்ற துணைவேந்தர் துரைராஜா மரணம் குறித்து செய்திகள்.. நெல்லியடியிலிருந்து சைக்கிளில் பல்கலைக்கழகம் சென்று பணிபுரிந்தவர் அவர். இந்த போர்ச் சூழலிலும் பெரும் பொறுப்புடன் தன் பணியை நிறைவேற்றியவர். அவருக்கு தலைவர் விருது கொடுத்த செய்தி உலகத்தமிழரில் முன்பக்கத்தில் வந்திருந்தது. ரமில கனடியன்ஸிடமிருந்து ஈழம் நிறையக் கற்றிருக்கிறது. இனியென்ன? யாழ். பல்கலைக்கழகம் தலைவருக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கும். தலைவர் டாக்டரானுல்.. என்ன மருந்து கொடுப்பார்? சயனைட் குளிசை!

★ ★ ★

வை.கோ தமிழகத் தேர்தலில் படுதோல்வி.. தேர்தலுக்கு முன்னர் வை.கோவை மாவீரனுய் புகழ்தார்கள். இப்போது உலகத்தமிழர்களே கைவிட்டு விட்டார்கள். புலிகளால் தான் தனக்கு தோல்வி என்று வை. கோவும் உறவை வெட்டிக்கொள்வார். ரஜனி கனடாவில் நிகழ்ச்சி வெற்றி(?) பெற்றதால் திருப்தியடைந்து.... வள, வள, வள..

ரஜனியின் நிகழ்ச்சி தோல்வி பற்றி ஆனந்தவிகடனில்.. வெளிநாடுகளில் கலைநிகழ்ச்சி நடத்தப் போன ரஜனி, எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி அடையாமல் திரும்பி வந்துட்டார். 'வெடிகுண்டு, துப்பாக்கின்னு சொல்லி ரஜனியை யாரோ மிரட்டியிருக்கிருர்கள்'. ரஜனியைக் கூட்டிப் போனது சிலோன்காரர். லண்டனில் ரஜனிக்கு புலித்தனமாக மிரட்டல் விட்டதும் சிலோன்காரர்'.. ஆகா.. வாழ்க ஈழத்தமிழர் நாமம். ஓங்குக அவர் புகழ்.

★ ★ ★

தேமதுரம் வீடியோ பார்த்தேன். அதில் தமிழ் சினிமா பற்றி ஜமுனு ராஜேந்திரன் நிகழ்ச்சி ஒன்று செய்திருக்கிருர். 'குண்டான நடிகைகளுக்குள் திறமை வாய்ந்த குஷ்பு' போன்ற சீரிய ஆய்வுகளை செய்யும் விமர்சகர்களை விட இவ்வாருன ஆய்வுகள் சீரியஸானவை. ஜமுனு ராஜேந்திரன் தாகம், மௌனம் போன்ற ஐரோப்பிய சஞ்சிகைகளில் வெளிநாட்டுத் திரைப்படங்கள் பற்றி நிறையவே அலசிய ஆராய்ந்து எழுதி வருபவர். பிறமொழித் திரைப்படங்களைப் பற்றி நிறையவே தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் பெரும் பங்கு வகிப்பவர். அவரது கட்டுரைகளை கியூறியஸ் தவருது வாசிப்பதுண்டு. டுயட் பாடல்களைப் போட்டுக் காட்டி தமிழ் சினிமா பற்றி சொல்ல முனைபவர்கள் இவரிடம் இருந்து கற்றுக்கொள்ள நிறைய உண்டு. தமிழ் சினிமா பற்றி மட்டுமல்ல, உலக சினிமா பற்றியும் இவர் தேமதுரத்தில் தர வேண்டும். தமிழர்களுக்கு அன்னிய சினிமாவை அறிமுகப்படுத்த வேண்டும்.

★ ★ ★

தேமதுரத்தில் வாழ்த்து வழங்குபவர்களில் ஒருவர் சில்லையூர் செல்வராசன். இவரது கவிதை ஒன்று சுஜாதாவினுல் குமுதத்தில் அட்டைப்படத்தில் வந்ததென்று நினைக்கிறேன்... தான்தோன்றிக் கவிராயர் என்ற பெயரில்.

சில்லையூரார் சொன்ன ஒரு விடயம் எனக்குப் பிடித்திருந்தது.. 'பாரதி பாடினுன்.. சென்றிடுவீர் எட்டுத் திக்கும்... கலைச்செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்று. ஆனுல் எங்கள் ஈழத்தமிழர்கள் எட்டுத் திக்கும் சென்று எங்கள் கலைச் செல்வங்களை கொண்டு

33ம் பக்கம் பார்க்க..

*This newspaper is published by*
*Georgicka communications.*
*A member of*
*Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினுல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
*Georgicka communications*
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!


# அன்ரனி பிறதர்ஸ்

- ★ உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்
- ★ போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள்
- ★ தமிழ்,ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்
- ★ லேசர் இசைத்தட்டுக்கள் மலிவு விலையில்
- ★ தமிழக, இலங்கை வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன்
- ★ முத்திரை, சிகரெட், TTC Tickets, Lottery Tickets

## ANTONY BROTHERS

வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 11 மணி வரை

**1472 Queen St West (Queen/Lansdowne)**
Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள், சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்

**அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள**

SIVA'S TRADING CO LTD

ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

SIVA'S TRADING CO LTD
321-2739

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம், தோசை, அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

அனைத்துப் பொருட்களும் மலிவுவிலையில்

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

P.&T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99